டீ ஷேன் அவர்களின்

# நூதன வைத்திய விளக்கம்

(For the information of the medical profession only.)




**ஜே & ஜே டீஷேன்**
**லாபரட்டரீஸ் (பி) லிட்**
ரெஸிடென்ஸி ரோட், ஹைதராபாத்,
(ஆந்திரபிரதேசம்) இந்தியா.

கிளைகள்
பம்பாய் & டெல்லி
(ஏஜென்சிகன் இந்தியா முழுவதும்)
தந்தி : ஹெர்போமினோ

டீ ஷேன் அவர்களின்

# நூதன வைத்திய விளக்கம்

மூலிகை தாதுவால் ஆன மருந்துகள்

**ஜே. அண்ட். ஜே. டீஷேன்**

**லாபரட்டரீஸ் (பி) லிமிடெட்**

**ரெஸிடென்ஸி ரோட்,**

**ஹைதராபாத், (ஆந்திரபிரதேசம்)**

**இந்தியா.**

J & J DeChane

## அறிமுகம்

மூலிகை தாதுவால் ஆன மருந்துகளுக்கு டீஷேனால், சரிபார்த்து திருத்தியமைக்கப்பட்ட இத்துணைப் புத்தகத்தை அறிமுகப்படுத்துவதில் நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். எங்களால் தயாரிக்கப்பட்ட மூலிகை தாதுக்களால் ஆன மருந்துகள் பலவிதமான மருந்துகளின் சேர்க்கை ஆகும். அவைகள் இடையறாத அரைப்பினால் மிக சிறிய அணுக்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் நாம் கூறும் குறைந்த அளவிலேயே சிறந்த பலனைக் கொடுக்கின்றன. இம்மருந்துகள் நல்ல பலன் தருவதும் விரைவில் செயல்படுவதும் மட்டுமல்லாமல் பிரதிகூல விளைவுகள் சிறிதுமில்லாமல் இருக்கின்றன. நம்நாட்டு மக்களில் பெரும்பான்மையர் விரும்பி வாங்கும் பொருட்டு இம்மருந்துகளின் விலைகள் மிகக் குறைந்த அளவில் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

93 வருடங்களுக்கு முன்பு டீஷேன் கிராமப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணியில் ஈடுபட்டார். அதன் பயனாக இன்று டீஷேன் மருந்துகள் கிராம பகுதிகளிலும் நகர பகுதிகளிலும் பிரசித்தி அடைந்திருக்கின்றன. இத்துணைப் புத்தகமும் மற்றும் இழந்த சுகத்தை மீட்டுதல் என்ற தலைப்பின் கீழ் உள்ள புத்தகமும் இப்பரந்த தேசத்தை முழுவதும் சென்றடையும் பொருட்டு 14 மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.

டாக்டர்கள் கடந்த 93 வருடங்கள் டீஷேனுக்கு கொடுத்த ஆதரவுக்காக மனப்பூர்வமான வந்தனத்தை தெரிவித்துக் கொள்கிறோம். இந்தியா முழுவதிலும், வெளிநாடுகளிலும் கூட டீஷேன் மருந்துகள் கிடைப்பதில் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால், அவர்களை எங்களுக்குத் தயவு செய்து தெரிவிக்க கோருகிறோம். அவர்களுடைய கடிதம் எங்களுக்குக் கிடைத்ததும், அவர்களுக்கு அருகேயுள்ள ஏஜெண்டுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொடுப்பதே எங்களுடைய தலையாய கடமையாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

## பொருளடக்கம்

(மருந்துகளின் பெயர்கள் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டிருக்கின்றன)


பாகம் 1 — நூதன வைத்திய முறையின் நோக்கம்
தற்கால வைத்திய முறையின் சிக்கல்கள்
அறிவின் பெருக்கம், சிகிச்சையின் பிரதான தத்துவங்கள் – தேக சக்தி – சிகிச்சை முறையின் அஸ்திவாரம்.

பாகம் 2 — மருந்துகளின் உபயோகம்
(Materia Medica)
பொது விதிகள் மருந்துகளின் குணவிவரம் (வரிசைக் கிரமமாய்க் Alphabetically) குறிப்பிடப்பட்டிருக்கின்றன)

பாகம் 3 — வியாதிகளின் சிகிச்சை முறைகள் தேக நிலைமையை அனுசரித்து சிகிச்சை செய்வது– பலதரக் கலப்புகள்–சிக்கல்களும் குழப்பங்களும் வியாதிகளின் விவரங்களும் சிகிச்சை முறைகளும் (வரிசைக் கிரமமாய்க் (Alphabetically) குறிக்கப்பட்டிருக்கின்றன)

பாகம் 4 — குறிப்பகராதி (Index)
மருந்துகளின் பெயர்கள் குறிப்பகராதியில் தடித்த எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன.


J & J DeChane

## மருத்துவ விளக்கம்

## முதற்பாகம்

**முன்னுரை :** முக்கியமாக கிராமாந்திரப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு மருத்துவ உதவி அளிப்பது என்ற நோக்கத்துடன் ஜே. அண்ட்.டீஷேன் என்ற ஸ்தாபானம் 1917 ல் ஆரம்பிக்கப்பட்டது.

அநேக கிராமங்கள் மருத்துவ உதவி பெறமுடியாத நிலையிலிருக்கின்றன என்பது எல்லோரும் அறிந்த விஷயம். இந்தியா 5,00,000 க்கும் மேற்பட்ட கிராமங்களைக் கொண்ட நாடு அதன் மொத்த ஜனத் தொகையில் முக்கால் பங்குக்கு மேல் கிராமங்களில் வசிக்கிறார்கள்.

இம்மக்களின் சுகாதாரத்தையும் நலத்தையும் கருதி, நாங்கள் சென்ற 93 வருடங்களாக முயற்சிகள் செய்து, பயனையும் பாதுகாப்பையும் தரக்கூடிய மருந்துகளை குறைந்த விலையில் அளித்திருக்கிறோம்.

நோய் வராமல் தடுப்பதே டீஷேனின் குறிக்கோள் : பொதுவாக நோய் வராமல் தடுப்பதையே நாம் எப்பொழுதும் நம்பியிருக்கிறோம். நம் மக்களுக்கு நல்ல சுகாதாரத்தை அளிப்பதன் மூலம், நம்முடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். அடிக்கடி நோய் வருவதையும் குறைத்து, கண்டிப்பாக நாம் முன்னேறவும் முடியும்.

"இழந்த சுகத்தை மீண்டும் பெறுதல்" என்ற சிறு புத்தகத்தை எல்லோரும் வாசிக்கும்படி நாம் சிபாரிசு செய்கிறோம். போஷணை, வாழ்க்கை இவை சம்பந்தமான சில தவறான அபிப்பிராயங்களை, இச்சிறு புத்தகம் திருத்தும். மேலும் உடல் வன்மை பற்றியும் இப்புத்தகம் விஷேசமாகக் கூறும். இப்புத்தகத்தை வேண்டுவோருக்கு தபால் மூலம் நாம் அனுப்பி வைக்கிறோம்.

அநேக மனிதர்கள், சாதாரண வியாதிகளைப் பற்றிய சிறு உண்மைகளையும் கூட தெரிந்து கொள்ள முடியாமல் தங்களுக்கும் பிறருக்கும் துன்பத்தை உண்டாக்குகிறார்கள். உடனடி சிகிச்சையால் அநேக வியாதிகளைக் குணப்படுத்த முடியும் அல்லது தடுக்கவாவது முடியும். ஆதலால் ஒருவன் தன்னுடைய சுகாதார நிலையைப் பற்றி அறியாதிருத்தல் நல்லதல்ல.

ஒவ்வொரு வியாதிக்கும் ஒவ்வொரு காரணம் உண்டு. ஆனால் அதே வியாதி காணப்பட்டவர்களுக்கெல்லாம் காரணம் அதுவே என்பதல்ல. அதே காரணம் அதே வியாதியைப் பல பேர்களிடத்தும் உண்டு பண்ணும் என்றும், பலபேர்களிடத்தும் காணப்படும் அதே வியாதிக்கு, அதே காரணம் என்றும் சொல்ல முடியாது.

அநேக வியாதிகள் கீழ்க்கண்ட காரணங்களுள், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவைகளாலும் உண்டாகலாம்.



1. தேகத்திற்குப் பொருந்தாத உணவு, அஜீரணம், உணவு செரியாமை, சரியாக மலம் கழியாமை.
2. மூளை, நரம்புக் கோளாறுகள்
3. இரத்த சம்பந்தமான மாறுதல்கள்.

மனது, நரம்பு சம்பந்தமான குழப்பங்களால், அன்னப்பையில் புண் ஏற்படலாம். சுவாச கோசங்களைப் பற்றிய ஷயரோகம் வீட்டுக்கவலையால் ஏற்படலாம். அநேக நாள் பட்ட கேஸ்கள் நரம்புக் கோளாறுகளால் உண்டாகும் மனநோயின் காரணமாக ஏற்படுகின்றன என்பதை அறிந்து கொள்கிறோம்.

அஜீரணத்தால் கண்கள் பாதிக்கப்படலாம். நரம்புக் கோளாறுகளினாலும் கண்கள் பாதிக்கப்படலாம். இரத்த மாறுதல்களும் கண்ணின் நிலையில் மாறுதல்களை உண்டாக்குகின்றன. இதே போல தேகத்திலுள்ள எல்லா உறுப்புகளும் மேலே கூறப்பட்ட காரணங்கள் ஒன்று அல்லது பலவற்றால் பாதிக்கப்படலாம்.

பல் சம்பந்தமான வியாதிகள், அஜீரணம் அல்லது நரம்புக் கோளாறுகளால் அல்லது இரத்த மாறுதல்களால் உண்டாகலாம். ஒரு நோயாளின் தேக நிலையில் ஏற்படும் மாறுதல்களைப் பற்றி அறிவது அவசியமாகும். கண்நோய், கல்லீரல் கோளாறுகள், மலச்சிக்கல், சுவாசப்பை கோளாறு, காதுவலி, பல்வலி, கட்டி இவற்றைத் திருத்த வழக்கமான ஒரு மருந்து உட்புறமோ, வெளிப்புறமோ, தேவை எனினும், சிகிச்சை முடிந்து விட்டதாகக் கருதக் கூடாது. நோயாளியின் உடல் நிலையைக் கவனியாமல் வைத்தியம் செய்தால் பலனும் திருப்திகரமாக இருக்காது.

டீஷேன் மருந்துகளின் அடிப்படையானது நோயைக் குணப்படுத்துவது மட்டுமல்லாமல் நோய்க்கான காரணங்களையும் கவனத்தில் கொண்டு செயல்படும் முறையாகும். அதுவே எங்கள் தொண்டின் வெற்றியின் இரகசியமுமாகும்.

டீஷேன் மருந்துகள், மருந்துகளை மட்டுமல்லாமல், மருத்துவ தத்துவங்களைக் கொண்ட சேர்க்கைகளின் தேவையின் காரணமாக உண்டானவை : எந்த வியாதிக்கும், மாமூல் சிகிச்சை முறை என்பது இல்லை. ஆனால் மாமூல் நிலைமைகளுக்கு ஏற்றவாறு மாமூல் மருந்துகள் உண்டு. பல்வேறு துறைகளிலும் பல்வேறு கோணங்களிலும் இருந்து பல்வேறு நபர்களால் அடைந்த அறிவை அனுசரித்து போவதே எங்கள் கொள்கையாகும்.

எல்லா தத்துவங்களும், தனிப்பட்ட முறையில் சரி எனினும், அவற்றை அப்படியே அப்பட்டமாகத் தழுவுவது தவறாகும். மனிதன் புரிந்து கொள்ள முடியாத ஒரு ஜீவன் ஆவான். ஆதலால்தான் மருந்துகள் மட்டும் அல்லாமல் மருத்துவத் தத்துவங்களையும் கொண்ட சேர்க்கைகளின் தேவை ஏற்படுகிறது. அதைப் பூர்த்தி செய்வதே எங்கள் குறிக்கோள் ஆகும்.



J & J DeChane

டீஷேனின் மூலிகை தாதுவாலான மருந்துகள் ஆயுர்வேதம், ஹோமியோபதி, அல்லோபதிதத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டவை : மேற்கூறிய தத்துவங்களின் பல்வேறு நுணுக்கங்களை நாம் அறிந்திருந்தாலும் அதற்காக நாம் கர்வம் அடையவில்லை.

ஒருவன் செருக்கு அடையாமல் இருக்க வேண்டுமென்றால், அவன் மருத்துவ சாஸ்திரத்தின் எல்லாக் கிளைகளையும் படிக்க வேண்டும். ஒரு அல்லோபதிமருத்துவர் ஒரு வியாதியை தன் சொந்த முறைகளினால் குணப்படுத்துகிறார். ஒரு ஹோமியோபதி மருத்துவர் அதே வியாதியை, நேர் எதிர் முறைகளினாலும் குணப்படுத்துகிறார். ஒரு ஆயுர்வேத மருத்துவர் அதே வியாதியை தன்னுடைய தனிப்பட்ட முறைகளினால் குணப்படுத்துகிறார். இதே மாதிரி யூனானி, நேசுரோபத், சைகோபத் மருத்துவமும் செய்கின்றனர். எல்லோரிடமிருந்தும் கற்றுக் கொள்வதற்கு வணங்குபவனே, ஒரு பெரிய மருத்துவர் ஆவார். அவரவருடைய பொருளாதார நிலைக்கு ஏற்ப பரிகாரங்களைக் கண்டுபிடிக்க உண்மையிலேயே முயற்சிப்பவரே ஒரு மிகப்பெரிய மருத்துவர் கடைசியாக, ஒருவன் மனம் வேலை செய்யும் விதம், சரீரத்தின் குறைபாடுகள், அவனுடைய ஆத்மாவின் தெய்வீக விருப்பம் ஆகியவற்றை ஆராய எவர் பாடுபடுகிறாரோ அவரே ஒரு மிகப் பெரிய மருத்துவர். இம்மூன்றும் வியாதிகளைச் சிகிச்சை செய்வதில் மிக முக்கியமான பங்கை ஏற்றுள்ளன. இவற்றில் ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பை அறியாதவர் நல்ல மருத்துவர் அல்ல.

டீஷேனர்கள் பல வைத்திய முறைகளின் நன்மைகளை கருத்தில் கொண்டு மருந்துகளைத் தயாரித்துள்ளனர். மருத்துவ சாஸ்திரத்தின் பல கிளைகளில் பணிபுரிவோரிடமும், மேல் அதிகாரிகளிடமும் எங்களுக்கு மதிப்பு உண்டு. அவர்களின் அடிப்படையான தத்துவங்களை அறிந்து அவர்களுடன் உடன்பட முயற்சிக்கிறோம். இவ்வாறு கிழக்கத்திய வைத்திய முறைகளையும், மேற்கத்திய வைத்திய முறைகளையும் பிணைத்து ஒரு வைத்திய முறையை நாங்கள் தயாரித்துள்ளோம். இது சம்பூர்ணமான வைத்திய முறை என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் இம்முறையில் பல வைத்திய முறைகளின் நன்மைகளைத் தவிர தீமைகளே கிடையாது.

## ஆயுர்வேதம் ஹோமியோபதி, அலோபதி வைத்தியமுறைகளின் அடிப்படையான கொள்கைகள்

ஆயுர்வதே முறைப்படி மருந்து சரக்குகளை சேர்ந்தார் போல அரைத்தல், மருந்தின் வேகத்தை அதிகரிக்கிறது. இது ஹோமியபதி தத்துவம் அல்ல. ஒரு மருந்துச் சரக்கை அப்படியே கொடுத்தால் என்ன குணம் செய்யுமோ, அதே சரக்கை அரைத்து மிகக் குறைவான அளவில் கொடுத்தால் வெகு சீக்கிரத்தில் அதைவிட பன்மடங்கு அதிகமான குணத்தைச் செய்யும் என்று ஆயுர்வேத நிபுணர்கள் கண்டுள்ளார்கள். ஆதலால், மூலிகைத் தாதுவாலான எங்கள் மருந்துகளை அரைத்து அணுக்களாக்கியுள்ளோம். அவற்றை சிறு அளவில் கொடுத்தால் அவை துரிதமாகவும் ஆழ்ந்தும் வேலை செய்கின்றன.



இந்நூலில் அணுக்களாக்குதல் என்னும் சொல்லை கடந்த 93 வருடங்களாக எந்தப் பொருளில் பயன்படுத்தினோமோ அதே பொருளில் இப்பவும் பயன்படுத்தியுள்ளோம். அதாவது சேர்ந்தாற்போல் அரைப்பதின் மூலம் செம்மையாக தூளாக்கி அணுக்களாக்கப்படுகின்றன.

அணுக்களாக்கப்பட்ட மருந்துகளின் துரிதமான செயலை நிருபிக்க சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. கிரிப்ஸ் வால்ட் சர்வகலாசாலையின் பார்மோகாலஜி பேராசிரியர் டாக்டர் ஸ்கூல்ஸ் என்ற நிபுணர் புளியங்கூடுகளை, வெவ்வேறு வீரியம் கொண்ட பாதர மருந்துகளில் சேர்த்து சோதனை செய்துள்ளார். கடின வீரியத்தால் அணுக்கள் விரைவில் கொல்லப்பட்டன. வீரியம் குறையக் குறைய அணுக்கள் தாமதமாகப் பிறந்தன. மேலும் வீரியம் குறைந்ததில் அணுக்கூறுகள் விரைவில் பெருகி வளர்ந்தன. இதிலிருந்து ஒரு சரக்கை அணு அணுவாகப் பிரித்து, வீரியத்தை பெருக்கிக் கொடுத்தால், தேகத்திற்கு சரியான சக்தியைக் கொடுக்கிறதென்றும், அதே சரக்கைப் பெருமளவில் கொடுத்தால் அது வியாதியை ஓங்கவிடாமல் தேகத்தில் அமுங்கச் செய்து தேக சக்தியை குறைத்து வேறு வியாதிகளை உண்டு பண்ணுகிறது என்று தெரிகிறது.

மேலும் அணு அணுவாகப் பிரிக்கப்பட்ட மருந்துகள், இரைப்பையை அடையுமுன் வாயிலுள்ள சவ்வு போன்ற மெல்லிய தோல் பாகத்தால் உறிஞ்சப்படுகிறது. இவ்வாறாக உச்சநிலைகளில் மருந்துகள், மணிக்கணக்கில் அல்லாமல் சொற்ப நிமிடங்களில் வேலை செய்கின்றன.

நம்முடைய அணு அணுவாகப் பிரிக்கப்பட்ட மருந்துகள் போன்றவற்றை நாக்கின் சவ்வு போன்ற மெல்லிய தோல் பாகத்திலிருந்து, இரத்தத்திற்குள் நேராக உட்கிரகிக்க முடியும் என்பதை நிரூபிக்க எஸ்ஸனைச் சேர்ந்த டாக்டர் மெட்மெண்டல் கீழ்கண்ட சோதனைகளைச் செய்தார்.

அவர் ஒரு நபரின் நாக்கின் மேற்புறத்தை அணு அணுவாகப் பிரிக்கப்பட்ட டிஜிடாலிஸ் (Digitalis) திரவத்தில் தோய்க்கப்பட்ட ஒரு சிறு கண்ணாடிக் கோலால் தொட்டார். சில வினாடிகளுக்குப் பிறகு, கண்காணிக்கும் கருவி இதயத்தின் பாதிப்பை தாக்கல் செய்தது. அடுத்தப்படியாக அணு அணுவாகப் பிரிக்கப்பட்ட மார்பியா (Morphia) வின் ஒரு சொட்டை அதே நபரின் நாக்கில் விழச் செய்தார். இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு இம்மருந்து அவருடைய இரத்தக் குழாயிலிருந்து எடுக்கப்பட்ட இரத்தத்தில் கலந்திருப்பதை நிரூபித்தார்.

ஆதலால், சிறு அளவுகளிலோ, அல்லது தண்ணீரில் கலந்தோ, கொடுக்கப்பட்ட எங்கள் மருந்துகள், வெகு துரிதமாக வேலை செய்வதைக் கண்டு டாக்டர்கள் ஆச்சரியப்படுகின்றார்கள். அரைத்தல் என்பது ஆயுர்வேத வைத்திய முறைக்கு ஒரு தனிப்பட்ட சொல்லாகும். யூனானி வைத்திய முறைக்கும் ஓரளவு இது பொருந்தும். ஆதாவது தாதுக்களையும் உலோகங்களையும் பல மூலிகைகளாக அரைத்து திரவங்களை கஷாயங்களாக ஒன்று சேர்த்தல் என்று பொருள்படும்.



J & J DeChane

ஆயினும், திரவ சேர்க்கைப் பொருள்கள் இரசாயன மாறுதல்கள் அடைய வேண்டியிருக்கும். பவுடர் ரூபத்தில் அவை தங்கள் முழுமையான இயற்கை வலுவை இழக்காமல் இருக்கின்றன. ஒப்பற்ற திறனின் காரணமாக ஆழ்ந்து வேலை செய்து நீடித்திருக்கும் பலன்களை அளிக்கின்றன. ஆயுர்வேத முறை நிபுணர்கள் ஒரு பக்குவமாகாத மருந்தை உபயோகிப்பதால் ஏற்படும் செயலுக்கு முரணாக அதன் அணுக்கள் இயங்கும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இத்தத்துவம் ஹோமியோபதி முறையிலிருந்து Simia Similibus Curantur என்ற கலைச் சொற்களில் மாத்திரம் வித்தியாசப்படுகிறது.

ஆலோபதி முறையாலும் அனுசரிக்கப்பட்ட தத்துவம் இது கடைசி இருமுறைகளும் விஞ்ஞான ரீதியில் அது ஏன் அப்படி என்று கூறுகின்றன. ஆனால் அடிப்படையாக இம்மூன்று முறைகளும் ஒரே தத்துவத்தையும், ஒரே முடிவையும் பின்பற்றுகின்றன.

அலோபதி : அலோபதி முறையில் உள்ள பல பிரசித்தி பெற்ற மருத்துவநிபுணர்கள், மருந்துகளை பெருமளவில் கொடுப்பதன் மூலம் பல பாக்டீரியாக்களை எதிர்க்கும் சக்தி குறைகிறது என்றும், சிறு அளவுகளில் கொடுத்தால் இச்சக்தி அதிகரிக்கிறது என்றும் கருதுகிறார்கள். சிறு அளவுகளில் கொடுக்கப்பட்ட மருந்துகள் தற்காப்புக்கும், குணப்படுத்துவதற்கும் சாதகமாக எதிர் நச்சுக்களை உண்டுபடுத்துகின்றன. மேலும் அவர்கள் ஒரு மருந்தின் அளவை பொருட்படுத்தாமல், தேகத்தினுள் கிரகிக்கப்பட்ட (Ions) அயன்களே முக்கியத்துவம் வாய்ந்தன என்று கருதுகிறார்கள். ஒரு மருந்தை அணு அணுவாகப் பிரித்தல் வேண்டிய (Ions) அயன்களுக்கு சாதகமாகும். சிறுநீரகம் சம்பந்தமான கோளாறுகள் என்ற புத்தகத்தில், டாக்டர் காரோ என்பவர், “ஹோமியோபதியும் அலோபதியும் ஒன்றையொன்று தழுவி பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். இரண்டும் தங்களுடைய திறனின் அளவை சரியாக தெரிந்து கொள்ள வேண்டும். ஒற்றுமையால்தான் எதிர்காலத்தில் வளத்தை உண்டுபடுத்த முடியும்” என்று எழுதியுள்ளார்.

மருத்துவத்தில் ஆத்மசக்தியின் பங்கை நாம் முக்கியமாகக் கூறுகிறோம். முற்றிலும் மருத்துவ சம்மந்தமான விஷயங்களைச் சமாளிப்பதில் ஆத்ம சம்பந்தமாக கேள்விகளை நுழைய விடுவது சரியல்ல என்று சிலர் கூறுகிறார்கள்.

மருத்துவர் ஒரு மனிதனின் சரீரத்தை மட்டும் கவனியாமல் அவன் மனோ நிலைமையையும் கவனிக்க வேண்டும். ஏனெனில் மனது சரீர விஷயத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது. ஆதலால் சரீரத்தை காட்டிலும், மனதிற்கே அதிக கவனம் தேவைப்படுகிறது. ஆனால் மனோநிலைமையோ ஆத்மாவின் ஆரோக்கியத்தைப் பொறுத்திருக்கிறது. ஆதலால் சாரீரம், மனம், ஆத்மா ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டு தங்கள் நலத்திற்காக ஒன்றையொன்று தழுவுகின்றன.



இந்தத் தத்துவத்தைக் கொண்டு தான் டீஷேனின் மூலிகை தாதுவால் ஆன மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஏனெனில் மனிதனை ஒரு முழு அம்சமாகவும், அவனுடைய பல உறுப்புகளை அம்முழு அம்சத்தின் பாகங்களாகவும் நாம் கருதுகிறோம்.

மனிதனின் ஏதோரு பாகத்தில், சுகவீனம் என்று நாம் கருதவில்லை. ஆனால் அம்முழு மனிதனை மனதில் கொண்டு அந்த பாகம் எவ்வாறு பாதிக்கப்பட்டது என்பதை கருதி, சிகிச்சை அளிக்கிறோம்.

உலகத்திலுள்ள ஆராய்ச்சி நிபுணர்களில் கண்டுபிடிப்புகளை அலசும்போது மனிதனின் ஆத்ம சக்திதான் அவனுக்குச் சந்தோசம் அல்லது துக்கம், வெற்றி அல்லது தோல்வி, சுகம் அல்லது சுகவீனம் இவற்றை அளிக்கிறது என்ற அடிப்படைக் கொள்கையை நாம் காண்கிறோம்.

மருத்துவர்கள் நோயாளிக்கு சிகிச்சை அளிக்க வேண்டுமே தவிர, அவனுடைய நோய்க்கு அல்ல என்பது தத்துவம் இதிலிருந்து மருத்துவர் நோயாளியின் சாப்பிடும் முறை, குடிக்கும் முறை, வசிக்கும் முறை, நினைப்பது. செயல்படுவதும் இவற்றையெல்லாம், கருத்தில் கொள்ள வேண்டும் என்று தெரிகிறது. இவையெல்லாம் அவனுடைய வாழ்க்கையின் நோக்கத்தால் பாதிக்கப்படுகின்றன. வாழ்க்கையின் நோக்கம் சரியாகயிருந்தாரொழிய, அவனுடைய எண்ணங்களும் செயல்களும் சரியாக இருக்காது.

ஸைகோதெரபி–மனம், அடுத்தப்படியாக, சரீரம் இவற்றிற்கு சிகிச்சை செய்யும் சாஸ்திரம் : நரம்பு வியாதிகளுக்கு, நோயாளிகளின் ஆத்ம சம்பந்தமான முன்னேற்றமே, சிறந்த பரிகாரம் என்று கூறப்படுகிறது.

விஞ்ஞானஆசிரியரைப் பற்றி ஒன்றுமே அறியாமல் விஞ்ஞானத்தை மட்டும் பயின்ற மருத்துவர்கள் இதை ஸைகோதெரபி (Psychotherapy) எனக் கூறுவர்.

பொதுவாக வியாதிகளை, குறிப்பாக நரம்பு சம்பந்தமான வியாதிகளை, சிகிச்சை செய்வதில், மனோதத்துவ சாஸ்திரத்திற்குப் பெரும்பங்கு உண்டு. மனோதத்துவ சக்திகள் நோயாளியின் கற்பனா சக்திகளைத் திருப்பி, அவனுக்கோ அல்லது அவளுக்கோ ஒரு வியாதிக்குப் பரிகாரம் செய்ய, மருத்துவருக்கு உள்ள திறன் மீது அதிக நம்பிக்கையை உண்டாக்கும். இந்த மட்டில் மனோதத்துவ சாஸ்திரம் கண்டிப்பாக பெரிதும் நன்மை செய்யும். அதற்கு மேல் அது ஒன்றும் செய்ய முடியாது.

ஆத்ம அபிவிருத்தியோ, ஆத்மாவின் தனிப்பட்ட சக்திகளையும் எழுப்புகிறது. இம்மாதிரியான ஆத்ம சக்தியாலும் மருத்துவராலும் அவர் மருந்துகளின் ஒத்துழைப்பாலும் நோயாளி குணமடைகிறான். நோய்களையும், நோயின் பிரதிகூலங்களையும் பொறுமையுடனும், புன்முறுவலுடனும் பொறுத்துக் கொள்கிறான்.



J & J DeChane

வியாதிகளைத் தடுப்பதற்கும், குணப்படுத்துவதற்கும் சில அடிப்படை விஷயங்கள் கல்வி கற்ற ஒவ்வொருவனும், இரண்டு முக்கிய கருத்துகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

1. முதலாவதாக, வாழ்க்கையை மனப்பூர்வமாக ஏற்று நடத்துவது எப்படி என்பது.
2. இரண்டாவதாக தன்னுடையதும், தன்னிடம் ஒப்படைக்கப் பட்டவர்களுடையதுமான ஆரோக்கியத்தை எவ்வாறு பாதுகாப்பது என்பது.

முதலாவது கருத்தை எடுத்துக் கொண்டால் கடவுள் நமது இச்சைப்படி நம்மை சிருஷ்டிக்கவில்லை. சிருஷ்டிகர்த்தா ஏதோ ஒரு நோக்கத்தோடு நம்மை இம்மண்ணுலகத்திற்கு அனுப்பியுள்ளார். அவருடைய நோக்கத்தை அறிந்து, அதைப் பூர்த்தி செய்வதைப் பொறுத்தே நம்முடைய சுக துக்கங்கள் அமைகின்றன. நாம் எதைச் செய்ய வேண்டும். எதைச் செய்யக் கூடாது என்பதை உணராமல் போனால் நாம் அச்சத்தோடு பீதியுடனும், வாழ்க்கையை நடத்த வேண்டிவரும். அதனால் தனக்காவது, பிறருக்காவது ஒரு பயனும் இல்லாமல் ஒரு பாழான வாழ்க்கை வாழ்ந்தவர்கள் ஆவோம்.

கல்வியால் அறிய வேண்டிய இரண்டாவது பொறுப்பு யாதென்றால், ஒவ்வொருவனும் சாதாரண ஆரோக்கிய விதிகளையாவது தெரிந்து கொள்ள வேண்டும். தங்களுடைய சுகவீனத்திற்கு தாங்களே காரணம் அல்ல என்று கூறும் கல்விமான்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்.

உடல் நலத்தைப் பாதுகாக்கும் சாதாரண விதிகளையும் நோய்களுக்கான சிகிச்சை முறைகளையும் நாம் கவனிப்போம். ஆரோக்கியத்தை இழக்கும்போது தான் ஆரோக்கியத்தின் மதிப்பை நாம் உணருகிறோம். ஒரு நோயாளி, தன் தற்போதைய சுகவீனத்திற்கும் பொறுப்பாயினும் அவன், அதற்காக அதைரியப்பட வேண்டாம். அவன் தன் உடல் நலத்தை மீண்டும் நிச்சயமாகப் பெற முடியும். அவன் தவறிய மாதிரி மற்றவர்கள் தவறாமல் இருப்பதற்காவது தற்காப்பு முறைகளை அவன் அறிந்தாக வேண்டும்.

மனித இயல்பில் சர்வசாதாரணமாக ஏற்படும் குறை, கட்டுப்பாடில்லாமை : நம்முடைய இந்திரியங்களில் இச்சைகளுக்கு முடியாது என்று நம்மால் சொல்ல முடியாமற் போனால் அது ஒரு பெரிய பிரச்சனையாகும்.

நாம் நம்முடைய இந்திரியங்களின் ஆதிக்கத்தில் முற்றிலும் உள்ளோம். அவைகளின் இச்சைகளுக்கு முடியாது என்று சொல்ல மாட்டோம். இந்திரியங்கள் இயற்கையின் நன்கொடைகள். ஆதலால் அவை உண்மையிலேயே ஒரு வரப்பிரசாதமாகும். ஆனால் அவகைளைத் தடுக்க முடியாவிட்டால், அவை நம்முடைய பெரும் விரோதி ஆகும். இந்திரியங்கள் ஒவ்வொரு ரூபமும் சுகவீனத்திற்கும், துக்கத்திற்கும், காரணமாகும்.



ஆகையால் உணவையும், குடியையும் கட்டுப்படுத்துதல் அத்தியாவசியமாகும். மனக்கவலையைத் தடுக்க வேண்டும்.

தக்க உடற்பயிற்சியும் அவசியமாகும். வேலை செய்யும் நேரத்தையும் சீர்படுத்த வேண்டும். ஓய்வையும் உறங்குவதையும் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும்.

கடினமாக உழைத்தல், பிறருக்குச் சேவை செய்தல், சுயநலம் பாராட்டாமலிருத்தல், நன்மை செய்தல் இவையெல்லாம் நல்லது. உண்மையிலேயே இவை நல்ல ஆரோக்கியத்திற்கு விதிகள், இவற்றுடன் வைத்திய சாஸ்திர விதிகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

நம்முடைய வருமான அளவிற்குள் வாழ்க்கையை நடத்துவது இன்னும் ஒரு முக்கியமான விதியாகும். அநேக மக்கள் இந்த அடிப்படை விஷயத்தை மறந்து விடுவதால், இதை எடுத்துச் சொல்வதை மூடத்தனமாகக் கருதினும், அதைச் சொல்வதே அத்தியாவசியமாகும். நம் நிலைக்கு அதிகமாக நாமே நம்மைக் கருதுவதால் பல கேடுகள் விளைகின்றன. மூளை வீக்கத்தினால் நம் எண்ணங்களும் வீக்கம் கொண்டு செயல்களும் வீக்கம் அடைகின்றன.

முற்காலத்திய ரிஷிகள் சுகவீனம் ஏற்படுவதற்கான காரணங்களை அறிந்தவர். அடிக்கடி வரவுக்குத் தக்கபடி வாழ வேண்டியதன் அவசியத்தை தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

கடவுளிடத்தில் நம்பிக்கை, மருத்துவரிடத்தில் நம்பிக்கை, மருந்துகளின் மீது நம்பிக்கை, தன்னம்பிக்கை இவை அவசியம் தேவை : நாம் நோயுற்றிருக்கும் போது, மனம் சஞ்சலப்படுகிறது. ஒரு வைத்தியரை விட்டு அடுத்த வைத்தியரிடம் ஓடுகிறோம். ஒரு மருந்தை நிறுத்தி அடுத்த மருந்தைச் சாப்பிடுகிறோம். இது நிலைமையை மேலும் மிக மோசமாக்குகிறது. ஆதலால், மன அமைதி தேவை. எந்த டாக்டரிடம் மருந்து சாப்பிடுகிறோம். அவரிடம் பூர்ண நம்பிக்கை வைக்க வேண்டும். டாக்டரிடம் நம் வியாதி குணமடைவதற்கு அவகாசமும், சந்தர்ப்பமும் அளிக்க வேண்டும். நாட்பட்ட வியாதியை குணப்படுத்துவது தாமதமாகும். ஆனால் பலன் நல்லதாகவும் நிரந்தரமாகவும் இருக்கும். நீடித்த வியாதிகள் அதி சீக்கிரம் குணமாவது. பிறகு ஏமாற்றத்தை விளைவிக்கும்.

விஞ்ஞானயுகத்தில் நாம் வாசிப்பதால், இயற்கை விதிகளை அவமதிக்கலாம் என்று கொள்ளக்கூடாது. எங்கள் புத்தகங்களைக் கொண்டு சிகிச்சை செய்வதானால் வியாதியஸ்தரின் சரீரத் தன்மையையும், வியாதியையும் அறிந்து நோயாளி தவிர்க்க வேண்டிய எண்ணங்கள் செயல்கள் எவை என்பதை எடுத்துச் சொல்வதன் மூலம், மருந்துகள் சரியாக வேலை செய்யும்படி செய்யலாம். மருந்துகளிடம் கட்டுப்பாடுகள் உண்டு என்பதையும் அவைகள் இயற்கைக்கு உதவுகின்றன என்பதையும் மறக்கலாகாது. ஆதலால் இயற்கை விதிகளை நிராகரிக்காமல் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு அவற்றை அனுசரிக்க வேண்டும்.

நாம் விஞ்ஞான காலத்தில் வசிக்கிறோம். ஆனாலும் விஞ்ஞானத்தைப் போற்றும் அதே சமயத்தில் விஞ்ஞானத்திற்குத் தாயாகிய இயற்கை அன்னையே அவமதித்து நடக்கிறோம்.

தாங்கள் உட்கொள்ளும் மருந்துகளே வியாதியைக் குணப்படுத்த போதுமானது என்றும், தாங்கள் அதற்காக எதையுமே செய்ய வேண்டியதில்லை என்றும் மக்கள் தவறாகக் கருதுகிறார்கள். குருட்டுத்தனமாக மருந்துகளை எடுத்துக் கொள்வதால் அவை வியாதியைக் குணப்படுத்தாமல் அவைவிட தீவிரமான வியாதியைக் கிளப்பிவிடும். ஆதலால் வீரியமுள்ள மருந்துகளை ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும். யாதொரு தீங்கும் விளைவிக்காத நமது டீஷேன் மூலிகைத் தாதுவாலான மருந்துகளையும் கூட தவறுலாக உபயோகிக்ககூடாது.

**வியாதியினின்று நம்மைப் பாதுகாப்பது தேவவன்மையே**

தேகவன்மை (Vitality) என்னும் சொல் மிகவும் தவறுதலாக அர்த்தம் கொள்ளப்படுகிறது. அது வைத்தியருக்கு தேக உறுப்புகளின் சரியான வேலை என்று பொருள்படும். பாமர ஜனங்கள் தேகவன்மையும், பலமும் ஒன்று என்று கருதுகிறார்கள். ஒவ்வொருவரும் அதை எவ்வாறு அடைவது என்பதையும் பற்றி தீவிரமாக அறிய ஆவல் கொண்டுள்ளார்கள்.

எது எப்படி இருப்பினும், நாம் தேக வன்மையை, சரீரபலம், மனோ பலம், ஆத்ம சக்தி என மூவகைகளாகப் பிரிக்கலாம்.

மற்ற இரண்டைக் காட்டிலும் மனோ சக்தி இயற்கையாகவே மிகவும் முக்கியமானது. மனம் தான் சரீரத்தை ஆள்கிறது. பலஹீனமானவன் மனோசக்தியால் அதிக காலம் வாழ்கிறான். வலுவுள்ள மனோ சக்தியைப் படைத்த ஒருவன் வலு குன்றிய மனோ சக்தி படைத்தவனைக் காட்டிலும் வியாதியினின்றும் சுலபமாக விடுபடுகிறான். ஆதலால் தான் ஆரோக்கியமான சரீரத்தில் ஆரோக்கியமான மனம் என்ற பழமொழியின் உண்மையை அறிகிறோம்.

ஆத்ம சக்தி படைத்த தேக வன்மையும் மற்றொரு முக்கியமான அம்சமாகும். நம்மால் நன்கு மதிக்கப்படுவர் யார் ? தேக பலமுடையவரல்ல. படித்த மேதாவியல்ல, பணக்காரர் அல்ல, அழகு வாய்ந்தவர் அல்ல. ஆனால் தவறை அறவே ஒழித்து, எது சரியோ, அதைக் கடைப்படிப்பவனே, எவ்வளவு தாழ்ந்த நிலையில் இருந்த போதிலும் நம்மால் நன்கு மதிக்கப்படுபவர் ஆவர். ஆத்ம சக்தியைப் பெறுவதற்கு ஒருவர் சந்நியாசியாக இருக்க வேண்டியதில்லை. நம்மைப் படைத்த இறைவனிடத்தில் இதயத்தைத் திருப்பி, நடப்பதெல்லாம் அவருடைய கட்டளை என்று ஏற்க வேண்டும்.

ஆதலால், மனிதன் கடவுளுக்குக் கீழ்ப்படிந்தால், எல்லா மனிதனுக்குக் கீழ்ப்படியும் என்பது எங்களுடைய நம்பிக்கை. ஆனால், அவன் கடவுளுக்கு மீறி நடந்தால் எல்லாமே அவனை மீறி நடக்கும். மருந்துகளும் குணம் தாராமல் மீறி நடக்கும்.



இழந்து போன சக்தியை மீண்டும் அடைதல் – உணவின் போஷனை, உணவு செரித்தல், மலங்கழித்தல் இவற்றை சரியாக கவனித்தல். நம்முடைய சரீர சுகம் பெரும்பாலும், நாம் வாழ்க்கையை எவ்வாறு சீர்படுத்திக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்திருக்கிறது. முக்கியமாக நாம் வாழ்வது இன்பத்திற்காக அல்ல – பணி செய்வதற்கே. நோயாளிகள் பல நோய்களின் சிக்கலில் அவதிப்பட்டு டாக்டர்களிடம் ஆலோசனைக்கும், சிகிச்சைக்கும் அடிக்கடி வருகிறார்கள். அவர்கள் வற்புறுத்துவது இழந்து போன சக்தியை மீண்டும் அடைய வேண்டுமென்பதே. ஆயினும் அவர்கள் தேக வன்மை என்பது நல்ல ஆரோக்கியத்தின் வரப்பிரசாதம் என்பதையும் நல்ல ஆரோக்கியத்திற்குத் தடங்கலான இடையூறுகளை நீக்கினாலொழிய, தேக வன்மையை ஒரு போதும் பெற முடியாது என்பதையும் மறந்து விடுகிறார்கள்.

நல்ல ஆரோக்கியத்தின் அடிப்படை விதிகள் (போஷணம், ஜீரனம், உணவு செரித்தல்) மூன்றாம் பிரிவில் தேக நிலையை அனுசரித்து சிகிச்சை செய்வது என்ற தலைப்பில் கொடுக்கப்பட்ட விவரங்கள் இவற்றைப் புரிந்து கொள்வதால், தேக வன்மையை திரும்பப் பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதையும் விஞ்ஞானம் மனிதனுக்கு எவ்வாறு உதவி புரிகிறது என்பதையும் முறையே அறிகிறோம்.

போஷணை : நல்ல ஆகார போஷணை என்றால் நாம் சரியான உணவு உண்ண வேண்டும் என்பது. சரியான உணவு என்றால் சுகபோகம் நிறைந்த உணவு (Rich Food) என்பதல்ல. சரீரத்திற்கு உகந்த இயற்கை உணவே சரியான உணவு. ஒருவருக்குச் சத்தாயிருக்கும் மாமிசம், மற்றொருவருக்கு ஏற்புடையதாக இருக்காது. சட்னியையும், சப்பாத்திகளையும் சாப்பிடுபவர், வாத்தையும், ஆமையையும் சாப்பிடுவரைக் காட்டிலும் திட சரீரிகளாக இருக்கிறார்கள்.

சாஸ்திரீய உணவு போஷணையின்படி நம்முடைய உணவின் சத்தை அதிகப்படுத்தலாம். பாலிஷ் செய்யப்பட்ட அரிசிக்கும், ரொட்டிக்கும் அவ்வளவாக உணவுச் சத்து இல்லை. சுகபோகம் நிறைந்த வஸ்துக்கள் நம்முடைய எளிய இரைப்பைக்குப் பளுவாகும் மற்றும் சில வஸ்துக்கள் நமது வருமானத்திற்கு மிஞ்சியதாக இருக்கும். இவ்விஷயத்தில்தான் சாஸ்திரீகம் உதவி அளிக்கிறது. ஒரு தேக்கரண்டி அளவு ஆல்போஸாங்கை (Albo-Sang) தினசரி இரண்டு வேளை சாப்பிட்டு வந்தால் போஷணையின் குறைகளை நீக்கி நல்ல ஆரோக்கியத்தை அளிக்கும்.

ஜீரணம் (Digestion) சரியான ஜீரணமே நல்ல ஆரோக்கியத்திற்கு ஆதாரம். ஜீரணம் நாம் எதைச் சாப்பிடுகிறோம். எப்படிச் சாப்பிடுகிறோம் என்பதைப் பொறுத்தது. நாம் உண்ணும் உணவு நம் உடலுக்கு பொருந்ததாக இருக்கக்கூடும். அல்லது நல்ல உணவையே தவறான முறையிலும் உண்ணக்கூடும். ஆகாரத்தை நன்கு மென்று சாப்பிட வேண்டும். அது பற்களால் கூழ்போல் அரைக்கப்படும் முன் தொண்டைக்குள் செல்லக்கூடாது. ஆகாரத்தை நன்றாக மென்று உண்டால் அளவுக்கு மிஞ்சி உட்கொள்வதைத்



J & J DeChane

தவிர்க்கலாம். கெட்ட பற்களுக்கும், அஜீரணத்திற்கும் சம்பந்தமுண்டு. நல்ல கெட்டியான பற்கள் நல்ல ஜீரணத்தின் விளைவு. ஜீரணக் கோளாறுகள் ஏமாற்றத்தை உண்டுபண்ணும். நன்றாகச் சாப்பிடுகிறவர்கள் (பெரும்பாலும் மிதமிஞ்சி சாப்பிடுகிறவர்கள்) தங்களுக்கு நல்ல ஜீரணம் ஏற்பட்டிருக்கிறது என்று உறுதியாகச் சொல்வார்கள். ஆனால் அவர்கள் மற்றவர்களைக் காட்டிலும் மோசமான அஜீரணத்தால் அவதிப்படுவார்கள். மித மிஞ்சி காப்பி, டீ அருந்துவதாலும், புகைபிடிப்பதாலும் ஜீரணக் கோளாறுகள் உண்டாகின்றன.

**ஆகாரம் ஜீரணமாகித் தேகத்தில் சேர்த்தல் (Assimilation) :**

ஒருவர் நன்றாகச் சாப்பிடலாம். அவருக்கு நல்ல ஜீரணமும் இருக்கலாம். அப்படி இருந்தும் அவர் இளைத்துத் தோன்றுவார். இதற்கு தெரிந்தும் தெரியாததுமான அநேக காரணங்கள் உண்டு. இவை 3 ஆம் பிரிவில் சிகிச்சை முறை என்ற தலைப்பில் விளக்கப்பட்டிருக்கின்றன.

சாதாரண பிரச்சனைகள் : நரம்புக் கோளாறுகள் – இரத்த மாறுதல்கள்

நரம்புக் கோளாறுகள் : நல்ல ஆரோக்கியமும், நரம்பு மண்டலத்தால் ஒழுங்குபடுத்தப்படுகிறது. நமது அபரிமித நாகரீக வாழ்க்கை மூளை நரம்புகளுக்கு அபார வேலையைக் கொடுக்கிறது. குழந்தைகள் கூட நரம்புத் தளர்ச்சியுடன் பிறக்கின்றன. நமது பழக்க வழக்கங்களில் ஒழுங்கு, ஓய்வுள்ள தூக்கம், மன அமைதி இவைகளே நரம்புத் தளர்ச்சிக்கு சிறந்த இயற்கை ஔஷதங்கள் ஆகும். வாழ்க்கை தத்துவ அறிவினால் மட்டுமே சாந்தம் பெறக்கூடும். இன்பத்திற்கோ கீர்த்திக்கோ, பணத்திற்கோ, வாழ்வோமானால், அவைகளே நம்முடைய விரோதிகளாக எப்பொழுதாவது மாறலாம். பணி செய்வதற்கே நாம் வாழ்வோமானால் மானிட வாழ்க்கையின் பொறுப்புகளை அறிந்து அதனை ஆண்மையோடு நடத்த கடவுள் நமக்கு உதவி புரிவார். இதுவே வாழ்க்கையின் வேதாந்தம். ஆனால் வேதாந்தமோ இயற்கையின் உதவியை நாடுகிறது. நரம்புத் தளர்ச்சியை, பாசத்துடனும், பெருந்தன்மையுடனும் அளிக்கப்பட்ட விஞ்ஞான ரீதியான மருத்துவம் மூலம் நாம் குணப்படுத்திக் கொள்ளலாம்.

நரம்புக் கோளாறுகளுக்கு, இயற்கைக் காரணங்களும் அதற்கு மாறான காரணங்களும் உண்டு. அபார மூளை வேலை கடின உழைப்பு, கவலைகள், துக்கங்கள், வாழ்க்கையின் மேடு பள்ளங்கள் முதலியன இயற்கைக் காரணங்கள் ஆகும். வரவிற்கு மிஞ்சிய செலவு, கெட்ட பழக்கங்கள், அதீதமான செயல்கள் முதலியன இயற்கைக்கு மாறுதலான காரணங்கள் இயற்கை விதிகளைத் துண்டிக்கும் எவனும், தண்டனையைப் பெற்றே தீர வேண்டும்.

போஷணை ஜீரணம் மல ஜலம் கழித்தல் ஆகியவை சரியில்லாததால் நரம்பு சம்பந்தமான வியாதிகள் ஏற்படலாம். ஏற்பட்ட தவறை, சரிபடுத்துவதன் மூலம், மேற்கூறிய கஷ்டம் மறைகிறது. ஆனால் நரம்புக் கோளாறுகளோ, ஜீரண சக்தி, உண்ட உணவு செரித்தல், மல ஜலம் கழித்தல் ஆகியவற்றைச் சீர்குலைத்து, இரத்தத்தையும் கெடுத்து விடுகிறது. இது ஒரு விஷச் சுழலும், வைத்தியப் பிரச்சனையும் ஆகும்.



“நவீன மருந்தில் புதிய சிகிச்சை முறை” என்று வர்ணிக்கப்பட்டுள்ள பின்வரும் கூற்று, நரம்பு மண்டலத்திற்கு எல்லா நிலைகளிலும் சிகிச்சை அளிப்பதன் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.. “அநேக வருடங்களுக்கு முன், சாக்ரடிஸ் காட்டுமிராண்டி “த்ராஷியர்கள்”, (Throciars) கிரேக்க நாகரீகத்தைக் காட்டிலும் ஒரு விஷயத்தில் மேம்பாடு அடைந்தவர்கள் என்று தன்னுடைய கிரேக்க மக்களிடம் கூற சேனைப் பணியிலிருந்து வந்தார். அவர்களுக்கு மனதை அகற்றி உடலுக்கு பரிகாரம் அளிக்க முடியாது என்பது தெரியும். முழு விஷயங்களின் அறிவின்மையால், பல வியாதிகளின் சிகிச்சை (Hellas) ஹெல்லஸ் மருத்துவர்களுக்குத் தெரியாததன் காரணம் இதுவே என்று அவர் மேலும் கூறினார்.

**இரத்த மாறுதல்கள்**

எக்காரணத்தாலும் இரத்தம் கெடக்கூடும் என்பதை நாம் பார்த்திருக்கிறோம். கெட்டுப்போன இரத்தத்தால், நரம்புக் கோளாறுகளும், ஜீரணக் கோளாறுகளும் ஏற்படுவதைப் பற்றி விவரித்திருக்கிறோம். அவைகளில் அடியிற்குறிப்பிட்டவை இரண்டும் முக்கியமானவை.

**நாட்பட்ட மலேரியாவால் ஏற்படும் இரத்த மாறுதல்கள்**

இந்தியாவில் இந்த வியாதி ஜனங்களை சூறையாடுகிறது. மலேரியா வியாதி தேசத்தில் பல வருடங்களாகப் பதுங்கி கிடக்கும் என்ற விஷயம் பாமர மக்களுக்கு வெகுவாகத் தெரியாது. மலேரியா 25 நாட்பட்டதனாலும், அல்லது 25 மாதம் ஆனாலும், அது நமது தேகத்தில் இரகசியமாக நாசத்தை விளைவிக்கிறது. அதனால் ஏற்படும் முக்கிய சீர்கேடு ஜீரணக்கோளாறு, சிலரிடம் சுரத்திற்கான அறிகுறிகளைக் காணலாம். மற்றவர்களிடம் சுரமே இருக்காது.

**சரீரத்தில் மேக விஷ சம்பந்தத்தால் ஏற்படும் இரத்த மாறுதல்கள்**

வெள்ளை அல்லது கிரந்தியால் தாக்கப்பட்டவர்கள். சரியான சிகிச்சை எடுத்துக் கொள்ளாவிடில் அதே வியாதியைக் குணப்படுத்துவதற்கு அதிக அல்லலுறவேண்டி வரும். உடலின் பொது ஆரோக்கியமும் சீர் குலையலாம். வைத்திய நிபுணர்கள் அபிப்பிராயப்படி மேக விஷம் தேகத்தில் பல வருடங்கள் தங்கியிருந்து கெடுதல் பண்ணுகிறது. அப்படிப்பட்ட வியாதிக்குள்ளானவர்கள் அதற்காக கடந்த வருடங்களில் சிரமமான சிகிச்சைப் பெற்றிருந்தாலும் பூரணமான இரத்த சுத்திக்காக இன்னும் பல வருடங்கள் பாடுபட வேண்டும். அப்படிப்பட்ட நோயுள்ளவர்கள் வியாதியின் அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரியாத காரணத்தால் வியாதியின்று பூரண குணமடைந்து விட்டதாகக் கருதக்கூடாது. மக்களை பயமுறுத்துவதற்காக நாம் இதைக் கூறவில்லை.

வியாதிகளால் இழந்த ஆரோக்கியத்தை, சீக்கிரமாகவும், நிச்சயமாகவும், நிரந்தரமாகவும் பெற சாஸ்திரம், அனுபவம் இவைகளைக் கொண்ட உபயாங்களைத்தான் கூறுகிறோம்.



J & J DeChane

## மருந்துகளின் உபயோகம் Material Medica

### இரண்டாவது பாகம்

டிஷேன் மூலிகைதாதுவாலான மருந்துகளின் ஒரு வேளை அளவு சிறியது. குறிப்பாகச் சொல்லப்படாத பொழுது ஒரு வேளை மருந்தின் அளவு குழந்தைகளுக்கு ½ முதல் 1 மாத்திரை வரை பெரியோர்களுக்கு 1 முதல் 2 மாத்திரைகள் வரை பொதுவாக மேலே குறிப்பிட்ட குறைந்தபட்ச அளவைத்தான் அனுஷ்டிக்க வேண்டும். ஆயினும் கடின ஜுரம், குடல் நோய் முதலியவற்றிக்கு உடனடி நிவாரணம் அவசியமானதால் அதிகப்பட்ட அளவைக் கொடுக்கலாம்.

ஒரு வேளை மருந்துக்கும் அடுத்த வேளைக்கும் உள்ள இடைவேளி 4 மணி நேரம் ஆகும்; நோயாளி குணமடைந்து வரும்போது, மேற்படி இடைவெளியை அதிகப்படுத்தியும், மருந்தின் அளவைக் குறைத்துக் கொண்டும் வரவேண்டும். இவ்வித ஏற்பாடு இயற்கையின் சக்தியைக் காட்ட ஏதுவாகும்.

**மருந்துகளைக் கொடுப்பதற்கு பயன்படும் காரணிகள்:**

மருந்துகளின் வேலையை சமநிலைப்படுத்தவோ அல்லது துரிதப்படுத்தவோ உதவுகின்றன. இளஞ்சூடான வெந்நீரில் மருந்துகளைக் கொடுத்தால் மருந்துகள் சீக்கிரம் வேலை செய்யும் மார்பு, சுவாஸகோசம் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு ¼ முதல் ½ டீஸ்பூன் தேனில் கரைத்து மருந்தைக் கொடுப்பது நல்லது.

**மருந்து கொடுக்கும் கால அளவு :** வியாதிகளைக் குணப்படுத்தும் மருந்துகளை ஆகாரத்திற்கு 1 மணி முந்தியோ அல்லது 3 மணி பிந்தியோ வயிறு தளர்ந்து காலியாக இருக்கும் போது கொடுக்க வேண்டும். தேகக் கட்டுக்கான மருந்துகளை சாதாரணமாக ஆகாரம் சாப்பிட்ட உடனேயாவது அல்லது திரவ ஆகாரத்துடன் கலந்தாவது கொடுக்க வேண்டும்.

டீஷேன் மருந்துகளுக்கு பத்திய நிபந்தனைகள் எதுவும் கிடையாது. நோயாளிக்கு இதமானதை சாப்பிட்டும். இதமற்றதை விலக்கியும் வரலாம். கடினமான நோய்களில் இலேசான உணவையோ அல்லது கஞ்சி போன்ற திரவ உணவையோ சாப்பிட வேண்டும். ஜீரணக் கோளாறுகளில் சிகிச்சை வெற்றி பெற சரியான உணவையோ அல்லது கஞ்சி போன்ற திரவ உணவையோ சாப்பிட வேண்டம். ஜீரணக் கோளாறுகளில் சிகிச்கையின் வெற்றி, சரியான உணவைப் பொறுத்ததாகும்.

**கலப்பு மருந்துகள் :** டீஷேன் மருந்துகளையும், ஒன்றோடொன்று கலந்து உபயோகிக்கலாம். மருந்துகள் சமயோஜிதமாக நன்கு கலக்கப்பட்டால், பொதுவாக நல்ல பலனைத் தரும். விஷேச தேவைகளுக்கு இரண்டு அல்லது மூன்று மருந்துகளை ஒவ்வொன்றிலும் வேண்டிய அளவு கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ எடுத்துக் கொள்ள வேண்டிய அளவுக்குக் கலந்து கொள்ளலாம்.



மேலும் டீஷேன் மருந்துகளை அரைத்துப் பொடியாக்குதல் வீரியத்தை அதிகரிக்கும். டீஷேன் மருந்துகளை சர்க்கரையோடு சேர்த்து ஹோமியோபதி முறையில் எந்த வீரியத்திற்கு வேண்டுமானாலும் அரைத்துக் கொள்ளலாம். மெடிடாப் (Meditab) ஆல்போ (Albo-Sang) ஸாங் இவற்றை ஹோமியோபதி முறை 3X வீரியத்தில் அரைத்துக் கொடுத்தால் விசேஷ பலனைத் தருகிறது என்று ஒரு அலோபதி மருத்துவர் கூறுகிறார்.

**ஒத்திடம் கொடுத்தலைப்பற்றி :** ஒத்தடம் கொடுத்தால் பழைய காலத்து சிகிச்சை என்று தோன்றலாம். ஆனால் டீஷேன் மருந்துகளுடன், ஒத்தடம் கொடுத்தல், பலனைத் தரும். சில சமயங்களில் அதன் அனுகூலத்தைக் கருதி பயன்படுத்தலாம் உதாரணமாக, கீல்வாதம், மார்பில் சளி, குடல் வலி போன்ற நிலைகளில் ஒத்தடம் கொடுப்பது நல்லது.

டீஷேனின் வெளிப்பிரயோக களிம்புகள் வெளிப்பிரயோக மருந்துகள் உள்ளுக்கு சாப்பிடும் மருந்துகளுக்கு துணையாக இருக்கிறது. வியாதி குணமாவது தேகத்தின் உட்புறமிருந்து வரவேண்டும். வெளிப்புறமிருந்து அல்லது சில சமயங்களில் தொண்டை, காது, முதலியவற்றில் தீடிரென்று வீக்கம், வலி முதலியவை ஏற்பட்டால் அவற்றைக் குணப்படுத்த வெளிப்பிரயோகம் மட்டும் போதுமானது. பொதுவாக உள்ளுக்கு மருந்தும், வெளிப்பிரயோகமும் சேர்ந்தாற்போல் கொடுத்து வரவேண்டும். ஹெர்போ சல்ப் (Herbo Sulph) அல்லது ஹீலிங் டஸ்ட் (Healing Dust) முதலியவைகளை அஞ்சனமாகச் செய்ய, மருந்தின் ஒரு பாகத்துடன் ஏதாவது எண்ணெய் அல்லது வாசலைன் அல்லது நல்ல பலனைத் தர ரிப்பான்டோவை (Ripanto) 5 பாகங்களுடன் கலந்து உபயோகிக்க வேண்டும். குணம் தெரியத் தெரிய மருந்துக் கலப்பின் அளவைக் குறைத்து வரவேண்டும். நுரையீரல் பாதிப்பினால் ஏற்படும் மார்பு வலிகள், தொண்டைக் கோளாறுகள், உள்நாக்கு வளருதல், கீல்வாயு முதலிய வலி உபத்திரவங்களுக்கு ரப்ஸான் (Rubzopn) செஸால் (Chesol) என்று இரண்டும் மிகவும் பயன்படுகின்றன.

டீஷேன் தாது மூலிகா மருந்துகள் கடினமான வியாதிகளிலும் நாட்பட்ட ரோகங்களிலும், துரிதமாக வேலை செய்கின்றன. மருந்து குணம் கொடுக்க ஆரம்பித்து விட்டால், தேகம் இயற்கையில் சொஸ்தமாவதற்கு, சிறிய அளவில் மருந்து கொடுத்தால் போதுமானது.

டீஷேன் தாது மூலிகா மருந்துகளை குறிப்பிட்ட அளவுகளில் கொடுத்தால் எவ்விதக்கேடும் செய்யாது.

விலைகள் மிகவும் குறைவாகவே உள்ளன. ஏனென்றால் பலனைக் கொடுக்கக் கூடியதும், விலை மலிவாகவும் உள்ள மருந்துகளை விரும்பும் இந்தியாவின் ஏழை மக்களுக்கு தேவைப்படும்படி கடந்த 93 வருடங்களுக்கு மேல் நாம் பணி புரிகிறோம்.



J & J DeChane

# மருந்துகளின் குணம்

## ஆகர்க்கோ (Agar-Co)

**சாந்தத்தை உண்டுபடுத்தி இழுப்பை கட்டுப்படுத்தும் மாத்திரை (Sedative and anti convulsant tablets) :**

விளக்கம் : ஆக்ரிகஸ் சிறிய அளவில் மாந்த இழுப்பு, ஹிஸ்டீரியா என்னும் சித்தபிரமை வியாதிகளுக்கு, பெரிதும் பயன்படுகிறது. லிலியம் இடுப்பை பற்றிய அங்கங்களுக்கு மிகவும் சக்தி வாய்ந்த மருந்து, ஆகர்கோ ஹிஸ்டீரியா என்னும் சித்தப்பிரமை வியாதிகளுக்கு பயன்படுகிறது. ஏனென்றால் கருப்பை, சினைப்பைகள் இவற்றின் தன்மை சித்தப்பிரமைக்குரிய அறிகுறிகளை உண்டுபடுத்தலாம். ஆதூரஸா, சாந்தத்தை உண்டுபடுத்தும் பொருள் ஒரு ஒவ்வின்மை, உறுத்துணர்ச்சி, தலைச்சுற்றல் இவற்றைத் தடுக்கிறது.

**அறிகுறிகள் :** பச்சைக் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் காணும் மாந்த இழுப்பு பெண்களிடம் காணக்கூடிய சித்தபிரமை (Hysteria in Women) : சிறுவர்களிடமும் மனிதர்களிடமும் காணப்படும் சித்தப்பிரமை அடையாளங்கள்.

**காக்கைவலிப்பு (Epilepsy)** : வைட்டஸானை பகலிலும், ஆகர்கோவைப் படுக்கும் சமயத்திலும் கொடுக்கவேண்டும். சிகிச்சை தொடரவேண்டும். அடிக்கடி இவ்வலிப்பு வருபவர்களுக்கு வைட்டஸான் அடங்கிய இதே சிகிச்சையை அளிக்கவேண்டும்.

**டோஸ் :** பச்சைக் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் ¼ மாத்திரைப் பொடி செய்து பால் அல்லது தேனுடன் கலந்து கொடுக்க வேண்டும். மற்றவர்களுக்கும் பெரியவர்களுக்கும் : ½ மாத்திரை, உணவுக்கு ½ மணிக்கு முன்பு–தினம் 3 வேளை கொடுக்க வேண்டும்.

**கிடைக்கும் விதம் :** 50 மாத்திரைகள் அடங்கிய புட்டி.

## ஆல்போ ஸாங் (Albo – Sang)

**பலவிதத்திலும் பயனுள்ள மூலிகை தாதுவாலான பவுடரும், மாத்திரைகளும் (Herbo-Mineral Preparation for Multiple therapeutic use).**

**விளக்கம் :** உணவை பலப்படுத்தவும், போஷணைச் சத்துக்காகவும், ஆயுர்வேத மருந்துகளில் உபயோகப்படுத்தும் இந்திய மூலிகைகளும் அத்தியாவசியமான தாதுக்களும் கொண்ட சேர்க்கை.

**அறிகுறிகள் :** அநுபந்தமான (as a supplement) ஊட்டச்சத்து குன்றிய உணவிற்கும், ஜீரணசக்தி குன்றியுள்ளவர்களுக்கும் பயன்படுகிறது.



**பொது பலஹீனத்தில் :** (in general debility) மனோ பலம் இன்மை, திட பலம் இன்மை, முதுமையில் பலஹீனம், ஞாபகசக்தி இன்மை வியாதி அல்லது பிரயாசையின் காரணமாகவோ ஏற்படும் அகால வயது முதிர்வு.

**குழந்தைகளைப் போஷித்தல் :** தாய்ப்பால் புகட்டப்படாத குழந்தைகளுக்கு ஆல்போ ஸாங்கை சுத்தமான பாலில் கலந்து கொடுக்கலாம் ஆல்போ ஸாங் ஆரோக்கியத்தையும், அபிவிருத்தி செய்து எடையையும் அதிகப்படுத்துகிறது.

**வளரும் சிறுவர்களுக்கு (Growing Chhildren) :** வளரும் சிறுவர் சிறுமியர்க்கு தேவைப்படும் தாதுக்களையும் மற்ற போஷணைப் பொருள்களையும் அளிக்கிறது. சரியான உணவின்மையைத் திருத்துகிறது. பசி எடுக்கச் செய்கிறது. மனோ பலம், தேக பலம் இவற்றில் அபிவிருத்தியைச் செய்கிறது. எடையை அதிகரிக்கச் செய்கிறது.

**பால் கொடுக்கும் தாய்மார்கள் (Nursing Mothers) :** கருவுற்றிருக்கும் போது, அதிகமாகத் தேவைப்படும் கால்ஷியம், பாஸ்பரம் போன்ற தாதுக்களையும் அளிக்கிறது. குழந்தைகளுக்குப் பால் கொடுத்தால் உண்டாகும் களைப்பை நீக்கி பால் உற்பத்தியைப் பெருகச் செய்கிறது.

மூளையை உபயோகப்படுத்தி வேலை செய்பவர்கள் (Mental workers) இவர்களுக்கு அதிக வேலையால் ஏற்படும் மனத்தளர்ச்சி தேகக்களைப்பு இவற்றைப் போக்குகிறது.

**வயது சென்றவர்கள் (Elderly Persons):** வயதான காலத்தில் தேகத்தை உறுதி பெறச் செய்து நல்ல ஆரோக்கியத்தை அளிக்கிறது.

**வியாதி வந்த போதும் பின்பும் (illness and convalescence) :** தேகம் கெட்டுப் போனதை மீண்டும் சரிப்படுத்தி பசி எடுக்கச் செய்து ஜீரணச் சக்தியையும் அபிவிருத்தி செய்து நோயாளியை துரிதமாகக் குணமடையச் செய்கிறது.

**இரத்த சோகை (Anaemia):** பலஹீனத்தையும் இரத்த சோகையும் போக்கி நன்றாக பசி எடுக்க செய்து இரத்தம் அபிவிருத்தி அடைய செய்கிறது.

**டோஸ் :** ஆல்போ ஸாங் பவுடர் சிசுக்களுக்கும் சிறுவர்களுக்கும் தகுதியானது. தேநீர், காபி, தயிர், பாயாசம், பழரசம், நீர் ஆகாராம் அல்லது தண்ணீரில் கரைத்து உட்கொள்ளாலாம்.

சிசுக்களுக்கு ¼ டீஸ்பூன் தினம் இரண்டு வேளை
சிறுவர்களுக்கு ½ டீஸ்பூன் தினம் இரண்டு வேளை
பெரியவர்களுக்கு மாத்திரைகளை விரும்பலாம்



J & J DeChane

பெரியவர்களுக்கு 1 அல்லது 2 மாத்திரைகள் தினம் இரண்டு வேளை கொடுக்கலாம். டின்னுடன் வைக்கப்பட்டுள்ள பிரசுரத்தின்படி கொடுக்கலாம்.ர

கிடைக்கும் விதம்: பவுடர் – 200கி. 400கி. டின் 10 மாத்திரைகள் வீதம் 10 அட்டைகள் உள்ள பெட்டி , 300 மாத்திரைகள் உள்ள புட்டி.

## ALBOVIT POWDER

அனைவருக்கும் சத்துக்குறைவை போக்கி ஆரோக்கியத்தை ஏற்படுத்த கூடிய பவுடர் (Complete Suplement for both male & female)

**சேர்மானங்கள்**

| | | |
|---|---|---|
| தண்ணீர் விட்டான் கிழங்கு | - | 40 mg |
| பாதாம் கொட்டை | - | 10 mg |
| பேரிச்சம்பழம் | - | 15 mg |
| குங்குமப்பூ | - | 25 mg |

**விளக்கம் :** சத்துக் குறைவை போக்கி ஆரோக்கியத்தை தரக்கூடிய பவுடர் குறிப்பாக கருவுற்ற பெண்களுக்கும், பால் கொடுக்கும் தாய்மார்களுக்கும் தேவைப்படும் சத்துக்குறைவை போக்கி ஆரோக்கியத்தை ஏற்படுத்த கூடிய பவுடர். கருவுற்றிருக்கும் தாய்மார்களின் குழந்தைகளின் வளர்ச்சிக்கும், பால் கொடுக்கும் தாய்மார்களுக்கும் தேவையான தாதுக்களை அளிக்கிறது. பால் உற்பத்தியை பெருகச் செய்கிறது. தாய்மார்களுக்கு பால் கொடுத்தல் உண்டாகும் களைப்பை போக்கிட இரத்த சோகை பலஹீனத்தையும், இரத்த சோகையையும் போக்கி நன்றாக பசி எடுக்க செய்து இரத்தப் அபிவிருத்தி அடையச் செய்கிறது. வயதானவர்களுக்கும், இரத்த சோகை உள்ளவர்களுக்கும் நல்ல பலனை தருகிறது.

**டோஸ் :** இரண்டு அல்லது மூன்று டீஸ்பூன் பவுடர் ஒரு டம்பளர் பாலுடன் கலந்து இரண்டு வேளைக்கு சாப்பிடவும்.

**கிடைக்கும் வீதம் :** 200 கிராம் கொண்ட டின்.

## அமிக்கிளியா (Amyglia)

### இழுப்பைத்தடுக்கும் மாத்திரைகள் (Anti – Spasmodic Tablets)

**விளக்கம் :** தமனியின் பிகுத் தன்மைக்கும் இருதய வலிக்கும் மிகவும் பயன்படும் மருந்துகளின் சேர்க்கை

**அறிகுறிகள்:** இருதய வலிக்கு இது மிகவும் பயன்படுகிறது. தலைவலிக்கும், அதிக இரத்த அழுத்தத்திற்கும் உடனடியாக நிவாரணம் அளிக்கிறது. வைட்டஸான் தலைவலியைக் கண்டிக்காவிடில்,அமீக்கிளியாவைக்



கொடுக்கவும் கைகால் இழுப்பு, சூதகவலி, ஆஸ்துமா, குத்திருமல் குழந்தைகளின் இழுப்புகள் ஒரு பக்க தலைவலி முதலியனவற்றிற்கு இது பயன்படும் நாக்கின் அடியில் பொடி செய்யப்பட்ட மாத்திரையை வைத்தால் காக்காய் வலிப்பு வராமல் தடுக்கும்.

**டோஸ்:** ½ மாத்திரைகள் – ஒரு நாளைக்கு மூன்று வேளை

**கிடைக்கும் வீதம் :** 50 மாத்திரைகள் கொண்ட புட்டி.

## அராட்டினம் (Auratinum)

**ஸ்திரிகளின் கர்ப்பாசய கோளாறுகளின் வீக்கத்தை கண்டிக்கும் மாத்திரைகள்**
**(Anti – inflammatory tablet for female disorders)**

**விளக்கம் :** கர்ப்பாசய கோளாறுகளுக்கு மாத்திரை வடிவத்தில் சிறந்த மருந்து.

**அறிகுறிகள் :** மாதவிடாய் ஒழுங்காக வராமல் வலியோடு கூடி வருதல் வெள்ளை ஒழுக்கு மாதவிடாய் போதுமான அளவில்லாமலிருப்பது மாதவிடயாய் ஒழுங்காக இல்லாமலிருப்பது, மேலும் நரம்பு வலி, அதிகமாக வியர்வை வருதல், சூதக வலி, தேகத்தின் சீதனம், இவ்விடையாளங்களைக் காட்டும் உணர்ச்சி மிக்க ஸ்திரிகளுக்கு முக்கியமாகப் பயன்படுகிறது.

**டோஸ் :** ½ மாத்திரை முதல் ஒரு மாத்திரை வரை ஒரு நாளைக்கு மூன்று வேளை உணவுக்கு ½ மணி முன்பும் படுக்கப்போகும் போதும்.

**கிடைக்கும் வீதம் :** 50 மாத்திரைகள் கொண்ட புட்டி.

## பயோஸால் (Biosal)

### குழந்தைகள் டானிக் (Paediatric Tonic)

**சேர்மானங்கள்**

சதகுப்பை
திப்பிலி
சடாமாஞ்சில்
கடுக்காய்
சுக்கு
வசம்பு
ரேவல் சின்னி
அதிமதுரம்
ஓமம்
தாளிச பத்திரி



J & J DeChane

**விளக்கம் :** சிசுக்களுக்கும், குழந்தைகளுக்கும் ஏற்பாடு ஜீரண கோளாருகளுக்கு ஒரு நம்பிக்கை வாய்ந்த வீட்டு மருந்து பயோஸால் குழந்தைகள் டானிக் ஆகும்.

**அறிகுறிகள் :** பசியின்மை, புளிப்பு,வயிற்று வலி, அஜீரணம், வாயுப் பொறுமல், வயிற்றுப் போக்கு அமைதியின்மை, பற்கள் முளைக்கும் பொழுது ஏற்படும் நோய்கள், மற்ற ஜீரணக் கோளாறுகள்.

பகலிலும் இரவிலும் தவறாது கொடுத்து வந்தால் நல்லது. பசி ஜீரண அபிவிருத்தி ஆகியவற்றை உண்டாக்கி வயிற்றுப்போக்கைத் தடுக்கும் வியாதியின் போதும் அதற்குப் பிறகும் கொடுத்தால் நல்ல பசி எடுத்து மலச்சிக்கல் இல்லமலும் இருக்கும்.

**டோஸ் :** புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு : ¼ டீஸ்பூன் ஒரு நளைக்கு இரண்டு வேளை. 1/4 மாதக் குழந்தைகளுக்கு ½ டீஸ்பூன் ஒரு நளைக்கு இரண்டு வேளை. 6 மாத முதல் 1 வருட குழந்தைகளுக்கு 1–2 டீஸ்பூன். ஒரு நாளைக்கு இரண்டு வேளை.

**கிடைக்கும் விதம் :** 100 மி.லி கொண்ட புட்டி.

### பிராம்டைன் (Brahamdine)
### கர்ப்பாசய கோளாறுகளுக்கு சிறந்த டானிக் மாத்திரைகள்
### (Uterine tonic tables)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| கிரந்தி தகரம் | 28mg |
| அமுக்கராக் கிழங்கு | 28mg |
| வெண்லோத்ரா | 52mg |
| அசோகப்பட்டை | 52mg |
| பிரம்ம தண்டு | 2mg |
| தண்ணீர் விட்டான் கிழங்கு | 40mg |
| வைபரணப்பட்டை | 26mg |
| அப்ரோமா | 40mg |
| அதிமதுரம் | 14mg |

**விளக்கம் :** கருப்பை சம்பந்தமான வியாதிகளுக்கு ஆயூர்வேத மருந்துகளின் சேர்க்கை டானிக் மாதிரி வேலை செய்கிறது.

**அறிகுறிகள் :** அதிகமான இரத்தம் வருதல் வெள்ளை ஒழுக்கு மாதவிடாய் கோளாறுகள். இரத்தம் வருவது அதிகமானால் சினியம் கோவை பிராம்டைனுடன் சேர்த்து கொடுக்கலாம்.



**டோஸ் :** 1 அல்லது 2 மாத்திரைகள் காலையிலும் மாலையிலும்.
கிடைக்கும் விதம் 1 அட்டைக்கு 10 மாத்திரைகள் கொண்ட 10 பிளிஸ்டர் அட்டைகள்.

### பிராம்டைன் சிரப் (Brahamdine)
### கர்ப்பாசய கோளாறுகளுக்கு சிறந்த டானிக்
### (Uterine tonic)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| கிரந்தி தகரம் | 115mg |
| அமுக்கராக் கிழங்கு | 120mg |
| வெண்லோத்ரா | 140mg |
| அசோகப்பட்டை | 225mg |
| தண்ணீர் விட்டான் கிழங்கு | 155mg |
| வைபரணப்பட்டை | 90mg |
| அப்ரோமா | 80mg |
| அதிமதுரம் | 50mg |
| ஐடா மஞ்சிள் | 45mg |
| கோரைக்கிழங்கு | 75mg |
| இலவங்கப்பட்டை | 20mg |
| சுக்கு | 20mg |
| மர மஞ்சள் | 65mg |

**விளக்கம் :** அதிக இரத்தப்போக்கு, வெள்ளைப்படுதல், ஒழுங்கற்ற மாதவிடாய் கோளாறுகள், மாதவிடாய்க்கு முன்பும் பின்பும் ஏற்படும் தொந்தரவுகள், இரத்த சோகை, அடிவயிற்று வலி, மன உளைச்சல் போன்ற குறைகளை சரி செய்யும்.

**டோஸ் :** 2 அல்லது 3 டீ ஸ்பூன் இரண்டு வேளை 200 மிலி கொண்ட பிளாஸ்டிக் புட்டி.

### செஸால் (Chesol )
### வெளிப் பிரயோகத்திற்கு ஏற்ற எண்ணெய்
### (Embrocation oil for external use )

**சேர்மானங்கள்:**

| | |
|---|---|
| குன்றி மணி | 7.5g |
| மிளகாய் தூள் | 6g |
| கற்றாழை | 5g |
| கடுகு எண்ணெய் | 4.75g |
| வசம்பு | 5g |
| சுக்கு | 3g |
| நேர் வாளம் | 3g |
| குரோசாணி ஓமம் | 0.65g |



J & J DeChane

| | |
|---|---|
| ஓமம் | 1.88g |
| கிராம்புத் தைலம் | 0.63g |
| புதினா தைலம் | 1.25g |
| வனஸ்பதி | Q.S |

**விளக்கம் :** தசை நோய்களுக்கும், வலிகளுக்கும், மார்ச்சளி, ஜலதோசம், முதலியவைகளுக்கும் ஏற்றது.

**பிரயோகிக்கும் முறை :** பிடிப்பும், நோயும் ஏற்பட்ட இடத்தில் இந்த எண்ணெய்யை தேய்க்க வேண்டும். பராங்கைடிஸ் நோய்க்கு, மார்பில் தடவி மெதுவாக தடவி மெதுவாகத் தேய்க்கவும்.

மெல்லிய நுட்பமான சர்மம் உள்ள குழந்தைகளுக்கு முதல் இரண்டொரு பூச்சுகளுக்குப் பிறகு, சாப்பிடக் கூடிய ஒரு தாவர எண்ணெயுடன் கலந்து வீரியத்தைக் குறைத்துக் கொள்ளலாம்

**கிடைக்கும் விதம் :** 50 மி.லி கொண்ட புட்டி
100 மி. லி கொண்ட புட்டி

## சினியம்கோ (Chinium – Co)

## இரத்தப் போக்கைத் தடை செய்ய உதவும் மாத்திரைகள் (Haemostatic Tablets )

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| சீமை சாமந்தி | 46mg |
| ரேவல் சின்னி | 44mg |
| கடுகு ரோகிணி | 24mg |
| மருக்காரை | 3mg |
| லவங்கம் | 12mg |
| நரி புகையிலை | 15mg |
| சீனாக்கார பவுடர் | 3mg |

**விளக்கம் :** அபரிமிதமான இரத்தப் போக்கை நிறுத்த ஆயுர்வேத மருந்துகளின் சேர்க்கை கொண்ட சினியம்கோ ஏற்றது.

**அறிகுறிகள் :** கர்ப்பாசய கோளாறுகளாலோ அல்லது மூல நோய்களாலோ அல்லது மூக்கு, வாய், சீதபேதி மூலமாகவோ கர்ப்பாசயாத்தில் வலியுடன் கூடிய நோய் சினைக் குழல்களில் வலி, அடிவயிற்றில் உண்டாக்கும் வலிகள்.

**டோஸ் :** குழந்தைகள் ¼ முதல் ½ மாத்திரை தினம் 3 வேளை.
பெரியவர்கள் 1 முதல் 2 மாத்திரைகள் தினம் 3 வேளை.



**கிடைக்கும் விதம் :** ஒவ்வொன்றும் 10 மாத்திரைகள் கொண்ட 10 பிளிஸ்டர் அட்டைகள்.

## டாஞ்சின் (Dangine)

## கக்குவான் இருமலை தடுக்கும் மாத்திரைகள் (Antispasmodic tablets for control of whooping cough)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| அம்மான் பச்சரிசி | 49mg |
| காட்டு பாகல் | 30mg |
| ஆடா தொடை | 30mg |
| சீனாக்கார பவுடர் | 14mg |
| எபிட்ரா | 36mg |
| அதிமதுரம் | 7mg |
| அமுக்கராக்கிழங்கு | 3mg |
| சர்ப்பகந்தா | 2mg |
| கிரந்தி தகரம் | 2mg |
| மஞ்சள் | 0.31mg |
| சுக்கு | 0.08mg |
| ஓமம் | 0.11mg |
| நெல்லிக்காய் | 0.04mg |
| மிளகு | 0.04mg |
| சீரகம் | 0.04mg |
| சோம்பு | 0.24mg |

**விளக்கம் :** இருமலுக்கும், முக்கியமாக கொடுராமான இருமலுக்கும், குழந்தைகளின் கக்குவானுக்கும் பயன்படும் படியான சிறந்த மூலிகைகளைக் கொண்டது.

**அறிகுறிகள் :** தாளமுடியாத இருமல் முக்கியமாக கக்குவான் இருமல்.

**டோஸ் :** குழந்தைகளுக்கு ¼ முதல் ½ மாத்திரை வரை 4 மணிக்கு 1 தடவை சிசுக்களுக்கு மாத்திரையைப் பொடி செய்து தேனுடன் கலந்து கொடுக்கலாம்

கடுமையான கேஸ்களில் டோஸ் 2 மணிக்கு ஒரு தடவை கொடுக்கலாம். பொதுவாக வியாதியைத் தடுக்கும் சக்திக்கும். சீக்கிரம் சொஸ்தமாவதற்கும் ஆல்போ ஸாங்கை பாலுடன் கலந்து தினம் 2 வேளை கொடுப்பது நலம்.

**கிடைக்கும் விதம் :** ஒவ்வொன்றிலும் 10 மாத்திரைகள் கொண்ட 10 பிளிஸ்டர் அட்டைகள்



J & J DeChane

## டெஸில் (Decil)

### வலி நிவாரணி மற்றும் ஜுரத்திற்கான மாத்திரைகள் (Analgesic and Antipyretic Tablets)

**அறிகுறிகள் :** தலைவலி, ஒரு பக்கத் தலைவலி பல்வலி, சூதகவலி, தசை, எலும்புக் கூட்டைப் பற்றிய தலைவலி கீல், வாதம், நரம்பு வலி, ஜுரம், இன்புளுயென்சா ஜீரம் ஜலதோசம் இவற்றிற்கு நிவாரணம் அளிக்க.

**டோஸ் :** பெரியவர்கள் 1 முதல் 2 மாத்திரைகள் 4 மணிக்கு 1 தடவை தேவைப்பட்டால். சிறியவர்கள் ¼ முதல் ½ மாத்திரை 4 மணிக்கு 1 தடவை தேவைப்பட்டால். 12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு கொடுக்க கூடாது. வெறும் வயிற்றில் சாப்பிடக்கூடாது.

**கிடைக்கும் வீதம் :** ஒவ்வொன்றிலும் 10 மாத்திரைகள் கொண்ட 10 பிளிஸ்டர் அட்டைகள், 500 மாத்திரைகள் கொண்ட டின்.

## டெஸ்மா (Desma)

### ஆஸ்துமாவைத் தடுக்கும் மாத்திரைகள் (Antiasthmatic tablets)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| ஆடா தொடை | 40mg |
| எபிட்ரா | 130mg |
| அம்மான் பச்சரிசி | 40mg |
| காட்டு பாகல் | 4mg |
| சிறியா நங்கை | 10mg |
| கற்கடக சிங்கி | 49mg |
| கண்டங் கத்திரி | 49mg |
| கிரந்தி தகரம் | 39mg |

**விளக்கம் :** ஆஸ்துமாவுக்கு நிவாரணம் அளிக்கும் ஆயுர்வேத மருந்துகளின் சேர்க்கை, இருமலில் கோழை, கபம், வெளியேற்றவும் பயன்படுகிறது.

**அறிகுறிகள் :** 1. ஆஸ்துமா வராமல் தடுக்க, 2. ஆஸ்துமாவுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்க, 3. நாட்பட்ட இருமல், சுவாசக் குழாயில் ஏற்பட்ட தொற்றுதல் காரணமாகவும் ஜலதோஷம் பிராங்கைடிஸ் ஏற்படுதல்.

**டோஸ் :** பெரியவர்கள் 1 முதல் 2 மாத்திரைகள் ஒரு நாளைக்கு 3 அல்லது 4 தடவைகள். குழந்தைகள் ½ முதல் 1 மாத்திரை ஒரு நாளைக்கு 3 தடவைகள்.

**கிடைக்கும் வீதம் :** ஒவ்வொரு அட்டையிலும் 10 மாத்திரைகள் கொண்ட 10 பிளிஸ்டர் அட்டைகள்.



## டயாஸின் (Diasyn)

### வயிற்றுப்போக்கைத் தடுக்கும் மாத்திரைகள் மற்றும் சிரப் (Anti – Diarrhoeal tablets and Syrup)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| கடுக்காய் | 32mg |
| வில்வம் | 87mg |
| குடசப் பாலை | 66mg |
| மர மஞ்சள் | 88.5mg |
| சீரகம் | 7.7mg |
| காட்டாத்திப் பூ | 9.7mg |
| ஓமம் | 9.7mg |
| ஏழிலைப்பாலை | 7.7mg |

**விளக்கம் :** வயிற்றுப்போக்கிற்கும், சீத பேதிக்கும் நிவாரண அளிக்கும் மருந்துகளின் சேர்க்கை.

**அறிகுறிகள் :** விஷக் கிருமிகளால் தோன்றும் வயிற்றுப் கடுப்பு, வயிற்றுப் போக்கு, பெருங்குடலில் வேக்காடு, சிறு குழந்தைகளுக்குத் தோன்றும் வயிற்றுப் போக்கு.

**டோஸ் :** பெரியவர்கள் 1 முதல் 2 மாத்திரைகள் 4 மணிக்கு 1 தடவை.
சிறியவர்கள் ½ மாத்திரை 4 மணிக்கு தடவை குழந்தைகளுக்கு வைத்திய சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்ட சிரப்பாகவும் கிடைக்கிறது.

**கிடைக்கும் விதம் :** ஒவ்வொரு அட்டையிலும் 10 மாத்திரைகள் கொண்ட 10 பிளிஸ்டர் அட்டைகள். 300 மாத்திரைகள் கொண்ட புட்டி. சிரப் 60 ml கொண்ட பிளாஸ்டிக் புட்டி.

## என்ட்ராப்ஸ் (Entrops)

காது, மூக்கு, தொண்டைக்கு ஏற்ற கிருமி நாசின், வெளிப்பிரயோகத்திற்கு (Local Antiseptic for Ear, Nose, Throat for external use)

**விளக்கம் :** கிருமிகளைக் கொன்று வலியைக் போக்கும் சிறந்த வலி நிவாரணி. காது, மூக்கு, தொண்டை, ஈறுகளில் உபயோகித்தல்

**முக்கிய கவனிப்பு :** கண்களுக்கு உபயோகப்படுத்தக் கூடாது.



J & J DeChane

**அறிகுறிகள் :** மூக்கு, தொண்டை, உபத்திவரங்கள் , தொண்டையில் சதை வளர்ச்சி முன் தொண்டையில் வேக்காடு உள்படி ஈறுவீக்கம், வாயைப் பற்றிய சளிச்சவ்வு, பற்களில் சீழ் வடிதல் காதிலோ அல்லது மூக்கிலோ ஒரு சொட்டாக உபயோகித்தல் வீக்கத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கும், புண்களுக்கும் பூசுதல். சொட்டாக 1 அல்லது 2 சொட்டுகள், 2 அல்லது 3 மணிக்கு ஒரு தடவை.

மருந்திட்டுப்பூசல் : மருந்தில் தேய்க்கப்பட்ட பஞ்சை 4 மணிக்கு 1 தடவை தடவலாம். வெளிச்சம் வராத ஒரு குளிர்ச்சியான இடத்தில் வைக்கவும் உபயோகத்திற்கு முன்பு குலுக்கவும்.

**கிடைக்கும் விதம் :** 50 மி.லி. கொண்ட புட்டி 100 மி.லி. கொண்ட புட்டி

## பெர்ரஸ் புமரேட்
## (Ferrous Fumarate Tablets I.P)

இரும்புச் சத்து குறைந்த இரத்த சோகைக்கு பத்திரமானதும், பயனள்ளதும், மிகவும் சௌகரியமானதுமான மாத்திரைகள் (Safe, effective and the most convenient haematinic for iron deficiency anaemias)

**விளக்கம் :** பெர்ரஸ் ஃபுமரேட் என்பது மிகவும் உறுதியானதும் சுலபமாக செரிக்கக் கூடியதுமான இரும்பு உப்புகளில் ஒன்று. அது மாத்திரை வடிவில் கிடைக்கிறது. ஒவ்வொரு மாத்திரையிலும் 200 மி.கி. பெர்ரஸ் ஃபுமரேட் கெண்டது. அது சுமார் 65 மி.கி. தனிப்பட்ட இரும்புச் சத்துக்குச் சமமானது.

**அறிகுறிகள் :** மூலரோகம் போன்ற நாட்பட்ட இரத்தப் பெருக்கினால் ஏற்படும் அதிக இரத்தப் போக்கினால் ஏற்படும் இரத்த நஷ்டம், கொக்கிப் புழு தொந்தரவு, இரத்தம் உமிழ்தல், உணவில் குறைவான இரும்புச் சத்து இவைகளினால் ஏற்படும் இரத்த சோகை வளரும் குழந்தைகளுக்கும், குறித்த காலத்திற்கு முன்பே பிறந்த குழந்தைகளுக்கும் எடையை அதிகரிக்க முதுமைப் பருவத்திலும் நோய் குணமடைந்த பின்பும், இரத்த நிறமியைப் பாதுகாக்க ஆகிய எல்லா கேஸ்களிலும் இரத்த சோகை ஏற்பட்டதன் மூல காரணத்தைத் திருத்த வேண்டும். இல்லாவிடில் மருந்து நிறுத்தப்பட்டவுடன் நோய் மீண்டும் வரும்.

**டோஸ் :** பெரியவர்கள் 1 முதல் 3 மாத்திரைகள் நாள் ஒன்றுக்கு உணவுக்குப்பின் அல்லது டாக்டர்கள் கூறியபடி. குழந்தைகள் ½ முதல் 1 மாத்திரை வரை உணவுக்குப்பின்.

**காண்ட்ரா இண்டிகேஷன்ஸ் :** 1 குடல் புண்கள் 2 வலி அல்லது வேதனை தாங்க முடியாமை.

**கிடைக்கும் விதம் :** 500 மாத்திரைகள் கொண்ட பிளாஸ்டிக் புட்டி.



## ∴ புளுசன்
## காய்ச்சலுக்கு சக்தி வாய்ந்த பாதுகாப்பான ஆன்டி வைரஸ் மாத்திரைகள் (Effective and Safe Antiviral Tablets)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| துளசி | 150mg |
| நிலவேம்பு | 60mg |
| கடுகுரோகிணி | 50mg |
| வேம்பு | 80mg |
| சீந்தில் | 40mg |
| மஞ்சள் | 30mg |
| வெள்ளைப்பூண்டு | 20mg |
| சுக்கு | 10mg |
| திப்பிலி | 10mg |
| மிளகு | 10mg |

**குணமாகும் வியாதிகள் :** வைரஸினால் வரும் காய்ச்சல் மற்றும் தலைவலி, உடம்பு வலி, அதிகமான சதைவலி, இருமல், ஜலதோஷம் ஆகிய வியாதிகளை சரி செய்யும் மாத்திரைகள்.

**டோஸ் :** 1 அல்லது 2 மாத்திரைகள் இரண்டு வேளை. குழந்தைகள் : ½ அல்லது 1 மாத்திரை வயதை பொறுத்து.

## கேஸ்ட்ரோமோன் (Gastromone)
## வாயுப் பொருமலுக்கும், நரம்பு சம்பந்தமான அஜீரணத்திற்கும், சிகிச்சை செய்ய உதவும் மாத்திரைகள்
## (Tablets for treatment of flatulence and nervous dyspepsia)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| நெல்லிக்காய் | 25mg |
| சோம்பு | 31mg |
| ரேவல் சின்னி | 20mg |
| கடுக்காய் | 15mg |
| கிரந்தி தகரம் | 24mg |
| கொடி வேலி | 20mg |
| தாளிச பத்திரி | 8mg |
| பப்பாளி | 7mg |
| கடுகு ரோகிணி | 5mg |
| காட்டு ஏலக்காய் | 2mg |
| நில வேம்பு | 5mg |



J & J DeChane

| | |
|---|---|
| கொத்துமல்லி | 2mg |
| கரிசாலை | 20mg |
| மஞ்சள் | 22mg |
| சுக்கு | 5mg |
| ஓமம் | 8mg |
| மிளகு | 2.5mg |
| சீரகம் | 2.5mg |
| அமுக்கராக் கிழங்கு | 2.5mg |
| சர்ப்பகந்தி | 1mg |

**அறிகுறிகள் :** ஜீரண மந்தம், வாயுப் பொருமல் நரம்பு சம்பந்தமான அஜீரணம், குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் வயிற்றுப்போக்கு, கல்லீரல் ஒழுங்காக வேலை செய்யாமலிருத்தல், வயிற்றில் புளிப்பு அதிகமாக இருத்தல். புளிப்பு குறைவாக இருத்தல் இரண்டிற்கும் இடையே இருவிதமாக செயல்பட்டு பயன்படுகிறது.

**டோஸ் :** பெரியவர்கள் 1 முதல் 2 மாத்திரைகள் உணவுக்கு 15 நிமிடங்கள் முந்தியோ அல்லது பிந்தியோ.
குழந்தைகள் ¼ முதல் ½ மாத்திரைகள் வரை உணவுக்குசற்று முந்தியோ அல்லது உணவுக்குப் பின் உடனேயோ எடுத்துக் கொள்ள வேண்டும்.

**கிடைக்கும் விதம் :** 100 மாத்திரைகள் கொண்ட புட்டி

## கேஸ்ட்ரோமோன் போர்ட் (GASTROMONE FORTE)
## வாயுப் பொருமலுக்கும் நரம்பு சம்பந்தமான அஜீரணத்திற்கும் சிகிச்சை செய்ய உதவும் மாத்திரைகள்
**(Tablets for treatment of flatulence and nervous dyspepsia)**

**சேர்மானங்கள்**

| | | |
|---|---|---|
| நெல்லிக்காய் | - | 50 mg |
| சோம்பு | - | 52 mg |
| ரேவல் சின்னி | - | 40 mg |
| கடுக்காய் | - | 30 mg |
| கிரத்தி தகரம் | - | 48 mg |
| கொடி வேலி | - | 40 mg |
| தாளிசபத்திரி | - | 16 mg |
| பப்பாளி | - | 14 mg |
| கடுகுரோகினி | - | 10 mg |
| காட்டு ஏலக்காய் | - | 4 mg |
| நிலவேம்பு | - | 10 mg |
| கொத்துமல்லி | - | 4 mg |
| கரிசாலை | - | 40 mg |



| | | |
|---|---|---|
| மஞ்சள் | - | 44 mg |
| சுக்கு | - | 10 mg |
| ஓமம் | - | 16 mg |
| திப்பிலி | - | 10 mg |
| சீரகம் | - | 10 mg |
| அமுக்காரக் கிழங்கு | - | 5 mg |
| மிளகு | - | 10 mg |

**அறிகுறிகள் :** ஜீரணமந்தம் வாயுப்பொருமல் நரம்பு சம்பந்தமான அஜீரணம். குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் வயிற்று போக்கு கல்லீரல் ஒழுங்காக வேலை செய்யாமலிருத்தல் வயிற்றில் புளிப்பு அதிகமாக இருத்தல், புளிப்பு குறைவாக இருத்தல் இரண்டிற்கும் இது இருவிதமாக செயல்பட்டு பயன்படுகிறது.

**டோஸ் :** பெரியவர்கள் 1 மாத்திரை உணவுக்கு முன் 10 அல்லது 20 நிமிடங்கள் முன்பாக அல்லது சாப்பிட்ட பிறகு உடனடியாக எடுத்துக் கொள்ளலாம்.

குழந்தைகள் ¼ அல்லது ½ மாத்திரை வரை உணவுக்கு சற்று முந்தியோ அல்லது உணவுக்குப் பின் உடனேயோ எடுத்துக் கொள்ள வேண்டும்.

**கிடைக்கும் வீதம் :** 60 மாத்திரைகள் கொண்ட புட்டி.

## கிராண்டிகோ (Grandi – Co.)
## இருதய டானிக் மாத்திரைகள்
## (Cradiac Tonic Tablets)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| மருதம் பட்டை | 100mg |
| மூக்கிரட்டை | 120mg |
| அமுக்கராக் கிழங்கு | 87mg |
| குரோசானி ஓமம் | 0.66mg |
| நரிப்புகையிலை | 48.3mg |
| சுக்கு | 15.3mg |

**விளக்கம் :** இருதயத்தில் ஊக்கமளிப்பதற்கும், சிறுநீர் வர்த்தினியாக வேலை செய்வதற்கும் பிரசித்தி பெற்ற ஆயுர்வேத மருந்துகளின் சேர்க்கை.

**அறிகுறிகள் :** வித்தியாசமான இருதயத் துடிப்பு, மூச்சுத் திணறல் இவற்றிற்கு நிவாரணம் அளிக்க இது ஒரு இருதய டானிக்காகும். ஒன்றாகச் சேர்ந்த பலன் இருக்காது. போதையை உண்டு பண்ணாது, இது ஒரு நல்ல சிறுநீர் வர்த்தினி

உடல் வீக்கத்திற்குப் பயன்படுகிறது. இருதயத் துடிப்புக்கும், இருதய சம்பந்தமான ஆஸ்துமாவுக்கும் அடிக்கடி கொடுக்கலாம்.

**டோஸ் :** பெரியவர்கள் 1 முதல் 2 மாத்திரைகள் வரை நாள் 1-க்கு 3 வேளை

**கிடைக்கும் வீதம் :** 100 மாத்திரைகள் கொண்ட புட்டி

## GIGI SYRUP

## முகப்பருக்களுக்கும் தேமலுக்கும் ஏற்ற மருந்து

## (For the Treatment of Acne and Pimples)

**சேர்மானங்கள்**

| | | |
|---|---|---|
| நன்னாரி | - | 210 mg |
| மூச்கிரட்டை | - | 150 mg |
| மஞ்சள் | - | 40 mg |
| நெல்லிக்காய் | - | 20 mg |
| தான்றிக்காய் | - | 20 mg |
| கடுக்காய் | - | 20 mg |
| சரபுங்கை | - | 30 mg |
| நிலவேம்பு | - | 50 mg |
| கரிசாலை | - | 30 mg |
| சோற்றுகற்றாலை | - | 60 mg |
| வேம்பு | - | 70 mg |
| சீந்தில் | - | 90 mg |
| ரோஜா | - | 50 mg |

**உபயோகிக்கும் விதம் :** பெரியவர்களுக்கு இரண்டு டீஸ்பூன் இரண்டு வேளை குழந்தைகளுக்கு ஒரு டீஸ்பூன் இரண்டு வேளை.

**கிடைக்கும் விதம் :** 100 ml கொண்ட பிளாஸ்டிக் புட்டி

## ஹீலிங் டஸ்ட் (Healing Dust )

## கிருமி நாசினி தூவும் பவுடர்

## (Anti – septic Dusting Powder )

**விளக்கம் :** புண்களுக்கும் காயங்களுக்கும் சிறந்த கிருமிநாசினி தூவும் பவுடர்.

**உபயோகிக்கும் விதம் :** தாராளமாக புண்களுக்கும் காயங்களுக்கும் தடவலாம். தேவையானால், மெல்லிய சல்லாத்துணியால் மூடிகட்டு கட்டவேண்டும் காதிலிருந்து வெகுநாட்களாக சீழ் வடிந்துகொண்டிருந்தால்,



இதை இலேசாகத் தடவி பஞ்சை சொருகி மூடி வைக்கவும் காதை 1 அல்லது 2 நாட்களுக்குப் பிறகு சுத்தம் செய்யலாம். இதே மாதிரி இரண்டு தடவை செய்யலாம். மூன்றாவது தடவை அவ்விதம் செய்யும் அவசியம் ஏற்படாது.

**கிடைக்கும் விதம் :** 10.கி. கொண்ட புட்டி,
110 கி. கொண்ட புட்டி

## ஹெமோபிளெக்ஸ் (HEMOPLEX )

## தொற்றுதலைக் கட்டுப்படுத்தும் மாத்திரைகள்

## (Anti – Infective tablets)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| நிலவேம்பு | 40mg |
| அமுக்கராக் கிழங்கு | 40mg |
| பிரம்ம தண்டு | 28mg |
| வெள்ளருக்கு | 32mg |
| நன்னாரி | 60mg |
| கந்தகம் | 2mg |
| காவிக்கல் | 2mg |

**விளக்கம் :** தொற்றுவியாதி வராமல் தடுப்பதன் சிகிச்சைக்காக ஆயுர்வேத மருந்துகள் கொண்ட மாத்திரைகள்.

**அறிகுறிகள் :** வீக்கங்கள்,கீழ்வரும் கட்டிகள், புண்கள், நாள்பட்ட பிராங்கைடிஸ் விஷஜீரங்கள்.

**டோஸ் :** பெரியவர்கள் 1 முதல் 2 மாத்திரைகள் நாள் 1 –க்கு 3 வேளை.

சிறியவர்கள் ¼ முதல் ½ மாத்திரை நாள் 1 க்கு 3 வேளை நோயாளி குணமடைய ஆரம்பித்ததும்.

இடைவெளியைக் கூட்டியும் மருந்தின் அளவைக் குறைத்துக் கொண்டு வரலாம்.

**கிடைக்கும் வீதம் :** 100 மாத்திரைகள் கொண்ட புட்டி.



J & J DeChane

## ஹெர்பிட்டர்ஸ் (HERBITARS)

**முன்பு ஹெர்பல் பிட்டர்ஸ் என்று அழைக்கப்பட்டு வந்தது.**

**கல்லீரல் கோளாறுகளுக்கு மாத்திரைகள்**

**(Tablets for treatments of liver disorders)**

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| மஞ்ச்சிட்டி | 56mg |
| சோம்பு | 31mg |
| நிலவேம்பு | 79mg |
| கரிசாலை | 34mg |
| நிலவாகை | 17mg |
| சிறுநாகப்பூ | 9mg |
| மருதம் பட்டை | 5mg |
| கடுக்காய் | 7mg |
| கொத்துமல்லி | 18mg |
| குக்கில் | 17mg |
| மஞ்சள் | 17mg |
| சுக்கு | 4mg |
| ஓமம் | 6mg |
| நெல்லிக்காய் | 2mg |
| மிளகு | 2mg |
| சீரகம் | 2mg |

**விளக்கம் :** பசியின்மை,மந்தப்பட்ட கல்லீரல், நீடித்த பித்த உ.பாதை, மலச்சிக்கல், இவை உள்ளவர்களுக்கு ஆயுர்வேத மருந்துகள் கலந்த சேர்க்கை.

**அறிகுறிகள்:** கல்லீரலைப் பற்றிய கோளாறுகள் அஜீரணம் வாயுப் பொருமலால் ஏற்படும் அஜீரணம் பசியின்மை மலச்சிக்கல் சளிச் சவ்வின் வேக்காட்டைப் பற்றிய காமாலை பித்த நீர் கோளாறுகள் ஆரம்ப ஈரம் வியாதி: பென்சிலின் வகையாறாவின்காரணமாக கல்லீரல் பாதிக்கப்படுதல் கருத்தடை செய்ய மருந்துகள் மற்ற மருந்துகள் காரணமாக கல்லீரல் பாதிக்கப்படுதல்.

**டோஸ் :** பெரியவர்களுக்கு முதல் வாரத்தில் 2 அல்லது 3 மாத்திரைகள் உணவுக்கு முன் கொடுக்கவும். 2 வது 3 வது வாரங்களில் முக்கிய உணவு முன்பு 1 மாத்திரை தினம் 2 அல்லது 3 வேளை கொடுக்கலாம் 3 வார`கள் சிகிச்சை பெற வேண்டும்.

**குழந்தைகள் :** பெரியவர்களுக்கு கொடுக்கவும் அளவில் பாதி ஹெர்பிட்டர்ஸை தினம் 2 அல்லது 3 வேளை தேவையான காலத்திற்குச் சாப்பிடலாம். போதுமான தண்ணீரை உட்கொள்ள வேண்டும். காமாலைக்கு



கைனோட்டோமைன் உடன் ஹெர்பிட்டர்ஸை கொடுத்தால் மிகவும் நல்லது. மாக்னைனன் உடன் சேர்ந்து சாப்பிட்டால் அஜீரணத்திற்கு நல்லது பித்த உபத்திரம் வயிற்றில் குமட்டல், வாந்தி முதலி கோளாறுகளுக்கு ஹெர்பிட்டர்ஸை வைட்டாஸானுடன் சேர்த்து கொள்ளலாம்.

**கிடைக்கும் வீதம் :** ஒவ்வொன்றும் 10 மாத்திரைகள் கொண்ட 10 பிளிஸ்டர் அட்டைகள்.
250 மாத்திரைகள் கொண்ட புட்டி.
நல்ல மணமுள்ள வைத்திய சாஸ்த்திரப்படி தயாரிக்கப்பட்ட சிரப்பாகவும் **(syrup)** கிடைக்கிறது.

**டோஸ் :** சிரப்பின் டோஸ் 1 அல்லது 2 டிஸ்பூன் தினம் 2 அல்லது 3 வேளை.

**கிடைக்கும் வீதம் :** 100 மி.லி. கொண்ட புட்டி.

## ஹெர்பிட்டர்ஸ் போர்ட் (HERBITARS FORTE)

**கல்லீரல் கோளாறுகளுக்கு ஏற்ற மாத்திரைகள்**

**(Tablets for Treatments of Liver Disorders)**

**சேர்மானங்கள்**

| | | |
|---|---|---|
| மஞ்சிட்டி | - | 90 mg |
| சோம்பு | - | 50 mg |
| நிலவேம்பு | - | 130 mg |
| கரிசாலை | - | 55 mg |
| நிலவகை | - | 30 mg |
| சிறுநாகப்பூ | - | 14 mg |
| மருதம்பட்டை | - | 8 mg |
| கடுக்காய் | - | 11 mg |
| கொத்து மல்லி | - | 28 mg |
| குக்கில் | - | 26 mg |
| மஞ்சள் | - | 26 mg |
| சுக்கு | - | 6 mg |
| ஓமம் | - | 9 mg |
| நெல்லிக்காய் | - | 3 mg |
| மிளகு | - | 2 mg |
| சீரகம் | - | 3 mg |

**விளக்கம் :** பசியின்மை மந்தப்பட்ட கல்லீரல் நீடித்த பித்த உபாதை மலச்சிக்கல் இவை உள்ளவர்களுக்கு ஆயுர்வேத மருந்துகள் கலந்த சேர்க்கை.



J & J DeChane

**அறிகுறிகள் :** கல்லீரல் பற்றிய கோளாறுகள், அஜீரணம் வாயுப் பொருமலால் ஏற்படும் அஜீரணம் பசியின்மை மலச்சிக்கல் சளிச் சவ்வின் வேக்காட்டைப் பற்றிய காமாலை, பித்த நீர் கோளாறுகள், ஆரம்ப ஈரம் வியாதி பென்சிலின் வகையறாவின் காரணமாக கல்லீரல் பாதிக்கப்படுவதால் கருத்தடை செய்யும் மருந்துகள் மற்ற மருந்துகள் காரணமாக கல்லீரல் பாதிக்கப்படுதல்.

**டோஸ் :** பெரியவர்களுக்கு முதல் வாரத்தில் 2 அல்லது 3 மாத்திரைகள் உணவுக்கு முன் கொடுக்கவும் 2வது 3வது வாரங்களில் உணவுக்கு முன்பு 1 மாத்திரை தினம் 2 அல்லது 3 வேளை கொடுக்கலாம்.

குழந்தைகள் பெரியவர்களுக்கு கொடுக்கும் அளவில் பாதி ஹெர்பிட்டர்ஸை தினம் 2 அல்லது 3 வேளை தேவையான காலத்திற்கு சாப்பிடலாம். போதுமான தண்ணீரை உட்கொள்ள வேண்டும். காமாலைக்கு கைனோட்டோமைன் உடன் ஹெர்பிட்டர்ஸை கொடுத்தால் மிகவும் நல்லது. மாக்னைன் உடன் சேர்த்து சாப்பிட்டால் அஜீரணத்திற்கு நல்லது பித்த உபத்திரம் வயிற்றுக் குமட்டல் வாந்தி முதலிய கோளாறுகளுக்கு, ஹெர்பிட்டர்ஸை வைட்டஸானுடன் சேர்த்து உட்கொள்ளலாம்.

**கிடைக்கும் விதம் :** 60 மாத்திரைகள் கொண்ட புட்டி.

## ஹெர்போ சல்ப் (Herbo – Sulph )

### உள்ளுக்குள் எடுத்துக் கொள்ளும் கிருமிநாசினி மாத்திரைகள் (Internal Anti Septic Tablets )

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| மஞ்சள் | 32mg |
| கந்தகம் | 22mg |
| வெள்ளெருக்கு | 40mg |
| கடுக்காய் | 80mg |
| நில வேம்பு | 21.2mg |
| கடுக்காய் | 64.3mg |

**விளக்கம் :** உட்கிருமிகளைப் போக்கவும் நாள்பட்ட எக்ஸிமா சர்ம படைக்கும் தோல்வியாதிகளுக்கும் உபயோகப்படும் தாவர மருந்துகள்.

**டோஸ் :** பெரியவர்கள் 1 அல்லது 2 மாத்திரைகள் தினம் 3 வேளை இந்த மாத்திரையைத் தூளாக்கி 5 பாகம் வாஸலின் கலந்து பாதிக்கப்பட்ட இடத்திற்கு மேல் பூச்சாகத் தடவலாம்.

**கிடைக்கும் வீதம் :** அட்டைக்கு 10 மாத்திரைகள் வீதம் 10 அலுமினிய அட்டைகள் உள்ள பெட்டி அட்டைக்கு 10 மாத்திரைகள் வீதம் 50 பிளிஸ்டர் அட்டைகள் 250 மாத்திரைகள் கொண்ட புட்டி.



## அயோபின் (IOBINE )

### அடிக்கடி ஜலதோஷம் ஏற்படுவதை நிவர்த்திக்க அயோபின் மாத்திரைகள் (Tablets to prevent attacks of common cold)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| வல்லாரை | 44mg |
| நில வேம்பு | 44mg |
| நன்னாரி | 155mg |
| கந்தகம் | 8mg |
| மருதோன்றி | 11mg |
| மலை வேம்பு | 22mg |
| வெள்ளெருக்கு | 62mg |

**விளக்கம் :** அடிக்கடி ஜலதோஷம் வருவதைத் தடுத்து சரீரத்தை பலப்படுத்த ஆயுர்வேத மருந்துகளின் சேர்க்கை மேலும் தொண்டையில் சதை வளர்ச்சிக்கும் தோல் அலர்ஜிகளுக்கும் பயன்படுகிறது.

**அறிகுறிகள் :** அடிக்கடி ஜலதோஷம் வருதல் தொண்டையில் சதை வளர்ச்சி, சர்ம வியாதிகள், கல்லீரல் கோளாறு நாள்பட்ட வியாதியினால் ஏற்படும் பலஹீனத்திற்கு அயோபினுடன் ஆல்போ ஸாங் கொடுத்து வரலாம்.

**டோஸ் :** பெரியவர்கள் 1 மாத்திரை தினம் 3 வேளை
குழந்தைகள் ½ மாத்திரை தினம் 3 வேளை.

**கிடைக்கும் விதம் :** ஒவ்வொன்றிலும் 10 மாத்திரைகள் உள்ள 10 பிளிஸ்டர் அட்டைகள் கொண்ட பெட்டி. 300 மாத்திரைகள் கொண்ட புட்டி.

## அயோபின் போர்ட் (IOBINE FORTE)

### அடிக்கடி ஜலதோஷம் ஏற்படுவதை நிவர்த்திக்க அயாபின் மாத்திரை (Tablets to Preveat attacks of Common Cold)

**சேர்மானங்கள்**

| | | |
|---|---|---|
| வல்லாரை | - | 66 mg |
| நிலவேம்பு | - | 44 mg |
| நன்னாரி | - | 230 mg |
| கந்தகம் | - | 8 mg |
| மருதோன்றி | - | 17 mg |
| மலைவேம்பு | - | 33 mg |
| வெள்ளெருக்கு | - | 70 mg |
| மஞ்சள் | - | 40 mg |



J & J DeChane

**விளக்கம் :** அடிக்கடி ஜலதோஷம் வருவதைத் தடுத்து சரீரத்தை பலப்படுத்த ஆயுர்வேத மருந்துகளின் சேர்க்கை மேலும் தொண்டையில் சதை வளர்ச்சிக்கும் தோல் அலர்ஜிகளுக்கும் பயன்படுகிறது.

**அறிகுறிகள் :** அடிக்கடி ஜலதோஷம் வருதல், தொண்டையில் சதை வளர்ச்சி, சர்ம வியாதிகள் கல்லீரல் கோளாறு நாள்பட்ட வியாதியினால் ஏற்படும் பலஹீனத்திற்கு அயோபினுடன் ஆல்போஸாங் கொடுத்து வரலாம்.

**டோஸ் :** பெரியவர்கள் 1 மாத்திரை தினம் 3 வேளை குழந்தைகள் ½ மாத்திரை தினம் 3 வேளை

**கிடைக்கும் விதம் :** 60 மாத்திரைகள் கொண்ட புட்டி.

## கா.:ப்லின் (Koflyn)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| ஆடாதொடை | 140mg |
| எபிட்ரா | 60mg |
| சிறியா நங்கை | 20mg |
| காட்டுப்பாகல் | 10mg |
| அம்மான் பச்சரிசி | 20mg |
| அதிமதுரம் | 20mg |
| வால் மிளகு | 10mg |
| மருதம் பட்டை | 12.2mg |
| பிரம தண்டு | 4mg |
| மிளகு | 2mg |
| கற்கடகசிங்கி | 40.6 mg |

**விளக்கம்**

இருமல் சிகிச்சைக்காகப் பயன்படும் பிரசித்தி பெற்ற மருந்து. கோழை, கபம் இவற்றை வெளியேற்ற உதவும் ஆயுர்வேத மருந்து. கோழை, கபம் இவற்றை வெளியேற்றி உதவும் ஆயுர்வேத மருந்துகள் அடங்கிய மாத்திரைகள் ஆஸ்துமா, மார்சளி இவற்றின் சிகிச்சையிலும் கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**அறிகுறிகள்**

கடுமையான நாள்பட்ட இருமலுக்கு சிகிச்சை செய்ய உதவுகிறது. கபத்தைத் தளர்த்தி திரவமாக்குகிறது. ஆஸ்துமாவில் இழுப்பைப் போக்கி சாந்தத்தை உண்டுபடுத்தும்.

**டோஸ் :** பெரியவர்கள் 1 முதல் 2 மாத்திரைகள் தினம் 3 வேளை



குழந்தைகள் ¼ முதல் ½ மாத்திரை வரை, வயதுக்குத் தக்கவாறு கொடுக்கலாம்.

**கிடைக்கும் விதம் :** ஒவ்வொன்றிலும் 10 மாத்திரைகள் அடங்கிய 10 பிளிஸ்டர் அட்டைகள் கொண்ட பெட்டி. 300 மாத்திரைகள் அடங்கிய புட்டி.

**சிரப் :** பெரியவர்களுக்கும், சிறுவர்களுக்கும், குழந்தைகளுக்கும் வைத்திய சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்ட சிரப்பாகவும் கிடைக்கிறது.

100மிலி கொண்ட பிளாஸ்டிக் புட்டி.

## கைனோட்டோமைன் (Kynotomine)

### சளியுடன் கூடிய காமாலை உள்பட கல்லீரல் கோளாறுகளுக்கு சிகிச்சை செய்யும் மாத்திரைகள்

**(Tablets treatment of liver disorders including catarrhal Jaundice)**

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| கரிசாலை | 52mg |
| கடக ரோகிணி | 34mg |
| ரேவல் சின்னி | 23mg |
| கந்தகம் | 5mg |
| கடுக்காய் | 11mg |
| மூக்கரட்டை | 50mg |
| மஞ்சிட்டி | 27mg |
| வசம்பு | 7mg |
| நெல்லிக்காய் | 58mg |
| பேய்த்தும்மட்டி | 9mg |
| பீதரோகிணி | 9mg |
| கிராம்பு | 7mg |
| ஜாதிக்காய் | 7mg |

**விளக்கம்**

கல்லீரல் கோளாறுகளின் சிகிச்சைக்கு ஆயுர்வேத மருந்துகளின் கலப்பு.

**கிடைக்கும் விதம் :** ஒவ்வொன்றிலும் 10 மாத்திரைகள் கொண்ட 10 பிளிஸ்டர் அட்டைகள். 250 மாத்திரைகள் கொண்ட புட்டி.

வைத்திய சாஸ்திர முறையில் தயாரிக்கப்பட்ட சிரப் (Syrup) ஆகவும் கிடைக்கிறது. சிரப்பின் டோஸ் 1 முதல் 2 டீஸ்பூன், தினம் 2 முதல் 3 வேளை.

## லிவாக்டின்ஜி

### வயோதிக குறைபாடுகளை சரி செய்யும் மாத்திரைகள்
### (Anti Oxitant Tablets)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| அமுக்ராக் கிழங்கு | 225mg |
| வல்லாரை | 100mg |
| நீர் பிரமி | 125mg |
| சிலா சத்து | 60mg |

வயோதிக முதிர்ச்சியினால் தோன்றும் வயோதிக ஸ்திரத்தன்மை, மறதி, இயலாமை, மன அமுத்தம், மனமாற்றம், தூக்கமின்மை, அசதி உடலுறவில் நாட்டமின்மை ஆகிய குறைகளை போக்கும் மாத்திரைகள்.

**டோஸ் :** 1 அல்லது 2 மாத்திரைகள் காலை மற்றும் மதியம் 30 மாத்திரைகள் கொண்ட பிளாஸ்டிக் புட்டி.

## மாக்னைன் (Magnine)

### புளிப்பை அகற்றவும் இழுப்பைக் கட்டுப்படுத்தவும் பயன்படும் மாத்திரைகள்
### (Antacid-Anti-Spasmadic Tablets)

**விளக்கம் :** குடல் புண்கள், வயிற்றில் அதிக புளிப்பு அஜீரணம்.

**டோஸ் :** பெரியவர்கள் 2 மாத்திரைகள் உணவிற்கு 15 அல்லது 30 நிமிடங்கள் முந்தியோ அல்லது பிந்தியோ நன்றாக மென்று தின்ன வேண்டியது. ஒரு சாப்பாட்டிற்கு இன்னொரு சாப்பாட்டிற்கும் இடையில் வலி உபத்திரவம் ஏற்பட்டால் 1 அல்லது 2 மாத்திரைகள் உட்கொள்ளவும். குழந்தைகள் ஒரு மாத்திரைகள் போதும்.

**கிடைக்கும் விதம் :** ஒவ்வொன்றிலும் 10 மாத்திரைகள் உள்ள 10 பிளிஸ்டர் அட்டைகள் கொண்ட பெட்டி, 500 மாத்திரைகள் கொண்ட டின்.

## மெடிடாப் (Meditab)

### இருமலைக் கண்டிக்கும் மாத்திரைகள்
### (Anti-Cough Tablets)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| காட்டுப்பாகல் | 51mg |
| அம்மான் பச்சரிசி | 27mg |
| பலகறைபற்பம் | 7mg |
| ஆடாதொடை | 63mg |
| வெள்ளைப்பூண்டு | 7mg |



**விளக்கம் :** இருமலைச் சொஸ்தப்படுத்துவதில் பேர்போன ஆயுர்வேத மருந்துகளின் சேர்க்கை.

**அறிகுறிகள் :** நாள்பட்ட இருமல், ஷயரோகத்தில் இருமல் நாள்பட்ட ஆஸ்துமா சம்பந்தமான இருமல்.

**டோஸ்:** 1 மாத்திரை பால் அல்லது தேனில் தினம் 2 அல்லது 3 வேளை கொடுக்கலாம்.

**கிடைக்கும் விதம் :** 20 மாத்திரைகள் கொண்ட புட்டி.

**கவனிப்பு :** நாள்பட்ட இருமலாயிருந்தால் காஃப்லின் உபயோகிக்கலாம். தொந்திரவாக வரும் இருமல் ஆனால் டாஞ்சின், டெஸ்மா இவற்றை மாறி மாறிக் கொடுக்கவும். மார்புக்கு, செஸால் அல்லது ருப்ஸான் தேய்த்து ஒத்தடம் கொடுக்கலாம்.

## பற்பொடி (Medicated Tooth Powder)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| கடுக்காய் | 12gm |
| வாய் விளங்கம் | 1.5gm |
| காட்டாமணக்கு | 2.0gm |
| வேப்பங்காய் | 1.7gm |
| ஓமம் | 1gm |
| உமிக்கரி | 3.4gm |
| கந்தபுரா தைலம் | 1ml |

**விளக்கம் :** இது பயோரியா வியாதிக்கும் பல் ஈர்வீக்கத்திற்கும், கடற் பஞ்சு போன்ற பல் ஈர்களுக்கும் பயன்படும்.

**உபயோகிக்கும் விதம் :** பவுடரை எடுத்து விரலால் பற்களையும், பல் ஈர்க்களையும் தேய்க்கவும், பிறகு அவசியமானால் ப்ரஷை உள்ளும் புறமுமாக உபயோகிக்கலாம். 5 முதல் 10 நிமிடங்கள் வரை வாய் கொப்பளிக்கலாகாது. பவுடரை இரவு படுக்கப் போகுமுன்னும், முதல் தடவையாக காலையிலும் உபயோகிக்க வேண்டும். தவறாமல் உபயோகித்தால், பயோரியாவைக் குணப்படுத்துகிறது. அதிகமாக சீழ் பிடித்திருந்தால் என்டிராப்ஸைத் தடவ வேண்டும். பவுடரால் பற்களையும், ஈர்களையும் தேய்ந்த பிறகு என்டிராப்ஸை காலையிலும் மாலையிலும் உபயோகிக்கலாம்.

**கிடைக்கும் விதம் :** 50 கிராம் கொண்ட புட்டி.



J & J DeChane

## மெர்ஸினா கேப்ஸ்யூல்ஸ்
## (Mersina Capsules)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| சிறு குறிஞ்சான் | 75mg |
| பாகல் | 81mg |
| ஆவாரை | 63mg |
| நாவல் | 96mg |
| நெல்லிக்காய் | 48mg |
| வேம்பு | 30mg |
| வெந்தயம் | 15mg |
| கோவைக்காய் | 93mg |
| சீந்தில் | 63mg |
| எவாச்சாரம் | 12mg |

**விளக்கம் :** இது முற்றிய நீர் இழிவு கேஸ்களின் நிவாரணத்திற்கு பேர் போன இந்திய மூலிகைகள் அடங்கிய மருந்து. இது ஒரு சௌகரியமான சிகிச்சை.

**அறிகுறிகள் :** முற்றிய நீரழிவு கல்லீரல் வேலை நன்றாக அபிவிருத்தி அடைவது உடற் சோர்வையும் கண்டிக்கிறது.

**டோஸ் :** 1 முதல் 2 கேப்ஸ்யூல்ஸ் தினசரி 3 வேளை உணவிற்கு ½ மணிக்கு முன்பு, ஆரம்பத்தில் கூடுதலான டோஸ் தேவைப்படலாம். அதைப் படிப்படியாக, சிறுநீரில் சர்க்கரையை நீக்கப் போதுமான அளவிற்கு, குறைத்துக் கொண்டு வரவேண்டும். நோயாளிக்கு தக்கவாறு டோஸ் வேறுபடும். டாக்டர் சொல்கிற வழக்கமான பத்தியக் கட்டுப்பாடுகளை அனுசரிக்க வேண்டும். சிறுநீரை ஒழுங்காகப் பரிசோதனை செய்து, சிகிச்சை எவ்வளவு பலனை அளித்திருக்கிறது என்பதை அறிய வேண்டும். இரத்தத்திலுள்ள சர்க்கரையின் அளவையும் அவ்வப்போது கவனிக்க வேண்டும். இந்த கேப்சூலை இன்சுலின் ஊசி போட்டுக் கொள்கிறவர்களுக்கும் கொடுக்கலாம். அடிக்கடி சிறுநீர் பரிசோதனை செய்து வருவதால், இன்சுலின் ஊசி போட்டுக் கொள்வதை குறைத்தோ அல்லது நிறுத்தவும் செய்யலாம். மெர்ஸினா, குழந்தைகளுக்கு சிறு வயதில் ஏற்படும் நீரிழிவு வியாதிகளுக்குப் பயன்படாது. கீடோஸிஸ் சிகிச்சை முறையிலும் ராஜப் பிளவையுடன் கூடிய நீரிழிவுக்கும் இரத்தத்தில் அளவுக்கு மீறி சர்க்கரைப் பொருள் இருத்தலால் உண்டாகும் வியாதியின் கடுமைக்கும் மெர்ஸினா பயன்படாது.

**கிடைக்கும் விதம் :** 5 x 10 கேப்ஸ்யூல்ஸ் கொண்ட அட்டை பெட்டி.



## நிவாஸ் (Nevoss)
### நரம்பு பலஹீனம், கவலை இவற்றின் சிகிச்சைக்கான மாத்திரைகள்
### (Tablets for treatement of Nervous Weakness and Anxiety )

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| அமுக்கராக் கிழங்கு | 60mg |
| ஜாதிக்காய் | 0.5mg |
| குரோசாணி ஓமம் | 20mg |
| அதிமதுரம் | 45mg |
| நெருஞ்சில் | 80mg |

**விளக்கம் :** நரம்பு முறிவுக்கும், நரம்புத் தளர்ச்சியின் பல்வேறு ரூபங்களும் பயன்தரும் ஆயுர்வேத மருந்துகளின் சேர்க்கை.

**அறிகுறிகள் :** நரம்பு பலஹீனத்தில் பல வகைகள் கவலை அடிக்கடி சிறுநீர் பிரிதல், இரைப்பைக் குடல் கசிவு, தன்னை அறியாமல் உடலில் ஏற்படும் நடுக்கங்கள், சரீரத்திலோ அல்லது மூளையிலே அளவுக்கு மிஞ்சிய வேலையால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சி, சக்தியின்மை, சொப்பனஸ்கலிதம், சிற்றின்பத்தில் அளவுக்கு மிஞ்சிய இச்சை அதிகமாக வியர்வை வெளிவருவதல் ஆகியன. மூளையினால் செய்யப்பட்ட வேண்டிய வேலைகள் இம்மருந்தை உட்கொள்வதினால் தாமதப்படுவதில்லை இம்மருந்து மனக்குழப்பத்தையும் கொடுப்பதில்லை.

**டோஸ் :** பெரியவர்கள் 1 முதல் 2 மாத்திரை 3 அல்லது 4 மணிக்கு 1 தடவை பாலுடன் எடுத்தக் கொள்வது சிறந்தது. சிறியவர்கள் ¼ முதல் ½ மாத்திரை 4 மணிக்கு ஒரு தடவை.

**கிடைக்கும் விதம் :** 60 மாத்திரைகள் கொண்ட புட்டி.

## ஓலோஸின் ( Olosyn )
### வெளிப்பிரயோகத்திற்கு உபயோகிக்கப்படும் எண்ணெய்
### (Oil for External Application)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| கரிசாலை | 0.66g |
| மலைவேம்பு | 0.66g |
| கழற்ச்சிக்காய் | 0.66g |
| வல்லாரை | 0.66g |
| வெந்தயம் | 22g |
| ஊமத்தை | 1.32g |



J & J DeChane

| | |
|---|---|
| நெல்லிக்காய் | 3.33g |
| வனஸ்பதி | Q.S |

**விளக்கம் :** நரம்பு மண்டலத்தின் அகத்திற்காக தாவர எண்ணெயிலுள்ள ஆயுர்வேத மூலிகைகளின் சாரம் ( வெளிப்பிரயோகத்திற்கு மட்டும்.)

**அறிகுறிகள் :** 5 மதல் 10 பங்கு வரையுள்ள எந்த தாவர எண்ணெயிலாவது, ஒரு பங்கு ஒலோசினைக் கலந்து ஸ்நானத்திற்கு முன்பு தேகத்தில் தேய்த்துக் கொள்ளலாம். கூந்தல் தைலமாகவும் பயன்படுகிறது. இரவு படுப்பதற்கு 1 மணிக்கு முன்பு, ஒலோசினைத் தலை உச்சியில் நன்றாகத் தேய்த்தால் சுகமான தூக்கம் வரும். தலைவலியையும் போக்கி சுகத்தை அளிக்கிறது. கேச வளர்ச்சிக்கு டானிக்காக இயங்குகிறது. மயிர் உதிர்வதைத் தடுக்கவும், ஓலோஸினை உபயோகிக்கலாம். ஓலோஸின், வலிப்பு நோய், சித்தப்பிரமை, நரம்பு பலஹீனம் இவற்றிற்கு பயன்படுகிறது. செவிப்பறை சரியில்லையென்றால் தலைக்கு ஓலோஸினைத் தேய்ப்பதோடு, தினமும் காதில் இரண்டு துளிகள். ஓலோஸினை விட்டால் நல்ல பலனைத் தரும்.

**கிடைக்கும் விதம் :** 50 மி.லி. கொண்ட புட்டி.
100 மி.லி. கொண்ட புட்டி.

## ராஸ்ஜெண்ட் (Rasgent)
## கண் மருந்து (Eye Drops)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| ரசகற்பூரம் | 1.1g |
| சீனாக்காரப்பவுடர் (உமிக்கரி) | 1.1g |
| நாமக்கட்டி | 3.4g |

**விளக்கம் :** கண் பார்வை மங்கலுக்கும், கண் வீக்கங்களுக்கும் ஒரு இதமான மருந்து.

**உபயோகிக்கும் விதம் :** ஒரு டீஸ்பூன் கொதிக்கக் காய்ச்சி ஆறிய வெந்நீரில் 1 அல்லது 2 கிரேயின் மருந்தைப் போட்டுக் கரைத்து இரண்டு கண்களிலும் கொஞ்சம் துளிகள் ஊற்றி விடவும். ஒரு கண் பாதிக்கப்பட்டிருந்தாலும் கூட, இரண்டு கண்களிலும் மருந்து போடுவது அவசியம். இரண்டு கண்களுக்கும் ஒன்றுக்கொன்றுள்ள சம்பந்தத்தை முறிக்காமல் இருப்பதற்காக இவ்வாறு செய்ய வேண்டும். இரவு படுப்பதற்கு முன் தினம் 2 அல்லது 3 வேளை மருந்து போடலாம்.

**கிடைக்கும் விதம் :** 10 கிராம் கொண்ட புட்டி



## ரீமோரின்கேப்ஸ்யூல்ஸ்
## (Remorin capsules)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| குக்குலு | 100mg |
| நெல்லிக்காய் | 3.7mg |
| சோற்றுப்பு | 3.7mg |
| பொட்டில் உப்பு | 3.7mg |
| கடுக்காய் | 3.7mg |
| தான்றிக்காய் | 3.7mg |
| சுக்கு | 3.7mg |
| மிளகு | 3.7mg |
| திப்பிலி | 3.7mg |
| யானைத்திப்பிலி | 3.7mg |
| வாய் விளங்கம் | 3.7mg |
| சீரகம் | 3.7mg |
| கருஞ்சீரகம் | 3.7mg |
| வால்மிளகு | 3.7mg |
| பேரரத்தை | 3.7mg |
| நொச்சி | 3.7mg |
| கொத்துமல்லி | 3.7mg |
| கோப்ரா சல்லா | 3.7mg |
| கடுகு ரோகிணி | 3.7mg |
| கோரைக் கிழங்கு | 3.7mg |
| ஏலக்காய் | 3.7mg |
| நெருஞ்சில் | 3.7mg |
| ஓர் வகை உப்பு | 3.7mg |
| வசம்பு | 3.7mg |
| வெட்பாலை | 3.7mg |
| ஓமம் | 3.7mg |
| அதிவிடயம் | 3.7mg |
| அருவதா | 3.7mg |

**விளக்கம் :** மூட்டுகளின் வீக்கத்தைக் குறைத்து வலியை நீக்கி தசைகள் சுருக்கத்தை கட்டுப்படுத்துகிறது. இதிலுள்ள குக்குலு இரத்தத்திலுள்ள கொழுப்பையும் கட்டுப்படுத்துகிறது. எனவே ரீமோரின் இரத்தவாதம் ஆம வாதம், முதுகுத்தண்டு வீக்கம், வலி எல்லாவற்றிலும் மிகவும் உறுதியாக வேலை செய்கிறது. வெளிப்பிரயோகத்திற்கு ரீமோரின் ஆயிலாகவும் கிடைக்கிறது.

**டோஸ் :** முதல் 15 நாட்களுக்கு 2 கேப்ஸ்யூல்ஸ் வீதம் 3 வேளையும், பின்னர் நோயின் தன்மையை அனுசரித்து 1 வீதம் 3 வேளை, குறைந்தது 3 மாதம் வரை கொடுக்கலாம். மிகவும் பலஹீனமான சக்தி குறைந்தவர்களுக்கு டோஸ்



J & J DeChane

குறைத்து கொடுக்கலாம். கர்ப்பகாலத்தும், பாலூட்டும் காலத்தும், வயிற்றுப்போக்கு சமயத்தும் ரீமோரின் கொடுப்பதை தவிர்க்கவும்.

**கிடைக்கும் விதம் :** 10 கேப்ஸ்யூல்கள் வீதம் 3 பிளிஸ்டர் அட்டைகள் கொண்ட பெட்டி.
ரீமோரின் ஆயில் 30மிலி, 50மிலி, 100மிலி கொண்ட பிளாஸ்டிக் புட்டி.

### ரிப்பான்டோ (Ripanto)
### நெருப்புச் சுட்ட புண்கள், எக்ஸிமா, சர்மப்படைகளுக்கு வெளிப்பிரயோகக் களிம்பு
### (Ointment for burn and Eczema)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| ஆளிவித்து எண்ணெய் | 33.66g |
| நல்லெண்ணெய் | 8.8g |
| தேன்மெழுகில் | - |

**விளக்கம் :** நெருப்புச்சுட்ட புண்கள், வெந்த புண்கள் எக்ஸிமா சர்மபடை, புண்கள் இவைகளுக்கு இதமான வெளிப்பிரயோக் களிம்பு.

**உபயோகிக்கும் விதம் :** சுட்ட புண்களுக்கும், வெந்த புண்களுக்கும், பாதிக்கப்பட்ட பாகங்களில் தாராளாமாகத் தேய்க்கவும் வலியையும், எரிச்சலையும் போக்கி இதத்தை அளிக்கிறது. காலையிலும், இரவிலும் குணம் ஏற்படும் வரைக்கும் தேய்க்க வேண்டும். பிறகு கட்டுக் கட்டி அப்பாகங்களை மூடி வைத்துக் கொள்ள வேண்டும். புண்கள், எக்ஸிமா சர்மபடை படுக்கைப் புண்கள் இவற்றை வெந்நீரில் கழுவி மெல்லிய துணியால் துடைத்து, ஈரத்தைப் போக்கி காலையிலும் இரவிலும் மருந்து போடவும்.

பிளவுப்பட்ட தோல், சொரசொரப்பான தோல் இவைகளுக்கு மெதுவாகத் தேய்த்தால், அந்தபாகத்தை மிருதுவாக்குகிறது. முகத்தின் மீது கிரீம் மாதிரி உபயோகித்தால் அந்த பாகத்தைமிருதுவாக்குகிறது. உள்ளங்கை உள்ளங்கால் பிளவுப்பட்ட தோல் இவைகளுக்குத் தேய்த்தால் அந்த பாகங்களை மிருதுவாகின்றன. ஒலியம்லினியும், ஒலியம்சிசேமியும் தசைகளை மிருதுவாக்குகின்றன. வீக்கத்துடன் கூடிய பாகங்களுக்கு இதம் அளிக்கின்றன. குணமடைய உதவி செய்கின்றன. மலம் கழிவதற்கு முன்னும் பின்னும் மூலரோகங்களுக்கு உபயோகிக்கலாம். மலச்சிக்கல் இருந்தால் ஸ்போலக்ஸை உள்ளுக்குச் சாப்பிட்டுக் குணப்படுத்தலாம்.

**கிடைக்கும் விதம் :** 15 கி. கொண்ட பிளாஸ்டிக் குழாய்



### ருப்ஸான் (Rubzon)
### தலைவலிக்கும் ஜலதோஷத்திற்கும் தடவும் மருந்து
### (Vapour rub for head-aches and colds)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| புதினா | 5gm |
| கற்பூரம் | 10gm |
| நீலகிரி தைலம் | 2.5ml |
| தேவதாரு எண்ணெய் | 2.5ml |
| கந்தபுரா தைலம் | 5ml |

**விளக்கம் :** வெளிப்பிரயோகத்திற்காக, மெதுவாகத் தடவி உபயோகப்படுத்தும், பிரசித்தி பெற்ற மூலிகைகளின் சேர்க்கையால் உண்டான மருந்து.

**அறிகுறிகள் :** தலைவலி ஜலதோஷமும் இருமலும், பிராங்கைடிஸ் வலிகளும், நோய்களும், நரம்புவலி, இவை அறிகுறிகள், மார்புச்சளிக்கு ருப்ஸான், கலந்து வெந்நீர் ஆவியை உட்சுவாசிக்கலாம். பாதிக்கப்பட்ட இடத்தில் ருப்ஸானைத் தடவி, மெதுவாகத் தேய்க்க வேண்டும்.

**கிடைக்கும் விதம் :** 15 கிராம் கொண்ட பிளாஸ்டிக் குழாய்

### சால்பாஸ் (Salphos)
### ஜீரணத்தையும் பசியையும் விருத்தி செய்யும் மாத்திரைகள்
(Digestive and Appetite Increasing tablets)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| ரேவல் சின்னி | 33mg |
| கொடி வேலி | 33mg |
| கடுக்காய் | 23mg |
| சுக்கு | 22mg |
| சீரகம் | 4mg |
| தாளிச பத்திரி | 13mg |
| பப்பாளி | 12mg |
| நெல்லிக்காய் | 10mg |
| கடுகு ரோகிணி | 8mg |
| சோம்பு | 28mg |
| பெரிய ஏலம் | 3mg |
| நிலவேம்பு | 8mg |
| கொத்துமல்லி | 3mg |



J & J DeChane

| | |
|---|---|
| கரிசாலை | 32mg |
| மஞ்சள் | 33mg |
| ஓமம் | 3mg |
| மிளகு | 32mg |

**விளக்கம் :** ஜீரணக் கோளாறுகளுக்கும், பசியின்மைக்கும், ஆயுர்வேத மருந்துகளின் சேர்க்கையால் ஏற்பட்ட மருந்து.

**அறிகுறிகள் :** பசியின்மை, ஜீரணக் கோளாறுகள், பித்த உபத்திரவம். வாயுப் பொறுமல், அஜீரணத்தைப் பற்றிய அறிகுறிகள், வயிற்றுப் போக்கு அல்லது நாள்பட்ட மலச்சிக்கல்.

**டோஸ் :** பசியின்மைக்கும், ஜீரண டானிக்காகவும் சாப்பாட்டிற்கு முன் 1 அல்லது 2 மாத்திரைகள், மற்ற ஜீரணக் கோளாறுகளுக்கு உணவுக்குப் பின் 1 அல்லது 2 மாத்திரைகள் குழந்தைகளுக்கு ½ முதல் 1 மாத்திரை வரை.

சிசுகளுக்கு பயோஸால் மிக்ஸரை சிபாரிசு செய்கிறோம்.

**கிடைக்கும் விதம் :** ஒவ்வொன்றிலும் 10 மாத்திரைகள் உள்ள 10 பிளிஸ்டர் அட்டைகள் கொண்ட பெட்டி. 300 மாத்திரைகள் கொண்ட புட்டி.

## சென்ஸைன் (Senzine)

### நரம்புத் தளர்ச்சிக்கு டானிக் மாத்திரைகள்

### (Tonic tablets for Nervous debility )

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| நெருஞ்சில் | 115mg |
| அமுக்கராக் கிழங்கு | 44mg |
| பிரம்ம தண்டு | 6mg |
| சுக்கு | 9mg |
| வெள்ளை பூண்டு | 2mg |
| வசம்பு | 8mg |
| சீரகம் | 11mg |
| அதிமதுரம் | 25mg |
| ஜாதிக்காய் | 11mg |
| சர்ப்பகந்தி | 3mg |
| கிரந்தி தகரம் | 3mg |

**விளக்கம் :** சென்ஸைனிலுள்ள ஆயுர்வேத மருந்துகளின் சேர்க்கை, கிளர்ச்சி செய்யாது எனவே நரம்புத் தளர்ச்சி ஆண்மைக்குறைவு இவற்றிற்கு நம்பிக்கையான டானிக் ஆகும்.



**அறிகுறிகள் :** நரம்புத் தளர்ச்சியாலோ அல்லது ஒருவித மூளை நரம்புக் கோளாறாலோ ஏற்பட்ட ஆண்மையின்மை இழந்த வீரியத்தைத் திரும்ப பெற ஒரு சம்பந்தமான மருந்து.

**டோஸ் :** நரம்பு சாந்தத்திற்காக உணவிற்கு ஒரு மணி முன் 1 மாத்திரை. வீரியத்தைத் தூண்டுவதற்காக 1 முதல் 2 மாத்திரைகள் தினம் 3 வேளை.

**கிடைக்கும் விதம் : 100** மாத்திரைகள் கொண்ட புட்டி

## ஸ்கின்மென்ட் (Skinment )

### விஷத்தை அழிக்கும் குணமுள்ள, சர்மத்திற்குத் தடவும் களிம்பு

### (Anti-fungal-Anti-bacterial skin Ointment)

**விளக்கம் :** விஷக்கிருமிகளை அழிக்கவும் ஒட்டுண்ணி சர்ம வியாதிகளைப் போக்கவும் ஒரு சக்தி வாய்ந்த பிரசித்தி பெற்ற மருந்துகளின் சேர்க்கை.

**அறிகுறிகள் :** படர் தாமரை, சொறி, சிரங்கு, எக்ஸிமா சர்மபடை சர்மத்தில் செதில் செதிலாகத் தோல் உறியும் குணமுள்ள ஒரு சர்ம நோய் ஆகியவைகளுக்கும் முக்கியமாகப் பயன்படுகிறது.

**உபயோகிக்கும் விதம் :** பாதிக்கப்பட்ட இடங்களில் மருந்தை இரவில் மெதுவாய்த் தடவி மறுநாள் காலையில் சுத்தம் செய்யும் மென்மையான சர்மத்திற்கு மருந்தை சம அளவுள்ள ஏதாவது சாப்பிடக்கூடிய தாவர எண்ணெயுடன் கலந்து உபயோகிக்கலாம். பாதம், கை இவற்றில் மேல் தோல் அதிகமாகத் தடித்து போகும் குணமுள்ள சர்மநோய்க்கு இம்மருந்தை இரண்டு வேளை தடவி இலேசாகக் கட்டு கட்டிவிடவேண்டும். **கண்ணுக்கு அருகில் உபயோகப்படுத்தக்கூடாது.**

**கிடைக்கும் விதம் :** 15 கிராம் மருந்துள்ள பிளாஸ்டிக் குழாய்,

## ஸ்போலாக்ஸ் (Spolax)

மிருதுவான மலமிளக்கி மருந்துப் பொடி **(Laxative granules)**

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| சப்ஜா | 2.5g |
| நில ஆவரை | 0.1g |
| சோம்பு | 0.125g |
| சீரகம் | 0.025g |

**விளக்கம் :** நாள்பட்ட மலச்சிக்கலுக்கும், குடல் சரிவர இயங்குவதற்கும், பயன்படும் இயற்கைத் தாவரங்களான மலமிளக்கிப் பொடி, குடல்களில் சளிப்



J & J DeChane

பொருளை உற்பத்திசெய்யும் தோல் பாகத்தில் வலியையோ, அசௌகரியத்தையோ, அல்லது எரிச்சலையோ உண்டாக்குவதில்லை.

**அறிகுறிகள் :** பெருங்குடல் தசைகள் விறைப்பாய் இருத்தல், உணவுப் பற்றாக்குறை இவற்றின் காரணமாக ஏற்படும் வழக்கமான மலச்சிக்கல், தேகப்பியாசமின்மை, பெரியவர்கள் 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள், படுக்கை, நோயாளிகள் ஆகியோரிடம் காணப்படும் மலச்சிக்கல் மூலவியாதியஸ்தர்கள் ஆகியோரின் குடல்கள் வலியில்லாமல் இயங்கச் செய்து உடனடி நிவாரணம் அளிக்கிறது. வயிற்றுப் போக்கு சீதபேதி, இவற்றின் சிகிச்சையுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது.

**டோஸ் :** 1 முதல் 3 டீஸ்பூன் பொடியை 1 கிளாஸ் தண்ணீருடன் மாலையில் உணவுக்கு 2 மணி முன்போ அல்லது பின்போ உட்கொள்ளலாம் மறுநாள் காலையில் மலம் கழியும் 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு 1 டீஸ்பூன் மருந்தை ஜலத்துடன் சாப்பிடவேண்டும்.

**கிடைக்கும் விதம் :** 75 கிராம் H.D.P.Containers
200 கிராம் H.D.P.Containers

### ஸ்போலாக்ஸ்–இ (Spolax-E)
### மிருதுவான மலமிளக்கி பவுடர் (Laxative Powder)

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| சப்ஜா | 3.71g |
| சோம்பு | 0.140g |
| சீரகம் | 0.028g |

**விளக்கம் :** நாள்பட்ட மலச்சிக்கலுக்கும், குடல் சரிவர இயங்குவதற்கும் பயன்படும் இயற்கை தாவரங்களால் ஆன மிருதுவான மலமிளக்கி பவுடர். குடல்களில் சளி பொருளை உற்பத்தி செய்யும் தோல் பாகத்தில் வலியையோ அசௌகரியத்தையோ அல்லது எரிச்சலையோ உண்டாக்குவதில்லை.

**அறிகுறிகள் :** பெருங்குடல் தசைகள் விரைப்பாய் இருத்தல், உணவுப்பற்றாக் குறை இவற்றின் காரணமாக ஏற்படும் மலச்சிக்கல் கர்ப்பிணி பெண்களுக்கு ஏற்படும் மலச்சிக்கல், இதய சம்பந்தமான நோய் உள்ளவர்களுக்கும் உள்ள மலச்சிக்கல், சர்க்கரை நோய் உள்ளவர்களுக்கும் உள்ள மலச்சிக்கலை நிவர்த்தி செய்யக் கூடியது. அதிகமான பைபர் உள்ளதால் உடலுக்கு நல்லது.

**டோஸ் :** 1 முதல் 3 டீஸ்பூன் பவுடரை 1 கிளாஸ் தண்ணீருடன் சேர்த்து காலையில் உணவுக்கு 2 மணிக்கு முன்போ அல்லது இரவு படுக்கைக்கு



செல்லும் முன் சாப்பிட வேண்டும். கூடுதலாக ஒரு கிளாஸ் தண்ணீர் குடிப்பது நல்லது.

**கிடைக்கும் விதம் :** 125 கிராம் H.D.P.Containers

### டுரைக்கோ (Turai-Co)
**மூத்திரவர்த்தினியும் மற்றும் சிறுநீரகக் கோளாறுகளுக்கும் ஏற்ற மாத்திரைகள்**
**(Diuretic and Urinery Anti-Septic-Tablets)**

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| மூக்கரட்டை | 120mg |
| வால் மிளகு | 30mg |
| நெருஞ்சில் | 120mg |
| சிறு நாகப்பூ | 30mg |

**விளக்கம் :** மூத்திரவர்த்தினியாகவும், சிறுநீரக உபாதகளைக் கண்டிக்கவும், பிரசித்தி பெற்ற ஆயுர்வேத மருந்துகளின் சேர்க்கையாகும்.

**அறிகுறிகள் :** மூத்திரவர்த்தினியாகவும், சிறுநீரக உபாதைகளைக் கண்டிக்கவும் கல் உண்டாவதோலோ அல்லது தொற்றுதலாலோ கஷ்டத்துடனும், வலியுடனும், சிறுநீர் கழிப்பவர்களுக்கு ஒரு சாந்தமான மருந்து.

**டோஸ் பெரியவர்கள் :** 1 முதல் 2 மாத்திரைகள் வீதம் 10 மாத்திரைகள் தினம் 3 வேளை போதுமான அளவு தண்ணீர் உட்கொள்ள வேண்டும்.

**கிடைக்கும் விதம் :** 10 மாத்திரைகள் வீதம் 10 பிளிஸ்டர் அட்டைகள் அடங்கிய பெட்டி. 300 மாத்திரைகள் கொண்ட புட்டி.

### வைட்டாஸான் (Vitesson)
### மன அமைதியை உண்டுபடுத்தும் மாத்திரைகள்
**(Tranquiliaer Tablets)**

**சேர்மானங்கள்**

| | |
|---|---|
| சர்ப்பகந்தி | 20mg |
| அமுக்கராக் கிழங்கு | 80mg |
| கிரந்தி தகரம் | 80mg |
| குரோசாணி ஓமம் | 20mg |



J & J DeChane

**விளக்கம் :** நரம்பு மண்டலத்தைப் பலபடுத்த ஆயுர்வேத மருந்துகளின் சேர்க்கையாகும். அடிக்கடி மருந்து எடுத்துக் கொள்ளும் பழக்கத்தை உண்டுபடுத்தாது. கவலையற்ற தூக்கத்தை உண்டுபண்ணும் மருந்து.

**அறிகுறிகள் :** மூளைக் கோளாறு காரணமாகத் தோன்றும் உடல் கோளாறுகள், நரம்பின் பிகுத்தன்மை, கவலை, தூக்கமின்மை, இரத்த அழுத்தம் அதிகரிப்பு, தசை கணுக்கால்களில் வலிகள், தலைவலி, நரம்பு சம்பந்தமான வலிகள்.

**டோஸ் :** பெரியவர்கள் 1 முதல் 2 மாத்திரைகள் தினசரி 3 வேலைகள் மருந்தின் அளவு மருந்து வேலை செய்வதை அனுசரித்து இருக்கவேண்டும். அதை மற்ற வைத்திய சிகிச்சை முறைகளுக்கு அனுபந்தமாக உபயோகப்படுத்தலாம். குழந்தைகள் ¼ முதல் ½ மாத்திரைகள் வயதுக்குத்தக்கப்படி

**கிடைக்கும் விதம் :** அட்டைக்கு 10 மாத்திரைகள் வீதம் 10 பிளிஸ்டர் அட்டைகள் உள்ள பெட்டி, 300 மாத்திரைகள் கொண்ட புட்டி.

## வைட்டஸான் போர்ட் (VITESSON FORTE)

## மன அமைதியை உண்டுபடுத்தும் மாத்திரை
**(Tranquilizer Tablets)**

**சேர்மானங்கள்**

| | | |
|---|---|---|
| சர்பகந்தி | - | 40 mg |
| அமுக்காரக் கிழங்கு | - | 80 mg |
| கிரந்தி தகரம் | - | 80 mg |
| குரோசாணி ஓமம் | - | 40 mg |

**விளக்கம் :** நரம்பு மண்டலத்தை பலப்படுத்த ஆயுர்வேத மருந்துகளின் சேர்க்கையாகும். அடிக்கடி, மருந்து எடுத்துக் கொள்ளும் பழக்கத்தை உண்டுபடுத்தாது கவலையற்ற தூக்கத்தை உண்டுபண்ணும் மருந்து.

**அறிகுறிகள் :** மூளை கோளாறு காரணமாகத் தோன்றும் உடல் கோளாறுகள் நரம்பின் பிகுத்தன்மை, கவலை, தூக்கமின்மை இரத்த அழுத்தம் அதிகரிப்பு தசை கனுக்கால்களில் வலிகள், தலைவலி நரம்பு சம்பந்தமான வலிகள்.

**டோஸ் :** பெரியவர்கள் 1 மாத்திரை தினசரி மூன்று வேளைகள் மருந்தின் அளவு மருந்து வேலை செய்வரை அனுசரித்து இருக்க வேண்டும் இதை மற்ற வைத்திய சிகிச்சை முறைகளுக்கும் உபயோகப்படுத்தலாம்.

**கிடைக்கும் விதம் :** 60 மாத்திரைகள் கொண்ட புட்டி.



## ஸாகர்கோ (ZAHER CO)

தேள்கடிக்கும் மாதவிடாய் நிற்கும் சமயம் உண்டாகும் மாறுதல்களுக்கும் உள்ள ஹோமியோபதி மாத்திரை

**விளக்கம் :** தேகத்தில் மாறுதல் ஏற்படும் சமயத்தில் உண்டாகும் வியாதிகளுக்கும், அதிக சூரிய ஒளியின் பாதிப்பினால் ஏற்படும் தலைவலிக்கும் உகந்தது. மேலும் விஷக்கடியினால் ஏற்படும் பாதிப்பையும் வலியையும் நீக்க வல்லது.

**டோஸ் :** பெரியவர்களுக்கு 1 மாத்திரை வீதம் அவசியம் அனுசரித்து 4 மணிக்கு ஒரு தடைவ சிறுவர்களுக்கு ¼ முதல் ½ மாத்திரை வீதம்

**கிடைக்கும் வீதம் :** 30 மாத்திரைகள் கொண்ட புட்டி

## வியாதிகளின் சிகிச்சை முறைகள்

**முகவுரை :** இந்த பாகம் பல வியாதிகளின் சிகிச்சை முறைகளைப் பற்றிக் கூறுகிறது. மருந்துகள் வியாதி வராமல் தடுப்பதற்கும் வியாதி வந்த பிறகு அதைக் குணப்படுத்துவதற்கும் உபயோகப்படுகின்றன. வியாதி என்ன என்பது சரியாக நிர்ணயிக்கப்பட்டால், சிகிச்சை முறை எளிதாகிறது.

மருத்துவர் நோயாளியின் வயது இனம், தேக நிலைமை நோயின் கால அளவு இவற்றை அனுசரித்து மருந்தின் அளவை நிர்ணயிக்க வேண்டும். மருந்துகளின் சேர்க்கை இயங்கும் விதத்தையும் அவைகளுக்கான பத்தியத்தையும் அவர் அறிந்திருக்க வேண்டும். சிகிச்சை பெறும் காலத்தில் ஏதாவது சிக்கல் ஏற்பட்டால் அதை உடனடியாக நோயாளி தெரிவிக்க வேண்டும். இரண்டாம் பாகத்தில் மருந்துகள் கொடுக்கும் விதத்தைப் பற்றி விரிவாகக் கூறியுள்ளோம்.

இந்த முகவுரைக் குறிப்பில் விஷயங்களைச் சிக்கலில்லாமல் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்பது எங்களுடைய விருப்பம். ஆயினும் கஷ்டப்படும் நண்பர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பது எங்களுடைய முக்கிய குறிக்கோள் எந்த வியாதிக்கும் வைத்தியம் செய்யும் போது ஆகார போஷணை பற்றியும் ஜீரண சக்தியைப் பற்றியும் கவனம் செலுத்த வேண்டும்.

இங்கு தேக நிலைமையை அனுசரித்து சிகிச்சை செய்யும் முறையை விவரித்துள்ளோம். அதை வரைப்படுத்துதல் என்ற தலைப்பின் கீழ்கொடுக்கப்பட்டுள்ள விஷயங்களுடன் நன்றாகப்படிக்க வேண்டும். அப்போது தான் பற்பல மருந்துகள் இயங்கும் அடிப்படை உண்மைகளின் முழுவிஷயங்கள் நமக்கு வந்து கிடைக்கும்.

**ஆகார போஷணை (Nutrition)** ஆல்போஸாங் என்பது பாஸ்பேட் உப்புகள் கால்ஷியம், மெக்னிஷியம் இவைகள் கூடிய ஒரு சத்துப்பொருள்.

இத்துடன் எல்லா சத்துக்களும் சரியான அளவில் உள்ள உணவைக் சேர்த்து கொள்ள வேண்டும். உணவை தேவைக்கும் தனிப்பட்ட நபரின் ஜீரண சக்திக்கும் ஏற்றவாறு திட்டமிட்டுச் சாப்பிட வேண்டும்.

**ஆகாரங்கள் (Diets)** அளவுக்கு மிஞ்சி சாப்பிடுதல் உடற்பயிற்சியைக் குறைக்கும் பழக்கங்கள் ஆகிய இரண்டும் நவீன வாழ்க்கையில் ஏற்படும் தீய அம்சங்கள். உணவை திட்டமிட்டு உண்பது. ஆரோக்கியத்தை சீரான நிலையில் வைத்துக் கொள்ளப் பயன்படுகிறது. ஒரு நோயாளிக்கு இது மிகவும் அவசியமானது. இதே மாதிரி தேகப்பியாசங்களையும் தவறாமல் செய்து வர வேண்டும். அது ஜீரணத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் நல்லது. உறுப்புகளுக்கு தேகப் பயிற்சி நல்லது. நடப்பது தேகத்தின் எல்லாப் பாகங்களுக்கும் பயிற்சி அளிப்பதால் மிகவும் நல்லது. கடும் தேகப் பயிற்சி நோயாளிக்கு ஏற்றதல்ல. பருத்த சரீரம், ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு பத்தியம் அவசியமாகும்.

**பருத்த சரீரம் (Obesity)** பருத்த சரீரம் உள்ளவர்களுக்கு உப்பைக் குறைத்துக் கொடுக்க வேண்டும். கொழுப்புகள் ஆகாரத்தில் குறைக்கப்பட வேண்டும். தினசரி தவறாமல் நடந்து வரவேண்டும். அவர் பச்சைத் தண்ணீரில் குளிப்பது நல்லது. எலுமிச்சை சாரை பருகுவது நல்லது. நெய், வெண்ணெய் போன்ற பூரிதமான கொழுப்புப் பதார்த்தங்கள் தீமை உண்டாக்கலாம். அவை ரத்தக் குழாயில் அடைப்பின் காரணமாக இருதயத்தை பாதிக்கலாம்.

**உயர் இரத்த அழுத்தம் (Hypertension)** இந்த நோய் உள்ளவர்களுக்கு உப்பில்லாத பத்தியம் தேவை. டீ,காபி, மதுபானம் இவற்றை விலக்கவேண்டும். எலுமிச்சை சாறு மிகவும் நல்லது. சாப்பிடும்போது தண்ணீர் அருந்தாமலும், உணவிற்கு ½ மணி நேரம் கழித்து தண்ணீர் அருந்தியும் வந்தால், ஒரு அளவுக்கு இரத்த அழுத்தம் கட்டுப்படுத்தப்படும். இருதயக் கோளாறு, மூத்திரக் காய்களின் வீக்கம், அடிவயிற்றில் நீர்க்கோவை அல்லது ஏதேனும் உடல்வீக்கம் இவ்விதக் கேஸ்களில் உப்பில்லாப் பத்தியமும் அவசியமாகும்.

**நீரிழிவு (Diabetes)** நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு கணக்கிடப்பட்ட மாவு பதார்த்தங்களும், கொழுப்புகளும், புரதங்களும் தேவை. அதாவது ஒரு நாளும் 2100 முதல் 2400 வரை கலோரிகள் உஷ்ணத்தைப் பூர்த்தி செய்வதற்கு 200 முதல் 300 கிராம் வரை மாவுப் பதார்த்தங்களும் 1 கிலோ எடையுள்ள தேகத்திற்கு ½ முதல் 1 கிராம் வீதம் புரதமும், மீதம் கொழுப்பாகவும் இருக்க வேண்டும். அவர்கள் பருமனாக இருந்தால் எண்ணெய், நெய், வெண்ணெய், உப்பு ஆகியவற்றை உணவில் கட்டுப்படுத்த வேண்டும்.



**குடல்புண்கள் (Peptic Ulcer)** பால் பாலோடு அல்லது நீருள்ள புரதங்கள் அடங்கிய சாத்வீகமான உணவு குடல் புண்களை குணப்படுத்தவும், வலியை ஒரு அளவுக்குக் கட்டுப்படுத்தவும் உதவும். பால் ஒரு உணவாகவும், இயற்கைக்காரப் பொருளாகவும் இயங்குகிறது. அதில் கொழுப்புகளும், புரதங்களும் அடங்கியுள்ளன. அதை அடிக்கடி கொடுக்க வேண்டும். இந்நோய் உள்ளவர்கள் மதுபானத்தை ஒரு போதும் உபயோகிக்க கூடாது. அவர்கள் புகை பிடிக்கக் கூடாது எரிச்சலுட்டும் மிளகாய், வாசனைத் திரவியங்கள் அமில உணவுகள் போன்றவற்றை விலக்க வேண்டும். டீ அல்லது காபி தினம் ஒரு வேளை சாப்பிட்டால் தீங்கு செய்யாது. ஆனால் அவற்றை பாலில் கலந்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

**மதுபானங்கள் (Alcoholics)** உணவுக்கு முன் மதுபானத்தை தண்ணீரில் கலந்து சிறிய அளவுகளில் எடுத்துக் கொண்டால், நன்றாக பசியெடுக்கும் குறிப்பாக போஷணக் குறைவால் ஏற்படும் நிலைக்கு நல்லது. முதுமைப் பருவத்தில் படுக்கப் போகும் முன் அதை எடுத்துக் கொண்டால் பூரண ஓய்வு சரிவர கிடைக்கும் நோயாளி குளிர்ந்த வாயு மண்டலத்திலிருந்து திரும்பி மதுபானத்தை எடுத்துக் கொண்டு ஓய்வு பெறுதல் நன்மை பயக்கும். ஆனால் மதுபானத்தை எடுத்துக் கொண்ட பிறகு, குளிர் காற்று பொருளாகவும் புரதப் பொருள் நீக்கியாகவும் பயன்படுகிறது. அதற்கு உஷ்ணம் உண்டு. சரியான உணவில்லாமல் மதுவைத் தொடர்ந்து உபயேகித்தால் கல்லீரலுக்கு கேடு உண்டாகும். இரைப்பை, குடல், கண் ஆகியவை பாதிக்கப்படும். அடிக்கடி உபயேகிப்பதனால், துர்பழக்கமும் சகிப்புத் தன்மையும் உண்டாகும். பொதுவாக மக்கள் மனக்கவலையையும், தேகக்களைப்பையும் நீக்க அதைக் குடிக்கிறார்கள். கடைசியில் அதை அடிக்கடி அருந்தும் துர்பழக்கத்திற்கு இரையாகிறார்கள். மது அருந்துவதால் கல்லீரல், சிறுநீரகம் இதயம் ஆகியவை பாதிக்கப்படுவதுமில்லாமல் மற்ற சிக்கல்களை உண்டாக்கும்.

**புகைப்பிடித்தல் (Smoking)**

புகையிலையில் உள்ள நிக்கோடைன் என்னும் விஷப்பொருள் தற்காலிகமாக ஊக்கமளிக்க கூடிய பொருளாக இருப்பினும் அனுபவிக்கத் தக்கதல்ல. மார்பு சளி, ஆஸ்துமா, விஷத்தன்மையுள்ள கெட்ட சதை வளர்ச்சி ஷயரோகம் போன்ற சுவாச சம்பந்தமான கோளாறுகள், இருதய இரத்தக் குழாய்களின் சிக்கல்கள், கால்கள் அழுகிவிடுதல் குடல் புண்கள், கண்ணில் தென்படும் அழிவைக் குறிக்கும் மாறுதல்கள் ஆகியவற்றால் புகை பிடிப்பவர்கள் அவதிப்படுகிறார்கள்.

**புகையிலையை வெற்றிலையுடன் மெல்லுதல் (Tobacco Chewing with Betal leaves)**

இது நாக்கையும், ஈறுகளையும் புண்ணாக்கி, புற்று நோய் ஏற்பட காரணமாகிறது. குடல் புண்களும் ஏற்படலாம். புகையிலையிலுள்ள நிகோடைன் என்னும் விஷப்பொருள், நாக்கின் கீழேயுள்ள சளிச்சவ்விலிருந்து உறிஞ்சப்படுகிறது. அது பல தீமைகளை உண்டாக்கும்.

**டீயும் காப்பியும் (Tea and Coffee)**

தேயிலையில் காபின் (Caffeine) த்யோபில்லின் (Theophyllin) த்யோப்ரோமின் (Theobromine) உள்ளன. காபின் தலைவலிக்கு ஏற்றது. அது மத்திய நரம்பு மண்டலத்தை ஊக்குவித்து, இரண்டு மணிகால அளவுக்கு விழிப்பையும் உண்டாக்குகிறது. மற்ற இரண்டு பொருள்களாகிய த்யேபில்லின், த்யோப்ரோமின் ஆகியன அதிகமாகப் பயன்படுவதில்லை. அவை இதயத்தை ஊக்குவிக்கின்றன. சிறுநீரின் அளவை அதிகரிக்கச் செய்கின்றன. ஒரு கப் தேநீரில் ஏறக்குறைய 150 மி.கி. (Caffeine) அடங்கியுள்ளது. டீ யின் அளவுக்கு மிஞ்சிய உபயோகம்.

**Excess use of Tea**

காபின் தனிப்பட்ட முறையில் தீங்கு விளைவிப்பது போல டீயில் கலந்த காபின் அவ்வளவு தீங்கு செய்யாது. உதாரணம் APC மாத்திரைகளில் உள்ள காபின், டீ யில் டான்னின் (Tannin) என்ற மற்ற ஒரு பொருளும் உண்டு. அது புரதப் பொருளை வீழ்ப்படிவாக்கும். மேலும் அது ஜீரணத்தைக் கொடுக்கிறது. எரிச்சலைத் தணிக்கும் பசை மருந்தாகப் பயன்படும் பாலையும் பாலோடையும் சேர்ப்பதால் ஜீரணம் பாதிப்பதைப் பெருமளவு தடுக்கலாம். ஆயினும் மத்திய நரம்பு மண்டலத்தின் கிளர்ச்சியைத் தடுக்க, 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு, டீ ஏற்றதல்ல. மேலும் குடல்புண், கூடுதலான இரத்த அழுத்தம் வயிற்றில் வேக்காடு இவ்வித நோய்களுக்குச் செய்யும் சிகிச்சை முறையில் டீ ஏற்றதல்ல.

காப்பியிலும் காபின் உள்ளது. அதுவும் டீயைப் போல் செயல்படுகிறது. மேலும், காப்பியிலுள்ள வெகு சீக்கிரம் ஆவியாக் கூடிய எண்ணெய்கள் சுவையளித்து. பசியைத் தூண்டும் காப்பியில் டான்னின் இல்லை ஆயினும் சிகிச்சை முறையில் காப்பி கெடுதலா என்பதை ஆராயும் பொழுது டீக்கு கூறியன காப்பிக்கும் பொருந்தும். ருசி உண்டாவதற்கு, டீ காப்பியுடன் சர்க்கரை சேர்க்கப்படுகிறது. இரத்தம் அழுத்தம் உள்ளவர்களுக்கு தினம் ஒன்று அல்லது இரண்டு கப் டீயோ, காப்பியோ, கெடுதலை விளைவிக்காது.

**ஜீரணம் (Digestion):** ஜீரண உபத்திரவங்களுக்கு சால்பாஸ் பயனுள்ள மருந்து, ஜீரண சக்தி குறைந்தவர்களுக்கு கேஸ்ட்ரோமன் நல்லது. ஜீரண உபத்திரவங்கள் சில சமயங்களில் வயிற்றில் புளிப்புடன் சம்பந்தப்படலாம். அதற்கு காலையிலும், மாலையிலும் உணவுக்கு அரைமணிக்குப் பிறகு மாக்னைன் சாப்பிடுவது நல்லது. பொதுவாக வாயுப்பொறுமல் குடல் நோய் சாப்பிட பிறகு, இரவில் உண்டாகும் சில வியாதிகள் ஆகியவற்றை மாக்னைன் மூலம் குணப்படுத்தலாம்.

**உணவு செரித்தல் (Assimilation) :** ஒருவர் நன்றாகச் சாப்பிட்டு நன்றாக ஜீரணமும் ஆகியதாகக் கருதலாம். அப்படியிருந்தும் அவர் உடல் மெலிந்து காணப்படலாம். காரணம் சாப்பிட்டது உடலில் சரியாகச் செரிக்கவில்லை என்பதே, இவ்வாறு ஏற்படுவதற்கான காரணங்களை அறிந்து தகுந்த சிகிச்சை கொடுத்து வந்தால் செரிக்கும் சக்தி விருத்தி அடைகிறது.



**உணவு வெறுப்பு, அஜீரணம் (Sensitization)**

வழக்கமாக எல்லோராலும் சில மருந்துகளும் உணவும் உபயோகப்படுத்தப்பட்டு வந்தாலும், நோயாளிக்கு அவற்றைச் சாப்பிட விருப்பமிருக்காது. இந்த மாதிரி நிலைமைக்கு கேஸ்ட்ரோமோன் மிக நல்லது.

**உணவு வெறுப்பை கிரமமாக நீக்கும் முறை (Gradual desensitization process)**

வெறுத்து ஒதுக்கப்படும் மருந்தையோ அல்லது ஆகாரத்தையோ, கொஞ்சம் கொஞ்சமாக சில நாட்களுக்கு சாப்பிட்டு வந்தால் வெறுப்பு நீங்கி நோயாளி அவற்றைத் தானகவே விரும்பி சாப்பிடுவான்.

**மலம், நீர்கழிவது (Elimination)** மலம் நீர் கழிவது என்னும் சொல் ஒழுங்காக மலம் கழிவதையும் மலச்சிக்கல் நிவர்த்தி செய்வதையும் குறிக்கும். வயதானவர்கள், பலமற்றவர்கள் கர்ப்பிணிகள் ஆகியவர்களுக்கு மலச்சிக்கலுக்கு ஜாக்கிரதையாகச் சிகிச்சை அளிக்க வேண்டும். காலா காலத்தில் மலம் கழிவது நல்லது. தீவிர மலமிளக்கி மருந்துகளை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் குடல்களுக்கு கெடுதலையும் ஆகார போஷனைக் கோளாறுகளையும் உண்டாக்கும். ஆல்போஸாங், கேஸ்ட்ரோமன் ஸ்போலக்ஸ் இம் மூன்றையும் சேர்த்து உபயோகிப்பதால் மலம் கழிவது ஒழுங்காகும். போஷனையும் பாதிக்கப்படாது. ஒரு கெடுதலும் ஏற்படாது. மேலும் ஸ்போலாக்ஸ் மூலரோகங்களுக்கு நல்லது. சிறுவர்களும் குழந்தைகளும், ஒழு`கற்ற பழக்கத்தின் காரணமாக ஜீரணக் கோளாறுகளாலும், மலச்சிக்கலாலும் அவதிப்படலாம்.

**நரம்பு உபத்திரவங்கள் (Nervous disturbances)**

நரம்பு மண்டலம் பொதுவாக மற்ற எல்லா மண்டலங்களையும் ஒழுங்குபடுத்தப்படுகிறது. சுய ஆட்சி செலுத்தும் நரம்பு மண்டலத்திலிருந்து தனிப்பட்ட நரம்புகள் இருதயம், இரைப்பை, குடல்கள், கண், காது, முதலியவற்றைக் கட்டுப்படுத்துகிறது. தொற்று நோயினாலோ அல்லது மருந்துகளாலோ நரம்பு மண்டலத்திற்கு ஏற்படும். தீங்கு பொதுவாக மத்திய நரம்பு மண்டலத்திற்கும் மேலும் குறிப்பாக சம்பந்தப்பட்ட நரம்பு மண்டலத்திற்கும் கடுமையான சிக்கலை உண்டாக்கலாம். இதே மாதிரி மற்றைய மண்டலங்களின் உபத்திரங்கள் மறைமுகமாக நரம்பு மண்டலத்தை ஈடுபடுத்தலாம். மனக்கிளர்ச்சியும், மலச்சிக்கலும் மத்திய நரம்பு மண்டல கோளாறுகளுக்கு காரணமாகும்.

பொஷனைக் கோளாறுகளுக்கு சரியான ஆகாரமும், ஆல்போ ஸாங்கும் கொடுக்க வேண்டும். மனக்கலக்கத்தை வைட்டாஸான் கொடுத்துத் தீர்த்துக் கொள்ளலாம். நரம்பு உபத்திரவங்களுக்கும் மலச்சிக்கலுக்கும் பால், பழரசம் உள்பட திரவ ஆகாரங்கள் மிகவும் நல்லது.



J & J DeChane

மனக்குழப்பத்தை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். இதற்குச் சரியான பரிகாரம் வைட்டஸானும் ஆல்போஸாங்கும் தான் வைட்டாஸானை படுக்கைக்கு போகும்போது சாப்பிடுவது மிகவும் நல்லது. வைட்டஸானை ஒரு நாளைக்கு 1 மாத்திரை ஆல்போ ஸாங்குடன் எடுத்துக் கொள்வது போதுமானது. பெரிய அளவுகள் 2 மாத்திரைகள் தேவைப்பட்டால் திரவ ஆகாரங்களுடன் அல்லது பழரசத்துடன் சாப்பிடலாம்.

**ஜன்னி (Delirium):** இது ஜுரத்தில் ஏற்படும் ஒரு சாதாரண சிக்கல். இது எதனால் ஏற்பட்டது.என்ற காரணத்தை அறிந்து அதற்கு தக்கவாறு சிகிச்சை செய்தால் குணமடையும், இந்நிலைகளில் வைட்டஸான் ஒரு நல்ல மருந்து குழந்தைகளுக்கு இத்துடன் சினியம்கோ சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

**இழுப்புகள் (Convulsions):** இழுப்புகளுக்கு வைட்டஸான் தான் பரிகாரம். ஆனால் இவ்வியாதியால் பீடிக்கப்படுபவர்களுக்கு அகர்கோ மிகவும் நல்ல மருந்து. இப்பேர்பட்டவர்களுக்கு நல்ல தூக்கம் அவசியமாகும்.

**தூக்கமில்லாமை (Insomnia):** இது ஜீரண உபத்திரவங்களாலும் வியாகூலங்களாலும் அல்லது மனக்கவலைகளாலும் உண்டாக்கலாம். சில சமயங்களில் அளவுக்கு மிஞ்சி புகைப்பிடித்தாலும், டீ, காபி, அளவுக்கு மிஞ்சி சாப்பிடுவதாலும் தூக்கம் தடைபடும். மேலும் எல்லா வலி உபத்திரங்களும் தூக்கத்தை கெடுக்கும்.

இரத்த அழுத்தத்தையும் கவனிக்க வேண்டும். ஆதலால் இதற்கு சிகிச்சை செய்ய இது ஏற்பட்ட காரணத்தையறிந்து அதற்கு சிகிச்சை செய்யவேண்டும். சிகிச்சைக்கு முன் வியாதி நிர்ணயம் அவசியம் தேவை. சாந்தப்படுத்தம் மருந்தையோ அல்லது தூக்க மருந்தையோ அனாவசியமாகக் கொடுக்கக் கூடாது. அடிக்கடி தூக்க மருந்தை எடுத்துக் கொள்வது துர்ப்பழக்கத்தை உண்டாக்கும்.

**வைட்டஸன் (Vitesson) :** நரம்பு வலிக்கும், தூக்கமின்மைக்கும் வைட்டஸான் ஒரு சிறந்த மருந்து. ஒரு டோஸ் மருந்து ஓய்வின்மையையும், களைப்பையும் நிவர்த்தி செய்கிறது. படுக்கும்போது ஒரு டோஸ் எடுத்துக் கொண்டால் அயர்ந்து நித்திரை செய்யலாம்.

**நரம்பு வலியும்மேலாக மாத்திரம் உள்ள வலிகளும் (Neuralgia and Superficial Pains):** (உ.ம்.) பல்வலி, காதுவலி, மூட்டுவலி, தலைவலி, தசைவலி, இவ்வலிகளுக்கு டெஸில் நல்லது. மேற்கூறிய வலிகளுடன் தூக்கமின்மையும் இருந்தால் டெஸில் உடன் வைட்டஸான் கொடுக்கலாம்.

குறிப்பு : (Note) இரைப்பை குடல் பகுதியில், டெஸில் ஒரு எரிச்சல் உண்டாக்கக்கூடிய பொருளாகும். வயிற்றைப் பற்றிய உபத்திரவங்களுக்குச் சிகிச்சை செய்யும் போது டெஸிலைக் கொடுக்கக் கூடாது.



**ஒரு வித மூளை நரம்பு கோளாறு (Neurashthenia)**

இது கடுமையான தேகப்பிரயாசையை அடுத்து, உண்டாக்கும் சரீரம், மனம் இவற்றின் களைப்பால் அறியப்படுகிறது. இரத்தப் பெருக்கு கடும் வியாதி அழுகிய புண் காரணமாக இரத்தம் கெட்டு விஷமாதல், அஜீரணம், முதலியன அறிகுறிகளாகும். சரியான நிர்ணயமும் அதற்கு சிகிச்சையும் அவசியமாகும். அடிக்கடி ஆரோக்கியம் குன்றுதல், மனச்சோர்வு, வியாகூலத்துடன் தீவிர களைப்பு தலைவலி, குறிப்பிடாத வலிகள், நோய்கள் இவைகளும் காணலாம். நோயாளி இளைத்துப் போய் போஷனைக் குறைவான நிலையில் இருப்பான். ஜீரண மண்டலம் சீர்கேடு அடைகிறது. நோயாளி கூறும் அறிகுறிகளுக்கு தக்க காரணம் கண்டுபிடிக்க முடியாது. சூழ்நிலையை மாற்றுதல். ஆரோக்கியத்தைக் கவனித்தல், நல்ல உணவு டானிக் மருந்துகள் இவையெல்லாம் தேவைப்படும் அடியிற் குறிப்பிட்டபடி செய்தால் துரிதமான நிவாரணம் கிடைக்கும் தினம் 2 வேளை ஆல்போஸாங்கை பாலுடன் கலந்து குடிக்கலாம். உணவிற்குப் பின் கேஸ்ட்ரோமோன் 2 மாத்திரையும் படுக்கும் கோது வைட்டஸான் 1 மாத்திரையும் சேர்ந்து எடுத்துக் கொண்டால் இச்சேர்க்கையின் விளைவாக நல்ல பலன் ஏற்படும் பசி குறைவாயிருந்தால் உணவிற்கு ½ மணி முன்பு ஸால்பாஸ் ஒரு மாத்திரை எடுத்துக்கொள்ளலாம். மலச்சிக்கல் இருந்தால் ஸ்போலாக்ஸையும் எடுத்துக்கொள்ளலாம்.

**வியாதியின் அறிகுறிகள் :** நியுரஸ்தனியா என்பது உடலும் உள்ளமும் தளர்ச்சியுற்றிற்கும் ஒரு நிலைமை, கடும் வேலை இரத்தப்பெருக்கு, தீவிர நோய், இரத்தம் கெட்டுப்போனதால் ஏற்படும் விஷத்தன்மை ஆகியவை. மனத்தளர்ச்சியும் இதற்கு ஒரு முக்கியமான காரணம் என்பது தற்காலக் கொள்கை நோயாளியிடம் காணப்படும் நோயின் அறிகுறிகளுக்குத் தக்கவாறு சிகிச்சை செய்து கொள்வது அவசியமாகும். அடிக்கடி உடல் ரொம்ப பலவீனமாகும், வலிமை குறைவு, கவலை, தலைவலி, விவரிக்க முடியாத வலிகள், நோவுகள், இவற்றுடன் உள்ளமும் உடலும் மிகச்சோர்வடையும் நோயாளி விழித்துக் கொள்கிறார்.

நோயாளியோ அல்லது அவனுடனிருப்பவனோ மருத்துவருடன் ஒத்துழைத்தால்தான் வலிப்பு நோய்க்கு சிகிச்சை செய்ய முடியும். இப்பேர்ப்பட்ட நோயாளிகளுக்கு சாந்தத்தை உண்டுபடுத்தும் மருந்துப் பொருளுடன் குறிப்பிட்ட மருந்து தேவை. நோயாளியின் உணவு மற்றும் தினசரி பழக்கங்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதில் கவனம் அவசியம். தினம் 3 வேளை வைட்டாஸானை அகர்கோவுடன் உணவுக்கு முன் கொடுக்கலாம். இச்சிகிச்சையை 2 அல்லது 3 வருடங்கள் தொடரவேண்டும். 3 வருடங்களுக்குப் பிறகு டோஸை கிரமமாக குறைத்து நிறுத்திவிட வேண்டும். ஆல்போஸாங்கை டானிக்காக உபயோகிக்கலாம். வலிப்பு நோய், இரத்த அழுத்தத்துடனும் மூச்சடைக்கும் உணர்ச்சியுடனும், காற்று அலைகள் அடிவயிற்றிலிருந்து மேலே கிளம்புவது போன்ற உணர்ச்சியுடனும் சம்பந்தப்பட்டிருந்தால் அமிக்ளியா நல்ல மருந்து, ஆபத்திற்கிடமான நெருப்பு கிணறுள்ள இடங்களை நோயாளி விலக்க வேண்டும்.



J & J DeChane

அமிக்ளியா உபயோப்படுத்தினால் வலிப்பு நோய் வராதபடி செய்யும் வலிப்பு நோய் வந்த போது நோயாளி தன்னைத் தானே காயப்படத்தி கொள்ளாமல் இருக்கவும், நாக்கைக் கடித்துக் கொள்ளாமல் இருப்பதற்கும் வாயை மரத்தாலான ஒன்றால் அடைக்கவேண்டும்.

### இரத்த மாறுதல்கள்

**இரத்த சோகை (Anemia) :** இரத்த சோகைகள் பலவகைப்படும், நரம்புக் கோளாறு காரணமாக ஏற்படுவதை முதன்மையாகவும் ஒட்டுண்ணி, அல்லது இரத்தப் பெருக்கு காரணமாக ஏற்படுவதை இரண்டாம், தரமாகவும் கருதலாம். அனிமியா வியாதியின் அறிகுறிகள் சர்மம், உதடுகள், கண்முடிகளின் உள்பாகம் முதலியன வெளுத்திருத்தல். பலகீனம், கிறு கிறுப்பு மூச்சுத்திணருதல், இருதயத் துடிப்பு பசியின்மை அஜீரணம் ஆகியவை.

**வலிகள் :** உடல்நிலையின் மாறுபட்ட நிலைக்கு வலிகள் முக்கியமான அறிகுறியாக உள்ளது. வலியை உணர்ந்தவுடன் நோயாளி மருத்துவரிடம் செல்கிறான். வியாதி நிர்ணயத்தையும் அதற்கான சிகிச்சையும் பொறுத்து மருத்துவரின் வெற்றி அமைந்துள்ளது. சில சமயங்களில் உடன் சிகிச்சை செய்வது வியாதியின் கணிப்பை மறைக்கும். (உ.ம். ) தோலில் வீக்கம் காரணமாக ஏற்படும் வலி. இது கடுமையாகவும் மிதமாகவும் சாந்தமாகவும், இருக்கலாம். தொற்று நோய் சம்மந்தமாக ஏற்படும் வலி (உ.ம்) குடல் வாய் நோய், வீக்கம் காரணமாக ஏற்படும் வலி (உ.ம்.) கீழ் வாதம் நரம்பு வலி தசைகளில் வலி எது எப்படியிருப்பினும் வலிக்கு காரணம் என்ன என்பதை கண்டறிவதில் கவனம் செலுத்த வேண்டும். (உ.ம்.) குடல் வாய் நோயுக்குரிய சிகிச்சை அல்லது பென்சிலின் வகையறாவைக் கொண்ட சிகிச்சை அளிக்கவேண்டும்.

### ஒரு மூட்டின் கடுமையான வீக்கம் (Acute Inflamation fo Joint)

இங்கு மூட்டு உஷ்ணமாகவும், வீங்கியும் அசைவுகள் வலியுடன் கூடியதாகவும் இருக்கும். இப்பேர்ப்பட்ட நிலைகளில் தொற்றுதல் காரணமாக தொண்டையில் சதை வளர்ச்சி அல்லது சீழ் நிரம்பிய குழிகள் போன்ற விஷமாக்கப்பட்ட உறுப்புகளை கலவையால் செய்யப்படும் மருந்துகளைக் கொண்ட சிகிச்சை அளிக்க வேண்டும். வலி குறைந்த பிறகு முழுமையான பரிகாரம் கிடைக்கும் வரைக்கும் டெசில் கொடுத்த சிகிச்சையை தொடரலாம். இந்த பாகத்தை பஞ்சால் கட்டுகட்டி அசையாதபடி வைத்துக்கட்டி பாதுகாக்கலாம். கடுமையற்ற நிலையில் செஸால் அல்லது ரப்ஸான் தேய்த்தல் மிகவும் சிறந்தது. வீக்கம் குறைந்தது மிதமான அசைவுகளை தொடங்க வேண்டும். ஜீரணம், மலம் கழித்தல் சரியா என்று கவனிக்கவேண்டும். திரவ உணவு, பால் பழரசம் மட்டும் ஜுரம் உள்ள வரைக்கும் கொடுக்கப்படவேண்டும். சில சமயங்களில் மன நோய் இருக்கும். அப்போது வலிகளுக்கான மற்ற மருந்துகளுடன் வைட்டஸான் கொடுக்கப்படுகிறது.



### மற்ற வலியுள்ள நிலைகள் (Other Painful Conditons)

தலைவலி, காதுவலி, பல்வலி, சூதகவலி, சீழ் நிரம்பிய குழிகளால் வலி, ரண சிகிச்சைக்குப் பிறகு ஏற்படும் வலிகளும், சுளுக்குகளும் ஆகிய இந்த நிலைகளில் டெசில் மிகவும் பயனுள்ளது. இன்புளுயென்ஸா ஜுரத்தினால் ஏற்படும் சரீர வலிகளுக்கும் கூட அது பயன்படுகிறது. ஆயினும் அடிவயிற்றைப் பற்றிய அல்லது அதனுடன் சம்பந்தப்பட்ட வலிகளுக்கும், உடலினுட்புறத்தே உள்ள உறுப்புகள் சம்பந்தப்பட்ட வலிகளுக்கும் டெசில் ஏற்றதல்ல.

**தலைவலி (Headache)** இது வேறுபட்ட கடுமையான அநேக பல வியாதிகளின் அறிகுறி சாதரண ஜலதோஷம் உட்பட பல வியாதிகளின் ஆரம்பத்தில் கடுமையான நிலையற்ற தலைவலி காணப்படுகிறது. மற்ற சாதாரண காரணங்களாவன, இரத்த சோகை, மலச்சிக்கல், கண் தாங்கல், கவலை நரம்பு மண்டல நோய் ஒற்றைத் தலைவலி. அதிக இரத்த அழுத்தம் நாள்பட்ட மூத்திரகோச வியாதிகள், காது, மூக்கு, தொண்டை, பல் சம்பந்தமான வியாதிகள் மூலக்காரணத்திற்கான சிகிச்சை தான் மிகவும் முக்கியமானது. தலைவலிக்கு வழக்கமான மருந்து டெசில். நெற்றியின் மீது ரப்ஸானை தடவுதல் நிவாரணம் அளிக்கும். படுக்கும் போது வைட்டஸானை உட்கொண்டால் நல்ல தூக்கம் உண்டாகிறது.

**வயிறும் குடல்களும் (Stomach and Intestines) :** திரவ அல்லது பாதி திரவரூபத்தில் உள்ள உணவு சிறு குடல்களில் நன்றாக உறிஞ்சப்படுகிறது. இதே மாதிரி பெரும்பான்மையான மருந்துகளும், அங்கிருந்தே உறிஞ்சப்படுகின்றன. தண்ணீரினால் அவற்றின் உட்கிரகித்தல் அதிகப்படுத்தப்படுகிறது. வழக்கமான பசி எடுத்தல், நல்லதொரு அறிகுறி. நீரிழிவு நோயில் இது அதிகமாக இருக்கலாம். ஆனால் இது நிஜமான பசியல்ல. ஏனெனில் உணவு சரியாக உறிஞ்சப்படுவதில்லை. கல்லீரல் கெடுதல் குடல் ஒட்டுண்ணி, அஜீரணம் போன்ற கோளாறுகளில் அது குறைவாக இருக்கும்.

ஜீரணம் வேறு, சகஜமான பசி வேறு, பூரண ஜீரணம் என்பது உணவு உறிஞ்சப்படுதல் ஆகும். அதாவது மாவு பதார்த்தம் கொழுப்புகள், புரதங்கள் வைட்டமின்கள், தாதுப்பொருட்கள் ஆகியவற்றை நன்றாகப் பயன்படச் செய்தல் ஆகும். ஜீரணத்திற்கு சகஜமான பசி ஓரளவு உதவுகிறது. அளவுக்கு மிஞ்சி சாப்பிடுதல் உணவை மெல்லாமல் விழுங்குதல் இவை ஜீரணத்தைப் பாதிக்கும் காலாகாலத்தில் சாப்பிடுதல் சரியான தேகப்பயிற்சி போன்ற ஒழுங்கான பழக்க வழக்கங்கள் உணவு ஜீரணமாவதற்குதம். உறிஞ்சப்படுவதற்கும் உதவும் வயிறு குடல் உபத்திரவங்கள் ஜீரணக்கோளாறுகளினால் ஏற்படுகின்றன. ஜீரணம் வாயில் ஆரம்பிக்கப்பட்டு (சரியாக மென்று சாப்பிடுவதால்) வயிறு குடல்களில் தொடர்ந்து நடைபெறுகிறது. சாப்பிட்ட ஆகாரம் இரத்தத்துடன் இரத்தமாக மாறி, திசுக்களால் உறிஞ்சப்படுவதற்கு ஜீரணம் என்று பெயர். ஜீரண நிலைகள் தங்கள் வேலையைச் செய்ய ஆகாரப் பொருள்கள் முதலில் பற்களால்

நொறுக்கப்படுகின்றன் வாயில் உமிழ்நீர் கிரந்திகள் உமிழ்நிரை சுரக்கின்றன. உமிழ்நீர் உணவில் மாவுப் பதார்த்தங்களை கொஞ்சம் ஜீரணக்கச் செய்கிறது. உணவு பிறகு வயிற்றில் சுரக்கும் ஜீரண நீரோடு கலக்கப்படுகிறது. அப்போது உணவிலுள்ள புரதப்பொருள்கள் நுண்ணிய வஸ்துக்களால் மாற்றப்படுகின்றன. வயிற்றில் பதார்த்தங்கள் ஓரளவு அமிலத் தன்மையை அடைந்ததும் வயிற்று வாசல் நெகிழ்ச்சி அடைந்து வயிற்றிலுள்ள பொருள்கள் சிறுகுடலுக்குள் நுழைகின்றன. சிறு குடலில் உணவு மேணலம். பித்தநீர் கணையநீர், குடல்நீர் இவற்றால் ஜீரணிக்கப்படுகிறது. ஜீரணிக்கப்பட்ட உணவுகள் சிறுகுடலில் உள்ள ஜீவ அணுக்களால் கிரகித்துக் கொள்ளப்படுகின்றன.

உணவுப்பொருள்கள் கிரகிக்கப்பட்டு அவற்றின் சத்து உறிஞ்சப்படுவதற்கு முன் கல்லீரலுக்குள் நுழைகிறது. மலச்சிக்கலுடன் கூடிய பசியின்மைக்கு ஹெர்பிட்டர்ஸ் கொடுத்து சிகிச்சை செய்யலாம்.

**அஜீரணம் (Dyspepsia) :** இதற்கு உணவுக்கு ½ மணி நேரம் கழித்து கேஸ்ட்ரோமோன் மாத்திரையை தண்ணீருடன் சாப்பிட்டு வரவும். நோயாளிக்கு மலச்சிக்கல் அல்லது அஜீரணம் ஏற்பட்டிருந்தால் ஸால்பாஸும் ஸ்போலோக்ஸீம் நிலைமைக்கு ஏற்றவாறு கொடுக்கலாம். முக்கியமான பலவீனமான நோயாளிகளுக்கு ஆல்போஸாங்கை டானிக்காக கொடுக்கலாம். சோம்பலான வாழ்க்கை நடத்துபவர்கள் சாப்பாட்டிற்கு முன் துரிதமாக நடத்தல் நல்லது.

**வயிற்றில் வாயுப் பொருமல் (Flatulence) :** இது ஏற்படுவதற்கு காற்றை உட்கொள்வது ஒரு காரணம். அஜீரணம், மலச்சிக்கல், மிதமிஞ்சிய சாப்பிடுதல் ஆகியவை மற்ற காரணங்களாகும். காரணத்தை அறிந்து அதற்குத் தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும். பொதுவாக சாப்பாட்டிற்கு முன்பு 1 மாத்திரை சால்பாஸும், சாப்பாட்டிற்குப் பிறகு 1 மாத்திரை கேஸ்ட்ரோமோனும் எடுத்துக் கொண்டு வந்தால் வாயுப் பொறுமலை நிவர்த்தி செய்யும். உணவுடன் தண்ணீர் குடிப்பதைத் தவிர்க்கவேண்டும்.

**குடல் புண்கள் (Peptic Ulcer) :** இது ஜீரண உறுப்புகளில் உண்டாகும் புண் பொதுவாக இது சிறு குடலில் முதல் பாகத்தில் குறித்த காலங்களில் ஏற்படும் வலியுடன் சம்பந்தப்படுகிறது. வலி ஏற்பட்டுள்ள பாகங்களில் பலஹீனம் இருக்கலாம். இரைப்பையில் புண் ஏற்பட்டால் உணவிற்குப்பின் உடனே வலி உண்டாகும். உணவு எரிச்சலை உண்டாக்கும். ஆதலால் அங்கு வலியுள்ளது என்பதை அறியலாம். குடல் புண்ணில் உணவு எரிச்சலை உண்டாக்கும் குடல் புண்ணில் உணவு அருந்தி சுமார் ½ மணிக்குப் பிறகு வலி உண்டாகும். அதாவது உணவு குடலை அடையும் போது வலி உண்டாகிறது. இவ்விரு நிலைகளும் அது வயிற்றில் ஏற்படும் அதிக புளிப்புடன் பொதுவாக சம்மந்தப்படுகிறது. ஆதலால் காரப்பொருள்களும், இழுப்புகளை அகற்றும் மருந்தும் இந்நிலைகளில் பயன்படுகின்றன. மாக்னைன் தான் வயிற்றுப் புளிப்புக்கு ஏற்ற மருந்து. அது 4 மணிக்கு 1 தடவை கொடுக்கப்படுகிறது.



கேஸ்ட்ரோமன் உணவிற்கு 1 மணி முந்தியாவது உணவிற்கு 2 மணி பின்னேயாவது கொடுக்க வேண்டும். இப்பேர்ப்பட்ட நோயாளிகள், ஆல்காஹாலையும் புகைப்பிடித்தலையும் தவிர்க்க வேண்டும். ஆகார வாசனையூட்டும் வாசனை திரவங்கள் இல்லாமல் சாத்வீகமாக இருக்க வேண்டும். அதை நன்றாக மென்று தின்ன வேண்டும். இந்த நோயாளிகள் உணவிற்கு முன் பாலையும் உணவிற்கு ½ மணி அல்லது 1 மணிக்குப் பிறகு தாராளமாக தண்ணீரையும் குடிக்கவேண்டும். மருத்துவ சிகிச்சை 6 மாத காலத்திற்குத் தொடரவேண்டும். மிகவும் கடுமையான நிலைகளில் வலி கடுமையாக இருக்கும். வாந்தி எடுப்பதால் சில சமயங்களில் வலி குறையும் மருத்துவசிகிச்சையால் நல்ல பலன் இல்லையெனில் ரண சிகிச்சையை பின்பற்ற வேண்டும்.

**இரைப்பையில் வலி, சுழற்சி (Gastritis) :**

இது பொருந்தாத ஆகாரம் சாப்பிடுவதால் ஏற்படும் கோளாறு இதன் அறிகுறிகள். வாந்தி, வயிற்றுவலி, வறட்சி, இவை குடல் பாகத்தில் இருந்தால் வயிற்றுப்போக்கு, கடும் வறட்சி, வீழ்ச்சி ஏற்படலாம். இப்பேர்ப்பட்ட நோயாளிகளுக்கு, மிகவும் ஜாக்கிரதையாகச் சிகிச்சை அளிக்கவேண்டும். பனிக்கட்டித் துண்டுகளைச் சாப்பிடுவதால் வாந்தியை ஓர் அளவுக்குக் கட்டுப்படுத்தலாம். வயிற்றுப்போக்கால் ஏற்படும் வலிக்கு பின்வருமாறு சிகிச்சை அளிக்கவேண்டும்.

கொஞ்ச காலத்திற்கு ஒரு ஆகாரமும் சாப்பிடக் கூடாது ஆனால் தண்ணீரையும் மற்ற சாத்வீகமான திரவங்களையும் மாக்னைனுடன் சிறு அளவுகளில் சாப்பிட்டு வரலாம். டயாசினை 4 மணிக்கு 1 மாத்திரையாக சாப்பிட்டால் வயிற்றுப்போக்கு கட்டுப்படும். நாள்பட்ட அறிகுறிகள் தணிந்ததும் பால், கஞ்சி, பழரசம், பாயாசம், போன்ற இலேசான உணவை 3 அல்லது 4 மணிக்கு ஒரு தடவை ஆல்போஸாங்களுடன் கொடுக்கலாம்.

**வயிற்றுப்போக்கு (Diarrhoea) :** வயிற்றுப்போக்கு என்பது தண்ணீராக அடிக்கடி மலம் கழிவது. இது பலவிதமான காரணங்களால் ஏற்படும் (உ.ம்.) அஜீரணம் அல்லது குறிப்பிட்ட தொற்றுவியாதி (அமீபா என்ற விஷக் கிருமிகளாலோ அல்லது பேஸில்லஸ் என்ற விஷ கிருமிகளாலோ தோன்றும் வயிற்றுக்கடுப்பு) எப்படியிருப்பினும் காரணத்தை அறிந்து சிகிச்சை செய்ய வேண்டும். அமீபா பேஸில்லஸ் விஷக்கிருமிகளால் தோன்றும் வயிற்றுக்கடுப்புக்கு டயாஸின் பயனள்ள மருந்து அமீபா விஷக்கிருமிகளால் வயிற்றுக்கடுப்புக்கு அறிகுறிகள் அடிக்கடி பாதி திடரூபத்தில் மலங்கழித்தல் (வயிற்றில் வலி, சில சமயங்களில் திருகுவலி) இரத்தமும், கோழையும் கூடிய மலம், பேஸில்லஸ் விஷக்கிருமிகளால் தோன்றும் வயிற்றுக் கடுப்புக்கு மேற்கூறிய அறிகுறிகளுடன் மலங்கழித்தல் திரவ ரூபத்திலும், ஆதலால் உடலில் நீரின்மையும் காணப்படலாம். புதிதாக கழிக்கப்பட்ட மலத்தைப் பூதக் கண்ணாடியால் பரீட்சை செய்து வியாதி என்ன என்பதை நிர்ணயிக்கலாம்.

டயாஸினை 4 மணிக்கு 1 தடவை கொடுக்கவேண்டும். நோயாளியை படுக்கையில் குளிரோட்டமாக வைத்துக் கொள்ள வேண்டும். திரவ ஆகாரம் மட்டும் கொடுக்க வேண்டும். இப்பேர்ப்பட்ட நோயளிகளுக்கு சாத்வீகமான ஆகாரம் அல்லது பாலில் காய்ச்சிய கஞ்சி தேவை. சுகாதார வழிகளைப் பின்பற்ற வேண்டும். அதாவது ஆரோக்கிய வழிகளைப் பின்பற்ற வேண்டும். அதாவது ஆரோக்கிய வாழ்க்கை வசதிகள் உணவை அசுத்தப்படாமல் பாதுகாத்தல், ஈக்களை ஒழித்தல் முதலியன. பேஸில்லரி வயிற்றுக் கடுப்புக்கு டயாஸின் மாத்திரைகளுடன் டயாஸின் ஊசி மருந்தும் கொடுக்கலாம். வயிற்றுப்போக்கு நின்ற பிறகு கூட 3 நாட்களுக்கு டயாஸின் மாத்திரைகளை தொடரலாம். அல்லது டயாஸின் ஊசி மருந்தை வியாதி குணமடையும் வரைக்கும் 24 மணிக்கு 1 தடவை 1 மி.லி. கொடுக்கலாம். கோடைக்கால வயிற்றுப்போக்கிற்கு கேஸ்டரோமோனும் சினியம்கோவும், எலுமிச்சை சாறுடன் கொடுத்தல். மிகவும் பயன் தரும். வயிற்றுப் போக்கு நின்ற பிறகும், பசி எடுக்கவும் ஜீரணக் கோளாறுகளைத் தடுக்கவும் சால்பாஸை சிறய அளவுகளில் கொடுக்கலாம்.

**குடல்வால் சூழற்சி (Appendicitis) :** இது ஒரு கடுமையான நிலையிலுள்ள வியாதி, வைத்தியரின் உடனடியான கவனம் தேவை. பென்சிலின் வகையறாக்களுடன் கூடிய மருந்துவ சிகிச்சை ஏற்றது. இப்பேர்ப்பட்ட நோயாளிகளை அறுவை சிகிச்சை மருத்துவரிடம் அனுப்ப வேண்டும் இனிமாவும், பேதி மருந்துகளும் கொடுக்கக் கூடாது.

**அதிசாரம் (Sprue):** இது ஒரு விதமான பேதி, ஒளிந்தும் பதுங்கியும் தோன்றும் வயிற்றுப் போக்கு, பொது பலஹீனம் எடைக்குறைவு இவ்வறிகுறிகளால் ஏற்படும் ஒழுங்கீனமான உட்கிரகித்தல், மலம் மங்கலாகவும் ஜாஸ்தியாகவும் இருக்கும் நுறையுடனும், எண்ணெப்பசையுடனும் கூடியதாகவும் இருக்கும். இதற்குப் பல கட்டங்களில் சிகிச்சை அளிக்கலாம்.

1) உணவு சம்பந்தமான சிகிச்சை 2) உடலின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்வதன் மூலம் சிகிச்சை, 3) நோய் நீங்கி பூரண சொஸ்தம் அடைய சிகிச்சை இதற்கு ஒரு கேஸ்ட்ரோமோன் மாத்திரையும் ஆல்போஸாங்கும் வைட்டாஸானும் உணவுக்கு முன் இரண்டு வேளையும் சாப்பிடுமாறு சிபாரிசு செய்கிறோம். பழங்களும், பால் ஆகாரமும் சாப்பிட்டு வந்தால் நல்ல குணம் ஏற்படும். மாவு பதார்த்தங்களையும் கொழுப்புள்ள ஆகாரங்களையும் கட்டுப்படுத்த வேண்டும்.

**குடல்வலி (Intestinal Colic) :** இது குடல்களில் இழுப்புடன் கூடிய வலி ஆகும். இது சாதரணமாக மலச்சிக்கல் காரணமாகவோ அல்லது குடல்வீக்கம் காரணமாகவோ உண்டாக்கலாம். சிறுகுடல் முறுக்கு அடைகிறதால் வலி உண்டாகிறது. அது வயிற்றின் அடிப்பாகங்களில் உண்டாகும். அது அழுத்தும் விசையால் நிவர்த்தி செய்யப்படும். சில சமயங்களில் அது வயிற்றுப்போக்குடனோ அல்லது மலச்சிக்கல் உடனோ கூடி பின்பற்றி வரலாம்.



இப்பேர்ப்பட்ட நோயாளிகளுக்கு மிதமான வெப்பமும் அமைதியும் உள்ள இடத்தை அளிக்க வேண்டும். ஒரு ஆகாரமும் கொடுக்கக் கூடாது. நோய்க்கு காரணத்தை அறிந்து அதற்குத் தக்கவாறு சிகிச்சை செய்யலாம். அது வீக்கமாக இருந்தால் மருத்துவ வசதி அளிக்கப்படவேண்டும். அல்லது சுடுநீர் குப்பிகளைக் கொண்டு வெதுவெதுப்பான ஒத்தடம் கொடுத்தால் வாயு வெளியேற்றப்படும். சால்பாஸ் வாயுப் பொறுமலைக் கண்டிக்கும். இதே மாதிரி, மலச்சிக்கலையும் கண்டிக்கும் வயிற்றுப்போக்கிற்கு டயாஸின் கொடுக்கவேண்டும்.

**கல்லீரல், மண்ணீரல் (Lever-Spleen) :** மாவுப் பொருள்கள் புரதம், கொழுப்பு ஆகியவற்றின் மாறுதல்களில் முக்கியத்துவம் பெற்றிருப்பது இன்றியமையாத உறுப்பாகிய கல்லீரல் ஆகும். கல்லீரல் பெருக்கம் பல காரணங்களைக் கொண்டது. (உ.ம்.) கல்லீரல் சம்பந்தமாக பசியின்மை, உலோக ருசி, பித்த உபத்திரவம், மலச்சிக்கல் அல்லது வயிற்றுப்போக்கு உண்டாகும். சிகிச்சைக்கு முன் எந்த வியாதி ஏற்பட்டு இருக்கிறது. என்பதை அறிவது அவசியமாகும். இவ்வித நோயாளிகளுக்கு புரதம் நிறைந்த உணவு பழரசம், வெண்ணெய் எடுக்கப்பட்ட பால், குறிப்பிட்ட கால அளவுகளுக்குத் தேவை. சிகிச்சைக்கு பின் வெற்றி, உணவு செறித்தலைப் பொறுத்தது. நோயாளிக்குப் பூரண ஓய்வும் மன அமைதியும் தேவை. ஆல்கஹால் எண்ணெயில் பொறித்த பொருட்கள் நன்கு வாசனையிடப்பட்ட பொருட்கள் இவற்றை நோயாளிகள் முற்றிலும் விலக்க வேண்டும். சரிவர மலங்கழித்தல் வேண்டும். நல்ல பசி, ஜீரணம் இவை குணத்தின் அறிகுறிகள் இதற்கு சால்பாஸ், கேஸ்ட்ரோமோன், ஹெர்பிட்டார்ஸ் மிகவும் உதவி அளிக்கும். இதே மருந்துகளை குழந்தைகளுக்கு சிறிய அளவுகளில் கொடுக்கலாம். வியாதினின்று மீண்டும் ஆரோக்கியமடையும் காலத்திற்கு ஆல்போஸாங் நல்லது.

**பித்த நீர்க் குழாயில் கற்கள் (Gallstones) :** சில சமயங்களில் பித்த நீர்க்குழாயில் கற்களின் அபிவிருத்தி பிரச்சனை உண்டாக்கலாம். சில சமயங்களில் பித்த நீர்க்குழாயில் செயல் பட முடியாதபடி கற்கள் பெரியதாயிருக்கும். இம்மாதிரி ஏற்பட்ட நோயளிகளுக்கு வலி உண்டாகிறது. இதற்கு திருகுவலி என்று பெயர். இந்த வலி திடீரென்று வலது மார்பின் எலும்புக் கூடு ஓரத்திலும் தோளிலும் ஏற்பட்டு மிகவும் துன்பப்படுத்தப்படுகிறது. வலி மிகவும் கடுமையாக இருந்தால் சரீர நடுக்கம் ஏற்பட்டு வியர்வை கொட்டி நாடித்துடிப்பு துரிதமாகவும், தாழ்ந்தும் அடிக்கும் சர்மம் வெளுத்துப் போய் காமாலை பீடிக்கச் செய்து கண்கள் மஞ்சள் நிறமடையும் இழப்புகள் வராதபடி சிகிச்சை அளிக்க வேண்டும். சரியான உணவு அவசியமானது. ஹெர்பிட்டார்ஸ் கொடுத்து சரிவர மலம் கழியச் செய்யலாம். அளவுக்கு மிஞ்சி சாப்பிடக் கூடாது. கொழுப்புப் பதார்த்தங்களைக் கட்டுப்படுத்த வேண்டும் காய், கறிகளையும் பழங்களையும் தாராளமாக சாப்பிடலாம். நடத்தல் போன்ற தேகப்பியாசம் நல்லது.

**மண்ணீரல் (Spleen) :** பருத்த மண்ணீரல், மலேரியாவினால் ஏற்படும் சாதாரண, சிக்கல் இதற்கு ஹெர்பிட்டார்ஸ் இவற்றைக் கொண்டு, சுமார் 2

வாரங்களுக்கு சிகிச்சை அளிக்கவேண்டும். இரத்த சோகை, பலஹீனம், பசியின்மை இவைகளுக்கு ஆல்போஸாங் ஒரு நல்ல டானிக் ஆகும்.

**தொற்று நோய்கள் (Infections) :** மலேரியா (Malaria) என்பது பெண் கொசு கடிப்பதால் உண்டாகும் ஒரு தொற்று நோய். அது கடுமையாகவோ அல்லது நாள்பட்டதாகவே இருக்கலாம். இந்த நோய் கடுமையாக வந்தால், நடுக்கம், நல்ல ஜீரம், வியர்வை கொட்டுதல் இவற்றைக் காணலாம். நோய் ஒரு நாள் விட்டு ஒரு நாள் அல்லது 4 நாட்களுக்கு 1 தடவை வரும்.

மலேரியாவின் அறிகுறிகள் கடுமையான மவேரியாவுக்கு மூன்று நிலைகள் உண்டு. அவை 1. குளிர் நிலைமை, 2. உஷ்ண நிலைமை, 3. வியர்வை நிலைமை.

1. குளிர் நிலைமை : இது கால்மணி முதல் 2 மணி வரை நீடிக்கும். நோயாளிக்கும் குளிர் நடுக்கத்துடன் தலைவலி, கை, கால், முதுகு, முதலியவைகளிலும் வலி காணும். நடுக்கம் வரும்பொழுது பல் வரிசைகள் அடிக்கத் தொடங்கும் கடுமையான குளிரும் ஏற்படும்.
2. உஷ்ண நிலைமை : இது சாதரணமாக 4 மணி நேரம் நீடிக்கும் தேகம் பூராவும் உஷ்ணம் பரவும் நிலை உணரக்கூடும். இத்துடன் அடிக்கடி உணர்ச்சியின்மை அல்லது ஜன்னி காணப்படும்.
3. வியர்வை நிலைமை இது 1 முதல் 2 மணி நேரம் நீடிக்கும் வியர்வை அதிகமாகி ஜுரம் குறையும் அசௌகரியம், வலி இவை தணியும். இம்மாதிரி அந்தந்த மலேரியா கிருமிகளின் விதத்தைப் பொறுத்து தினந்தோறும் 2 அல்லது 3 நாட்களுக்கு ஒரு தரம் அல்லது நாலாவது நாள் வரக்கூடும்.

**வெள்ளை வெட்டை (Gonorrhoea) :** இது ஒரு மேக நோய். இதில் சிறுநீரகக் குழாயும் மற்ற உறுப்புகளும் சம்பந்தப்படுகின்றன. நீர் தாரைகள் வீங்கியிருக்கும். எரிச்சல் காணும் மேகநீர் ஒழுக்கு ஏற்படும் உடனடியாகச் சிகிச்சை செய்தால் இவ்வியாதியைத் தடுக்கலாம். அலட்சியமாக இருந்து விட்டால் இது நாள்பட்ட கேஸாக மாறி குழாயின் துவாரம் குறுகி, மூட்டு வலி, கண்ணையும், இதயத்தையும், சம்பந்தப்படுத்தி பல சிக்கல்களை உண்டாக்குகிறது. இப்பேர்ப்பட்ட கேஸ்களில் அயோபினும், பிராம்டைனும் நாளைக்கு இரண்டு மாத்திரைகள் வீதம் 2 முதல் 3 மாத்திரைகள் வரை கொடுக்கலாம். ஆல்போஸாங் நாள்பட்ட கேஸ்களில் ஏற்படும் பலஹீனத்தை சமாளிக்க உதவுகிறது. எரிச்சலுக்கும் மேகநீர் ஒழுக்குக்கும் ஹெமோப்பிளெக்ஸ் மாத்திரை 4 மணிக்கு 1 மாத்திரை வீதம் கொடுத்தால் பயனளிக்கும் அடிக்கடி சீழுக்காக சிறுநீர்ப் பரிசோதனையும் சோதனைகளுக்காக நுண்ணிய கிருமிகளை பரிசோதித்து கண்டறிதலும் அவசியமாகும். சீழ் மட்டும் நின்று விட்டால் வியாதி குணமடைந்து விட்டதாகக் கருதக்கூடாது.



ஸ்திரீகளுக்கு வெள்ளை வெட்டை ஏற்பட்டால் அதற்கு உள்ளும், வெளியும் தீவிர சிகிச்சை அளிக்கவேண்டும். சுத்தமாக இருப்பதைக் கவனிக்க வேண்டும். ஆண்களுக்கு கூறியபடி மற்ற சிகிச்சையும் அளிக்க வேண்டும். உணவுப் பழக்கங்களை சீர்படுத்த வேண்டும். உணவு இலேசாக இருக்க வேண்டும். ஆல்கஹாலை தவிர்க்க வேண்டும். 6 மணிக்கு 1 தடவை ஆல்போ ஸாங் கொடுக்கலாம்.

**மேக கிரந்தி (Syphilis) :** இது டிரிபோனிமா பல்லாடும் என்ற ஒரு உயிருள்ள பொருளால் ஏற்படும் ஒரு தொற்று நோய். இதைப் பல கடுமையான நாள்பட்ட பிறவிச் சிக்கல்களால் கண்டு கொள்ளலாம். முதலில் உடல் உறவு கொண்ட சில தினங்களுக்குப் பிறகு சிரங்கு காணப்படுகிறது. இது பரவி கடினமாகிறது. பக்கத்திலுள்ள கிரந்திகளும் பெரியதாகி விடுகின்றன. இது தான் முதற்கட்டம் எனப்படும். இரண்டாவது கட்டத்தில் கிரந்திகள் பெருகி மற்ற அமைப்புகளில் ஜீரம் வீக்கம், பொதுவான தேக அசௌகரியம் இவை காணப்படுகின்றன. மூன்றாவது கட்டத்தில் நரம்பு மண்டலத்தில் பாரிச வாயு போன்ற சிக்கல்கள் காணப்படுகின்றது. இதன் சிகிச்சைக்கு அயோபின் ஏற்ற மருந்தாகும். அயோபின் இன்ஜெக்ஷனை 1 நளைக்கு 1 தடவையாக 1 வாரம் கொடுக்கலாம். பிறகு அயோபின் மாத்தியைத் தொடரலாம். புண்ணுக்கு ஹெமோப்பிளக்ஸ் களிம்பு தடவலாம். ஹெமோவிளக்ஸ் மாத்திரையை வேளைக்கு ஒன்றாக தினம் 3 அல்லது 4 வேளைகளில் சாப்பிடலாம். புண் மறைந்ததும் ஒரு நாளைக்கு 2 மாத்திரைகளாகக் குறைத்து கொள்ளலாம். கொஞ்ச காலத்திற்கு இத்துடன் அயோபின் கடுமையான மேககிரந்தி கேஸ்களுக்கு மட்டுமல்லாமல் நாட்பட்ட கேஸ்களில் சரீரத்தில் மறைந்திருக்கும் கேஸ்கள், பிறந்த காலத்திலிருந்தே பீடிக்கப்பட்ட கேஸ்களுக்கும் நல்ல மருந்தாகும்.

**மார்பு சுவாசப் பகுதிகளில் சம்பந்தப்பட்ட தொற்று வியாதிகள் (Chest and Lung Infection)** : பிராங்கைடிஸ் என்பது மார்புக்கூட்டின் மேல்பாகத்தில் உண்டாகும் தொற்று நோய் இது முதலில் மார்புக் கூட்டின் மேல் பாகத்தில் பிடிப்பு இருக்க இருக்க உணர்ச்சியுடன் கூடிய பொது அசௌகரியத்துடன் ஆரம்பமாகிறது. இருமல் உலந்ததும். ஜீரம் அதிகரித்தும் காணப்படும். கிரா‌மமாக, உலர்ந்த இருமல் ஈரப்பசையுடன் கூடிய இருமலாக மாற்றப்படலாம். அப்போது மூச்சுத் திணறலும், மார்புக் கூட்டில் ஒருவித கிறுகிறு சப்தமும் ஏற்படும். இந்த நிலையில் காப்லினும் 4 மணிக்கு 1 தடவை எடுத்துக் கொண்டு தீவிர சிகிச்சை பெற வேண்டும். ஜுரம் மிகவும் கடுமையாக இருந்தால் ஹெமோப் பிளெக்ஸ் சேர்த்துக் கொள்ளலாம். நோயாளி சில நாட்களுக்கப் படுக்கையிலேயே இருக்க வேண்டும். அவனுக்குப் போதுமான அளவு தண்ணீரும் பால் போன்ற மற்ற திரவங்களும் கொடுக்க வேண்டும். செஸால் அல்லது ருப்ஸானை மார்பிலும் முதுகிலும் தேய்த்தல் மிக்க பலனை அளிக்கும். இது ஒத்தடம் கொடுத்தலின் அவசியத்தை நிவர்த்தி செய்கிறது. நாள்பட்ட பிராங்கைடிஸ் ஆனால் மெடிடாப் சிபாரிசு செய்யப்படுகிறது.

**பிராங்கைடிஸ் வியாதியின் அறிகுறிகள் :** மார்புக் கூட்டின் மேல் பாகத்தில் பிடிப்பு, பண்படாத உணர்ச்சியுடன்கூடிய பொது தேக அசௌகரியம் ஆகியவற்றால் இந்த வியாதி ஆரம்பமாகிறது. முதலில் இருமல் வறண்டும், வலியோடும், இருக்கும். பின்னால் ஜுரம் அதிகரிக்கும் பொழுது சுவாசம் ஆழ்ந்தும் இருமல் சளியுடன் காணப்படும். பிறகு இருமல் தளர்ச்சியடைய வலியும் குறைகிறது. ஜுரம் அதிகரிக்கலாம். மார்புக் கூட்டில் ஒரு வித கிறுகிறு சப்தத்துடன் மூச்சு திணறல் சங்கடமான நிலையை அடையலாம்.

**புளூரசி (Pleurisy) :** இது மார்பு பாகத்தில் முதலில் கடுமையான குத்து வலியுடன் ஆரம்பமாகிறது. மூச்சுவிடும் போதும் இருமல் ஏற்படும் பொழுதும் வலி அதிகமாகயிருக்கும். வியாதி முதலிலேயே கடுமையாக ஆரம்பித்து ஜுரம் ஏறக்குறைய 101F வரை போகும். நுரையீரலில் இருந்து ஒரு விதமான திரவம் வெளிவர ஆரம்பிக்கும் பொழுது வலி குறைகிறது. ஆனால் முச்சு விடுவதில் அவஸ்தை குறைவதில்லை. ஜுரம் அதிகமாகத் தான் இருக்கும். கொஞ்சம் இருமலும் இருக்கும் அதிக வியர்வை கொட்டுதலும் ஜுரம் தீவிரமாகவும் கடுமையாகவும் இருந்தால் ப்ளூராத் தோல்களின் இடையே சீழ் ஏற்படுகிறது என்று சந்தேகத்திற்கு இடமாகிறது. அது மருத்துவ சோதனைகளால் தற்காலிகமாக நிர்ணயிக்கப்படுகிறது. மார்பின் போட்டோ படம் முடிவான நிர்ணயத்திற்கு அவசியமாகும்.

**ஷயரோகம் (Tuberculosis) :** நோயாளிக்கு ஷய ரோக ஆரோக்கிய சாலையில் தகுந்த மருந்துவர்களைக் கொண்டு சிகிச்சை செய்வது மிகவும் நல்லது. அவர்களுக்கு ஓய்வும் நல்ல சத்துணவும் தேவை. முக்கியமாக ஜுரம் இருக்கும் போது தனிப்பட்ட சத்துள்ள உணவும் அவசியம் நோயின் ஆரம்ப காலத்தில் நோயாளிக்கு பலகீனமும் களைப்பும் ஏற்படும். இரவில் வேர்வை அதிகமாயிருக்கும் பசி குறைவாயிருக்கும். தொந்தரவைக் கொடுக்கும். சிறிது இருமல் காணப்படும். இரத்த சோகை தான் முக்கியமான அறிகுறி வியாதி அதிகமாகும்போது. ஒவ்வொரு மாலையிலும் ஜுரம் ஏறிக்கொண்டு செல்லும். வியர்வை அதிகமாகி சரீரம் மெலிந்தும் காணப்படும். இருமல் வலியுடனும் மிகுந்த சப்தத்துடனும் வரும் காரித்துப்புகிற இருமலில் கோழை அதிகமான அளவிலும் இரத்தம் கலந்து காணப்படும்.

விசேஷமாக இந்த நோய் வந்தவர்களுக்கும் பொதுவாக எல்லா நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் தேக வலிமையைக் காக்க அல்போ ஸாங்கை உபயோகப் படுத்தும்படி சிபாரிசு செய்கிறோம். உண்மையிலேயே இந்த வியாதியின் ஆரம்ப காலத்தில் ஆல்போஸாங் மிகவும் பயன்படுகிறது. நோயாளியை ஷயரோக ஆரோக்கிய சாலைக்கு அனுப்ப முடியாவிட்டால் சுத்தமான காற்றுக்காக அவரை ஒரு தோட்டத்தில் வைத்திருக்கவேண்டும். இருமலுக்கு சிகிச்சைக்காக குறைந்த அளவில் மெடிடாப் கொடுக்கலாம். இரத்தமாக உமிழ்ந்தால் சினியம் கோவும், வைட்டாஸானும் கொடுக்கவும், எடைக்குறைவை நீக்க, பழரசம், பால் போன்ற ஆகாரம், டானிக்குகளும் கொடுக்கவும்.



**குத்திருமல் அல்லது கக்குவான் இருமல் (Whooping Cough) :**

இது சாதரணமாக குழந்தைப் பருவத்தில் ஏற்படும் ஒரு தொத்து நோய். இந்த வியாதிக்குரிய தனிப்பட்ட இருமல் சப்தத்துடன் கூடிய மூச்சுடன் காணப்படும். இது பொதுவாக கோழை கலந்த வாந்தியாகத் தொடரும். இருமலின் வேகம் இரவில் தூங்கும் முன்பும், சாப்பாட்டிற்குப் பிறகும் கடுமையாகிறது. இந்த நேரத்தில் கண்கள் இரத்தம் போல் சிவந்தும் வெளியே தள்ளுகிற மாதிரியும் காணப்படும். நோயின் கடுமைக்கு ஏற்றவாறு. பாதிப்புகளின் எண்ணிக்கையும் வேறுபடும். பொதுவாக வாந்தி உண்டாகும் வரைக்கோ அல்லது அதிகமான கோழை வெளிவரும் வரைக்கோ. நிவாரணம் உண்டாவதில்லை.

**கக்குவான் இருமல் அறிகுறிகள் :** இது குழந்தைப் பருவத்தில் ஏற்படும் ஒரு தொற்று வியாதி. இது குறைந்த இருமலுடன் சுரத்துடன் கூடிய ஜலதோஷமாக ஆரம்பமாகிறது. முதல் கட்டம் சுமார் ஒரு வாரம் நீடிக்கிறது. பிறகு இந்த வியாதிக்குரிய தனிப்பட்ட இருமல் காணப்படும் சப்தத்துடன் கூடிய மூச்சுடன் அடிக்கடி இருமல் குறைக்கிற மாதிரி காணலாம். பல தாக்குதல்கள் சகஜமாகப் பின்தொடரும். இவ்வித இருமலின் அவஸ்தை நிவர்த்தியாக வேண்டுமானால். கோழை பூராவும் வாந்தியாக வெளியேற வேண்டும். அல்லது மலத்துடன் சேர்ந்து கழிய வேண்டும். இந்த நோயின் வேகம் தூங்கும் முன்பும் சில சமயங்களில் சாப்பாட்டிற்குப் பிறகும் கடுமையாகிறது. இச்சமயங்களில் கண்கூடுகள் பெரிதாகி, இரத்த சிவப்பாயும் காணும், அடிவயிற்றில் வலியும் மூக்கிலிருந்து இரத்தப் பெருக்கும், இழுப்பு அல்லது அபூர்வமாக மூச்சடைப்பும் ஏற்படலாம். இது ஒரு தொத்து வியாதியாதலாலும்., குழந்தைகள் சுலபமாக பாதிக்கபடுவதாலும் அவ்வியாதியால் அவஸ்தைப் படும் குழந்தையைத் தனிமையான கதகதப்பான காற்றோட்டமான அறையில் படுக்கையில் வைத்திருக்க வேண்டும். வாந்தி அதிகமாயிருந்தால், பால் ஆகாரம் தான் கொடுக்க வேண்டும். உணவுக் கட்டுப்பாடு இலேசான உணவும் வாந்தியைத் தடுக்கும் டாஞ்சின் மாத்திரை தான் சரியான மருந்து இது இழுப்பு அல்லது மூச்சடைப்பை நீக்கி கோழையை பூராவும் வெளியே தள்ளுகிறது.

மேலும் கடுமையான இருமலின் வேகத்தைத் தடுக்க வைட்டஸானைக் கொடுக்கலாம். செஸாலை மார்பில் தடவினால் இருமலின் வேகத்தைத் தடுக்கும் சுரத்திற்கு டெசில் கொடுக்கலாம்.

**நீரிழிவு (Diabetes) :** இது கணையத்தின் கோளாறுகளில் சம்பந்தப்பட்டுள்ளது. அது மாவு பதார்த்தங்கள், புரதங்கள் கொழுப்புகள் ஆகியவற்றின் ஜீரண முறைகளைப் பாதிக்கும் இந்த வியாதியுள்ளவர்கள் அதிகமான தாகத்தையும், பசியையும் சிறுநீர்க் கழிவையும் காணுவார்கள். இவர்களுக்கு இரத்தித்தில் சர்க்கரை அதிகமாகவும் சிறுநீரில் சர்க்கரையும் காணப்படும். இந்த வியாதி ஜீரண உறுப்புகளில் கோளாறுகளினாலும் ஜீரண முறைகள் தவறுகிறபடியாலும் சம நிலைமை கெட்டு விடுகிறது. பசி அதிகமாயிருந்தும் தேகம் மெலிவடைந்து கொண்டு போகும். தசைப் பகுதி தளர்ச்சிடைந்து



J & J DeChane

உற்சாகம் இழுந்து எளிதில் கோபப்படுவார்கள். அவர்கள் வாய், உதடுகள், சர்மம் ஆகியவை வறட்சியடைகின்றன. இந்த வியாதி, இரத்த அழுத்தத்தையும் கண் பார்வையில் குறைகளையும் துரிதமாக சீரழிவு அடையும். மாறுதல்களையும் உண்டு பண்ணும். நரம்பு மண்டலமும் சில சமயங்களில் பாதிக்கப்படலாம் நீரிழிவுக்கு பொதுவாக 1) கட்டுப்படுத்தப்பட்ட உணவு, 2) ஒர் அளவுக்குட்பட்ட தேகாப்பியாசம், 3) மருந்துகள் இவற்றால் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஆகாரத்தை, நோயாளியின் எடையைப் பொறுத்தும் வியாதியின் கடுமையைப் பொறுத்தும் கட்டுப்படுத்த வேண்டும். அதிகமாக வேலை செய்பவர்களுக்கு அதிக ஆகாரம் தேவை. நீரிழிவு நோய்க்கு நடத்தல் ஒரு சிறந்த தேகாப்பியாசம் ஆகும். அவர்களுடைய உணவில் சக்கரை இல்லாத வெண்ணெய் எடுக்கப்பட்ட பால் ரொட்டி அல்லது சப்பாத்தி மற்றும் அரிசி ஆகியவையும் இருக்க வேண்டும் அதிக அளவு அரிசி, சர்க்கரை, மாவு பதார்த்தங்கள், உருளைக் கிழங்குகள், வாழைப் பழங்கள், மாம்பழங்கள் இவற்றை நிறுத்த வேண்டும். சிறுநீரில் சர்க்கரை சத்தும் வியாதியின் அறிகுறிகளும் மறையும் வரைக்கும், மேற்கூறிய உணவுகளை மிதமாக உட்கொள்ளவேண்டும். ஒன்று அல்லது இரண்டு தித்திப்பான எலுமிச்சை சாப்பிடலாம்.இதற்கு நேரடியான மருந்து மெர்ஸினா, தினசரி 3 வேளைக்கு 2 கேப்ஸ்யூல்கள் வீதம் சாப்பிடலாம். சிறுநீரில் சர்க்கரை சத்து குறைந்தும் மேற்படி கேப்ஸ்யூல்களை வேலைக்கு ஒன்று அல்லது இரண்டாக தினசரி 2 வேளைகள் சாப்பிடலாம். இரத்தத்தில் சர்க்கரை சத்தின் அளவையும் அவ்வப்போது கவனித்துக் கொள்ள வேண்டும். உற்சாகமின்மை, மனத்தளர்ச்சி இவற்றின் காரணமாக நரம்பு மண்டலத்தில் கவனம் செலுத்த வேண்டும். இதற்கு மெர்ஸீனாவுடன் வைட்டஸானையும். நாம் சிபாரிசு செய்கிறோம். எடைக் குறைவுக்கும், தசையின் வளர்ச்சிக்கும் ஒன்று அல்லது இரண்டு வேளைகள் ஆல்போ ஸாங் மாத்திரைகள் மிகவும் பயனளிக்கும். இந்த அறிகுறிகள் எல்லாம் புரதச் சத்தின் குறைவால் ஏற்படலாம். ஆதலால் நீரிழிவு நோயாளிகளுக்கு அதிக புரதச் சத்துள்ள உணவும், ஒரளவுக்குட்பட்ட தேகாப்பியாசமும் நன்மை பயக்கும்.

**உடல் வீக்கம் (Dropsy or Oedema) :** இது இரண்டு வகைப்படும். 1. நீர்க்கோவை உள்ள உடல் பகுதிகளில் அழுத்தினால் குழி ஏற்படாது. 2. நீர்க்கோவை உள்ள உடல் பகுதிகளில் அழுத்தத்தினால் குழி ஏற்படும். முதல் வகை தைராய்டு சுரப்பின் குறைபாடுகள் காரணமாக இருக்கலாம். இரண்டாவது வகை மாரடைப்பின் காரணமாக இருக்கலாம். பாதங்களிலோ அல்லது தாழ்ந்த பாகங்களிலோ வீக்கம், மாரடைப்பின் காரணமாக இருக்கலாம். முகத்தில் வீக்கம் மூத்திர கோசங்களின் கோளாறுகளின் காரணமாக இருக்கலாம். வயிற்றில் திரவங்களின் சேர்க்கை, கல்லீரல் கோளாறுகளால் உண்டாகிறது. போஷாக்கு சம்பந்தமான வீக்கத்தை மாரடைப்பின் அடையாளங்களிலும், அறிகுறிகளாலும், அறியலாம். இதன் ஆரம்ப கேஸ்களுக்கு வைட்டமின் பி1, புரதச்சத்துள்ள உணவு, ஆல்போஸாங், இவற்றைக் கொண்டு சிகிச்சை செய்யலாம்.



மூத்திர கோசங்கள் பாதிக்கப்பட்டால், டுரைக்கோவும், கல்லீரல் பாதிப்புக்கு கைனோட்டோமைனும் இருதய பாதிப்புக்கு கிராண்டிக்கோவும் பயன்படுகின்றன. எல்லா கேஸ்களிலும், உப்பிலாப் பத்தியம் மிகவும் அவசியமாகும். எலுமிச்சை சாறும் பயன்படும். மேற்கூறிய சிகிச்சையும் படுக்கையில் முழுமையான ஓய்வும் சீக்கிரம் குணமளிக்கும்.

**கிரந்திகள் (Glands):** நிணநீர் கிரந்திகளின் வீக்கம் (1) இவை வலியுடன் கூடிய வீக்கத்துடன் காணப்படும் (உ.ம்) வீக்கம் உண்டாக்குகிற முறை இவ்வித கடுமையான நிலைக்கு பொதுவாக பென்சிலின் வகையறாவைக் கொண்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. (2) கிரந்திகள் பெருந்தும் வலியில்லாமலும் இருக்கலாம். இந்த நிலை அநேக வியாதிகளில் காணப்படுகிறது. அது புற்றுநோய் அல்லது தொற்று நோய் காரணமாகவோ அல்லது மற்ற நிலைகளின் காரணமாகவோ ஏற்படலாம். தகுந்த முறையில் வியாதியை நிர்ணயம் செய்வது மிகவும் முக்கியமானது. கிரந்திகள் பின்னியிருக்கலாம். (உ.ம்.) நிணநீர்ச்சுரப்பிகளில் வீக்கம் உண்டாகும் ஒருவகை நோய். ஷய ரோக கிரந்திகளுக்கு, ஷயரோகத்தைக் தடுக்கும் சிகிச்சை தேவை. சுத்தமான காற்று, சூரிய வெளிச்சம் பால் போன்ற சத்துள்ள ஆகாரமும் பழரசமும் ஆல்போ ஸா"கும் அவசியமானவை. சிவந்த வீக்கமுள்ள கிரந்திகளுக்கு பென்சிலின் வகையறா சிறந்த நிவாரணம். அது தானாகவே உடையும் வரை கத்தியை உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை. ஆயினும் ஏதாவது புண் இருந்தால் ரிப்பாண்டோவை மேலே தடவி கட்டுகட்டுதல் அவசியமாகும். புண் ஆறத் தாமதமானல் ஹீலி"டஸ்டை புண்மேல் தூவுதல் பயன் அளிக்கும். சிவந்த வீக்கமுள்ள கிரந்திகளுக்கு நாள்பட்ட நிலைகளுக்கு ஆல்போஸா", பால், பழரசம் இவற்றைக் கொண்டு சிகிச்சை அளிக்க வேண்டும்.

**சர்ம வியாதிகள் (Skin Affection) :** சர்ம வியாதிகள் கடுமையானதாகவும், நாள்பட்டதாகவும் இருக்கலாம். கடுமையான கேஸ்களுக்கு வியாதிக் கிருமிகளைக் கொல்லும் சக்தியாலும் பயன் அளிக்கும் மருந்துகளாலும், வீக்கங்களுக்கு வைத்து கட்டுவதற்காக தயார் செய்யும் மாவு அல்லது பிளாஸ்திரியாலும், சிகிச்சை செய்யலாம். சில நாள் பட்ட கேஸ்களுக்கு தேக சம்பந்தமான தொந்தரவுகளைச் சரிபடுத்த உள் மருந்து கொடுத்து சிகிச்சை அளிக்கவேண்டும். அயோபின் இரத்தத்தை சுத்தி செய்கிற மருந்து ஆல்போஸாங் பொதுவாக இரத்தத்தை விருத்தி செய்யும். எக்ஸிமாவினால் சர்மம் தடித்திருப்பதையும் பழைய தழும்புகளையம் ரிப்பாண்டோவை தடவுவதால், மிருதுவாகுவதோடு குணமும் செய்யலாம். சர்ம நோய்களுக்கு அயோபின் இன்ஜெக்ஷன் போடுவதால் நல்ல பலன் ஏற்படுகிறது என்று சமீபத்தில் நடந்த பரிசோதனைகள் மூலம் தெரிய வருகிறது.

சிரங்குகள் ஒரு சாதாரன சர்மநோயும், தொத்து நோயும் ஆகும். அது கடுமையான அரிப்புடன் கூடியதாகவும், சொறிவதானால் சில சமயங்களில் வீக்கமும் உண்டாகிறது. தேக ஆரோக்கிய விஷயத்திலும் பாதிக்கபட்ட சர்மத்தை சுத்தமாக வைப்பதிலும் கவனம் அவசியமாகும். அவசியமான போது

ஆடைகளையும் படுக்கை உறையையும் மாற்றிக் கொள்ள வேண்டும். மறுபடியும் தொற்று நோய் வராமல் இருப்பதற்கு, தேகம் சுத்தமாக இருத்தலைக் கவனிக்க வேண்டும். எரிச்சல் உண்டாக்க கூடிய சோப்புகளை உபயோகிக்க கூடாது. படுக்கப்போகும் பொழுது ரிப்பாண்டோவுடன், பத்துக்கு ஒன்று என்ற விகிதத்தில் ஹெர்ப்போஸல்பை கலந்து மேலே தடவலாம். மறுநாள் காலையில் இதைக் கழுவி விடலாம்.

**படர்தாமரை (Ringworm) :** இது ஒரு சர்ம வியாதி அது தேகத்தின் எந்த பாகத்தையும் பாதிக்கும். அது ஒரு சிறிய புள்ளியாக ஆரம்பித்து வட்ட வடிவமாகப் படர்கிறது. படர்தாமரை தாடை மற்றும் தலையின் மேல்பாகம் முதலியவற்றைப் பாதிக்கும் இரவில் ஸ்கின்மென்ட் களிம்பைத் தடவி காலையில் சுத்தம் செய்வதன் மூலம் குணம் அடையலாம். சர்மத்தில் வெண்மையான ஒரு தடிப்பு உண்டாவது (Psoriasis) இது நாள்பட்ட ஒரு சர்ம வியாதி இது தேகத்தில் எந்த பாகத்திலும் ஏற்படும். வட்ட வடிவமான வெண்மையான தடிப்புகளால் இவ்வியாதியை அறிந்து கொள்ளலாம்.

**எக்ஸிமா (Eczema) :** இது நாள்பட்ட சர்ம வியாதி இதன் கறுப்பு நிறத்தால் இதைக் கண்டு கொள்ளலாம் எப்பொழுதாவது இது தொற்றுப் பரவுவதால் தடிப்புகள் ஏற்படலாம். இதற்கு அயோபின் சிறந்த உள் மருந்து ரிப்பாண்டோவை சருமத்தில் நன்றாய்த் தடவ வேண்டும். ஹெர்போ ஸல்பை உள் மருந்தாகவும் அல்லது ஹெர்போஸல்பை ரிப்பாண்டோவுடன் 1 க்கு 4 வீதம் கலந்து களிம்பாகவும் உபயோகப்படுத்தினால் நல்ல பலனை அளிக்கும் வெண்ணெய், நெய், பேன்ற எண்ணெய் பதார்த்தங்களை ஹீலிங்டஸ்டுடன் கலந்து, களிம்பு மாதிரி செய்து காலையிலும் படுக்கப் போகும் பொழுதும். போட்டு வந்தால் சீக்கிரத்தில் உபாதையை நிவர்த்தி செய்யும். இப்பேர்ப்பட்ட கேஸ்களில் ஸ்கின்மென்டும் மிகவும் பயன்படுகிறது. நாள்பட்ட எல்லா சர்ம வியாதிகளுக்கும் புரதம் சத்துள்ள உணவு, எலுமிச்சை பழங்கள் வைட்டமின் C ஆல்போ ஸாங் ஆகியவற்றைக் கொண்டு சிகிச்சை அளிக்கலாம்.

**பேய்முஷ்டை (Urticaria) :** இதை சர்மத்தின் மேல் பாகத்தில் முளைமுளையாய் காணப்படும் வீக்கங்களாலும் அரிப்புத் தன்மையுடன் கூடிய சொறியாலும் அறியலாம். இது பொதுவாக சிறிது காலத்திற்கு ஏற்படினும் அடிக்கடி வரலாம். இது ஒரு வித அலர்ஜியால் ஏற்படும் விளைவு இது முட்டை அல்லது ஒரு வகை மீன் அல்லது உட்கொள்ளப்படும் மருந்து அல்லது உட்சுவாசிக்கும் பொருள்கள் அல்லது உணர்ச்சிவசப்படுதல் அல்லது ஒட்டுண்ணிதொற்றுதல் ஆகியவற்றுள் ஒன்றால் உண்டாகலாம். நாள்பட்ட அடிக்கடி வரும் வியாதிக்கு காரணம் என்ன என்பதைக் கண்டுபிடித்து அதனை நீக்க வேண்டும். மேற்கூறிய உணவுப் பொருள்களை நீக்குவதால் சுலபமாகப் பாதிக்கப்படும் மனிதனைக் காப்பாற்றலாம். நோயாளியின் ஆரோக்கியத்தை உயர்த்தி வியாதிக் கிருமிகளால் ஏற்படும் தீய சக்தியைக் குறைக்க வேண்டும். அதிகமான சரீர களைப்பையும் உணர்ச்சி வசப்படுதலையும் தவிர்க்க வேண்டும் கைனோடோமைன் மாத்திரைகளை



நாளுக்கு 3 அல்லது 4 வேளைகள் கொடுப்பதால் நல்ல நிவாரணம் கிடைக்கும். ஹமோப்பிளெக்ஸ் கொடுத்து அதை நிவர்த்தி செய்யலாம். ஜீரணம், சரிவர மலம் கழித்தல் இவற்றையும் கவனிக்க வேண்டும். மேற்கூறிய மருந்துகளுடன் ஆல்போ ஸாங்கும் சேர்ந்தால் நல்ல பலன் அளிக்கும்.

**கட்டிகள், காயங்கள் (Wounds and Cuts) :** இவைகளுக்கு உடனே விஷயத்தை முறிக்கும் மருந்தைக் கொண்டு கட்டுகட்ட வேண்டும். இதற்கு ரிப்பாண்டோவைத் தடவலாம். சீழ் ஏற்பட்டால் கட்டு கட்டுவதற்கு முன் சீழை நீக்க வேண்டும். குணம் ஏற்பட ஹெர்போஸல்ப் களிம்பைத் தடவ வேண்டும். புண் கசிந்து வந்தால் ஹீலிங்டஸ்டை மேலே தூவவும். எல்லா விஷமுள்ள காய்களுக்கும் ஹீமோபிளக்ஸை தினம் 3 வேளைக்கு 1 மாத்திரை வீதம் கொடுக்கலாம்.

**நகச்சுற்று (Whitlow) :** இது கட்டைவிரல் அல்லது விரலின் வீக்கத்துடன் ஏற்படும் ஒரு கடுமையான தொற்று நோய், நகச்சுற்று பரவலாகவும் வலியுள்ளதாகவும் இருந்தால் ரண சிகிச்சையைப் பின்பற்ற வேண்டும். எலுமிச்சை பழங்களை சாப்பிடுவதால் பயன் ஏற்படும்.

**கணைச்சூடு (Rickets) :** இது வைட்டமின் D சத்துக்குறைவினால் தேவையான அளவு கால்ஷியம் கிடைக்காமையாலும் ஏற்படுகிறது. வளரும் குழந்தைகளிடம் இந்த நிலையை சாதரணமாகக் காணலாம். கருவுற்றிருக்கும் போதும் அல்லது பால் சுரத்திலின் போதும் கொடுக்கப்படும் சத்துக்குறைவான ஆகாரத்தின் காரணமாக வைட்டமின் D குறையலாம். குழந்தைகளுக்கு முதலில் ஏற்படும் அறிகுறிகள் ஓய்வின்மை தலையில் அதிகமாக வியர்வை கொட்டுதல் எரிச்சல் இவைகளைக் காணலாம். எலும்புகளின் முதலில் ஏற்படும் மாறுதல்கள் எலும்பின்நுனி பாகங்கள் தடித்திருத்தலே பற்கள் முளைக்க தாமதமாகும். குழந்தை நடந்து செல்லக் கூடிய பருவம் எய்தினாலும். வயிறு பானை போன்று முன் தள்ளிக்கொண்டும் கால்கள் வளைந்தும் முட்டுக் கணுக்கள் ஒன்றுக்கொன்று அடித்துக் கொண்டும் மற்றும் வேறு அங்க விகாரங்களுடன் காணப்படும். இது தாய்ப்பால் இல்லாமல் வளரும் குழந்தைகளிடம் காணப்படும் ஒரு சாதாரண அம்சம் கணைச் சூடுகளைத் தவிர்க்கவும் குணப்படுத்தவும் முடியும். ஆல்போஸாங், கால்சியம் சத்துடன் கூடியுருப்பதால் இப்பேர்ப்பட்ட கேஸ்களில் மிகவும் பயன்படுகிறது. அதைப் பாலுடன் தினமும் 2 வேளை கொடுக்க வேண்டும். சிறு குழந்தைகளுக்குத் தாய்ப்பால் பயனள்ளது. ஆதலால் தாய்க்கு வைட்டமின் D மற்றும் கால்சியம் அடங்கிய சத்துள்ள உணவு கொடுக்க வேண்டும்.

**வீரிய விருத்தி குறைவு அல்லது ஆண்மையில்லாமை (Sexual insufficiency or Impotency) :**

இயற்கையான உடல் உறவு ஆசை தானதாகவே ஏற்படும். இதை ஒரு கெடுதலும் இல்லாமல் முறைப்படி திருப்தி செய்து கொள்ளலாம். இது இருவருக்கும் அனுகூலமானதே. இதை அளவுக்கு மிஞ்சி துஷ்பிரயோகம்



J & J DeChane

செய்தால் வீரியக்குறைவு மட்டுமன்றி நரம்பு மண்டல பாதிப்பையும், மனோபலக் குறைவையும் ஏற்படுத்தும்.

தேக பலஹீனம் நரம்புத் தளர்ச்சி அல்லது பாதிக்கப்பட்ட மனநிலை அல்லது தொற்று நோயின் பாதிப்பினாலும் வீரிய விருத்திக் குறைவு ஏற்படலாம். அஜீரணம் கல்லீரல் கோளாறுகள் வெள்ளை வெட்டை, மேக கிரந்தி போன்ற மேக வியாதிகள் காரணமாகவும் இருக்கலாம்.

**சிகிச்சை (Treatment) :** நோயாளியின் சரித்திரத்தை கவனத்துடனும், கருணையுடனும், கேட்டால் காரணத்தைக் கண்டுபிடிக்க உதவும் வீரிய விருத்திக்கு ஆகாரபோஷணை முக்கிய பங்கை வகித்துள்ளது. ஜீரண கோளாறுகளைச் சரிபடுத்த வேண்டும். நோயாளிகள் முறையான தேகாப்பியாசம் பயில வேண்டும். முறையற்ற உடல் உறவில் ஈடுபடக் கூடாது. சென்ஸைன் உடல் உறவு விஷயத்தில் சாந்தமான ஊக்கம் ஊட்டுகிறது. வேளைக்கு 2 மாத்திரைகள் வீதம் தினம் 3 வேளைகள் எடுத்துக் கொள்ளலாம். ஆல்போ ஸாங்கை பாலுடன் சோத்து காலையிலும், மாலையிலும் டானிக்காக உபயோகப்படுத்தலாம்.

**இரவில் ஆண்களின் இந்திரிய ஸ்கலிதம் (Night Emissions in males) :**

இரவில் இந்திரிய ஸ்கலிதம் ஆவதால் அநேகம் பேர் அனாவசியமாய் கவலையடைகிறார்கள் சிறுவர்களுக்கு வாரத்திற்கு ஒரு வேளை ஸ்கலிதமானாலும் அதை இயற்கையாவே கருதலாம். பல வருஷங்களாக பால்ய சேஷ்டையால் கெட்டு அதனால் அது ஒரு வியாதியாக ஏற்பட்டுவிடுகிறது. இம்மாதிரி கேஸ்களிலும் கவலைப்பட அவசியமில்லை. தவறாமல் மோர், எலுமிச்சை சாறு, பழங்கள் இவற்றை உட்கொள்ளுவதாலும், தற்காலிகமாக, மாமிச உணவை விலக்குவதாலும் இதைத் தடுக்கலாம். நோயாளி ஆல்கஹாலை அருந்தக் கூடாது, இப்பேர்ப்பட்ட நோயாளிகளின் காலையில் பாலுடன் ஆல்போ ஸாங்களையும், இரவில் ஒன்று அல்லது இரண்டு மாத்திரைகள் நிவாஸையும் உட்கொள்ள வேண்டும்.

**சிறுநீரில் பாஸ்பேட் (Phosphaturia) :**

சிறுநீரில் நிறைய பாஸ்பேட் கலந்து போனால், வேளைக்கு 1 மாத்திரை வீதம் நாளுக்கு 2 வேளைகள் வைட்டாஸானும் படுக்கப் போகும் பொழுது நிவாஸ் 2 மாத்திரைகளும் எடுத்துக் கொள்வது நல்லது.

**சொப்பனஸ்கலிதம் (Spermatorrhoea) :**

சிறுநீரில் பாஸ்பேட் கலந்து போவது சொப்பனஸ்கலிதம் என்று தவறுதலாக கருதப்படுகிறது. மோரும் பழங்களும் சிறுநீரில் பாஸ்பேட்டைக் குறைக்கும். ஒரு நளைக்கு 2 வேளை ஆல்போஸாங்கை கொடுக்கலாம். சொப்பனஸ்கலிதம் ஆண்மைக் குறைவுடன் சம்பந்தப்பட்டிருந்தால் சென்ஸைனை சிறு அளவுகளில் கொடுக்கலாம்.



**ஆஸ்துமா (Asthma) :** பிராங்கியல் ஆஸ்துமா என்பது குறுகிய மூச்சுக்களை குழல்களில் காற்று செல்ல உண்டாகும் அதிக தடையின் காரணமாக ஏற்படும் மூச்சுத்திணறல் இதன் காரணங்கள். 1. அலெர்ஜி, 2. மனோதத்துவ அழுத்தத்தால் வீழ்படிச் செய்யும் மனத்தை உருக்கும். இறுக்கம். 3. பென்சிலின் வகையறாவில் கட்டுப்படுத்தப்பட்டு அடங்கும் சுவாசப் பாதையில் விஷக்கிருமியால் உண்டாகும் தொற்றுதல். ஆனால் மூச்சுக் குழாயில் திடீர் என்று இறுக்கும் உணர்ச்சி அல்லது சளிச் சுரப்பிகளால் உற்பத்தியாகப்படும் கோழையின் பெருக்கம் இவ்விரண்டும் முக்கியமான முறைகளாகும். காச வியாதியால் தாக்கப்பட்டுள்ள மூச்சுக் குழாய்களின் தடை, விஷக்கிருமிகளின் தெற்றுதலின் வளர்ச்சியை ஏற்றுக் கொள்கிறது. பிராங்கியல் ஆஸ்துமா கடுமையாகவோ அல்லது நாள்பட்டதாகவோ இருக்கலாம். பொதுவாக அது சுவாசப் பாதையின் தொற்றுதலுடன் சம்பந்தப்படுகிறது. இவ்வித நிலைக்கு ஆஸ்துமாடிக் ப்ராங்கைடிஸ் என்று பெயர். அதாவது காச வியாதியால் தாக்கப்பட்டுள்ள பிராங்கியல் குழாய்களில் மூச்சுக் கிளைகளைக் குழல்களின் வேக்காடு என்பதாகும்.

ஆஸ்துமா இரவில் அடிக்கடி தொந்தரவு செய்யும் நோயாளி விழித்துக் கொண்டு. மூச்சுவிட முடியாமல் திணறுவதைக் காணுகிறான். அவன் மிகுந்த துயரத்திற்கு உள்ளாகிறான். அவன் அதிக காற்றை அடைவதற்கான முயற்சியில் ஜன்னலைத் திறப்பதற்காக படுக்கையை விட்டு எழுந்திருப்பான் (சில சமயத்தில் இருதயமும் சம்பந்தப்படுகிறது) அதற்கு கார்டியக் ஆஸ்துமா இரத்த அழுத்தத்திலும், மற்ற இருதய கோளாறுகளிலும் காணப்படுகிறது.)

பிராங்கியல் ஆஸ்துமாவில் சுவாசம் நீடித்திருக்கும். இது சீழ் என்ற கோழை வெளிப்படும் வியாதி என்ற குழப்பத்தை உண்டாக்கலாம். நோயாளி நன்கு சமாளித்தால் நோய் தீரும். இல்லாவிடில், மார்ச்சளியாலும், கஷ்டப்பட்டு மூச்சு விடும் போது ஏற்படும் ஓசையாலும் அவதிப்படலாம். பிராங்கியல் ஆஸ்துமா நோயாளிகளுக்கு நோய்க்கான காரணங்களைக் கூறும் சாஸ்திர சம்பந்தமான கல்வி தேவை. (உம்) சில ஆகாரப்பொருள்கள் அல்லது மருந்துகள் ஆல்கஹால், வெறுப்புண்டாகும். மணம், விரும்பமற்ற காட்சி உணர்ச்சி, மிக்க கவிழ்ச்சி முதலியவற்றால் ஏற்படும் அலர்ஜி, பிராங்கியல் ஆஸ்துமாவை விளைவிக்கலாம். நன்கு ஆராய்தலும் அவசியமாகலாம். குடல் ஒட்டுண்ணிகள், சர்ம கோளாறுகள், செகண்டரி ஈஸினோ பிலியாவை உண்டுபடுத்தலாம். தேக ஆரோக்கியம் களைப்பை விலக்குதல், மலச்சிக்கல் இல்லாமை, குறைந்த உணவு இவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம், இந்த வியாதியை வராமல் தடுக்கலாம். இரவு உணவு மிகவும் இலேசாக இருக்க வேண்டும். சாயங்காலத்தில், சீக்கிரத்தில் உண்பது மிகவும் சிறந்தது.

நோயாளிக்கு ஏற்ற உணவைத்தான் கொடுக்க வேண்டும். நோயின் காரணத்திற்குத் தக்கபடி சிகிச்சை அளிக்கப்படுகிறது. நோயைத் தடுக்க கவனம் அவசியமாகும். மூச்சு வாங்கி விடுகிற பயிற்சிகள் குழந்தைகளுக்கும் வயது வந்தவர்களுக்கும் மிகவும் சிறந்தது. இழுப்புடன் வரும் பிராங்கியல் ஆஸ்துமாவை அடக்கவும். தடுக்கவும். டெஸ்மா மாத்திரைகள் மிகவும் நல்லது.

இழுப்புகளுக்கு இடையே மெடிடாப் பயனளிக்கும். மார்பின் வெளிப்பூச்சுக்கு செலால் முக்கியமான மருந்தாகும். ஆரோக்கியம் அபிவிருத்தியடைய ஆல்போஸாங்கை கொடுக்கலாம்.

**சிசுக்களுக்கும் குழந்தைகளுக்கும் சிகிச்சை (Treatment of babies and children)**

கர்ப்பிணிகளுக்குச் சொல்லி கொடுப்பதில் சிகிச்சை ஆரம்பமாகிறது. கர்ப்பிணிகள் நல்ல பழக்கங்களைப் பின்பற்ற வேண்டும். அவர்களுக்கு சரியான உணவும், தேகாப்பியாசமும் அவசியமாகும். உணவு சரியாக ஜீரணமாவதில் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். மனக்கவலை, அதிக சரீர உழைப்பு உணர்ச்சி வசப்படுதல் ஆகியவை கூடாது. கருத்தரித்த ஆரம்பகாலத்தில் எந்த மருந்தும் கூடாது. அது பிறக்கும் குழந்தையை அங்கவிகாரமுடையதாக்கும், கால்சியம், இரும்பு, போலிக் அமிலம் அடங்கிய டானிக் மருந்துகள் கர்ப்பச் சிசு விருத்தியடைவதற்கு அவசியமாகலாம். ஆல்போஸாங் ஒரு விரும்பத்தகுந்த டானிக் ஆதாலால் கடைசி நான்கு மாதங்களில் மற்ற டானிக்குகளுடன் அதையும் கொடுக்க வேண்டும். குழந்தையுன் தேகநிலை அடியிற்கண்ட விஷயங்களை அதாவது பெற்றோர்களின் தேகநிலை. பிரசவ காலத்தில் கொடுக்கப்படும் டானிக் மருந்துகள் மற்றும் தொற்றுதல்கள் காரணமாக சிகிச்சைக்கு உபயோகப்படுத்தப்பட்ட மருந்துகள் இவற்றைப் பொறுத்திருக்கிறது. காலத்திற்கு முந்தி பிறந்த குழந்தை விஷயத்தில் தனிப்பட்ட கவனம் தேவை. ஏனெனில் தேக உறுப்புகள் போதுமான அளவு விருத்தியடைவதில்லை. மேலும் உணவும் மருந்தும் இவற்றின் கழிவுகளும் சிக்கல்களை உண்டாக்கலாம். இவற்றின் எடைக்குத் தக்கவாறும், இதற்கும் மேலாக குறைந்த அளவிலும் மருந்தைக் கொடுக்க வேண்டும் குழந்தைகள் வெகு சீக்கிரத்தில் தொற்றுதல்களால் பாதிக்கப்படுகின்றன. ஆனால் அவைகள் விளக்கெண்ணெய் போன்ற பேதி மருந்துகளைச் சகித்துக் கொள்ளக் கூடும் குழந்தைகள் சரிவர மலம் கழித்தலை கவனித்தலும் அவைகளுக்கு சுலபமாக ஜீரணமாகக் கூடிய பொருள்களை போஷித்தலும் இரப்பை சம்பந்தமான வியாதிகளையும் மற்ற தொற்றுதல்களையும் தடுத்தலும் தாயின் கடமையாகும். வளரும் பருவத்தில் தொற்றுதல்கள் ஏற்பட்டால் வளர்ச்சி தாமதமாகவோ அல்லது குன்றியதாவோ ஏற்படும். தொற்றுநோய் ஏற்படாமல் இருக்க உடனடியாக கவனிக்க வேண்டும். (உ.ம்) பெரிய அம்மை, மணல்வாரி அம்மை, தட்டம்மை, தண்டுவடத்தில் ஏற்படும் திடீர்வகை வேக்காடு, குத்திருமல் முதலானவற்றை அம்மை குத்திக் கொள்வதன் மூலம் தடுக்கலாம். கர்ப்பிணி ஸ்திரீகளை போலவே வளரும் குழந்தைகளுக்கும், சத்துள்ள சுலபமான ஜீரணிக்கக் கூடிய உணவும், வைட்டமினும் தேவை எலும்புகளின் வளர்ச்சிக்கு ஆல்போஸாங் சிபாரிசு செய்யப்படுகிறது. மலச்சிக்கலை அஜீரணத்தை சால்பாஸாலும் சரிப்படுத்திக் கொள்ளலாம். பயோஸால் வயிற்று உப்பிசம், வலி ஆகியவைகள நீங்கும் பொருள் ஆதலால், குழந்தைகளுக்கு ஏப்பம் விடுதலைத் தடுக்க சிபாரிசு செய்யப்படுகிறது. குழந்தைகளுக்கு பசியின்மை ஏற்பட்டால், ஹைர்பிட்டார்ஸைக் கொடுக்க வேண்டும். மலேரியாவின் போது ஏற்படும் கல்லீரலின் பெருக்கத்திற்கு கைனட்டோமைன் ஒரு மாத்திரையும் கொடுத்து சிகிச்சை செய்யலாம்.



**பல் முளைத்தல் (Dentition)**

பல் முளைத்தல் பொதுவாக 6வது மாதத்தில் உண்டாகிறது. பலஹீனமான குழந்தைகளுக்கு அது ஒரு தொந்தவரான காலம். அவர்கள் அடிக்கடி வாந்தியாலும், வயிற்றுப் போக்காலும் அவஸ்த்தைப் படுவார்கள் எதிர்பார்த்த காலத்தில் பல் முளைக்கவில்லை எனில் குழந்தைகளுக்கு ஆல்போஸாங் கொடுக்க வேண்டும். வளரும் குழந்தைகளுக்கு அது தான் ஒரு உயர்வான பொருள். குறைவாகப் போஷிக்கப்பட்ட குழந்தைகள் பொதுவாக பல் முளைத்தலில் குறைகளால் கஷ்ட்டப்படுகிறார்கள். தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் பல் விஷயத்தில் தனி கவனம் செலுத்தி பாதுகாக்க வேண்டும். பல் முளைக்கும் காலத்தில் சால்பாஸ் ஒரு சிறந்த மருந்து குழந்தை உபத்திரவம் செய்தால் வைட்டாஸானைக் கொடுக்கலாம்.

**இரத்த அழுத்தம் :** இரத்த அழுத்தம் பொதுவாக வயதான காலத்தில் ஏற்படுகிறது. அது அவசியமான இரத்த அழுத்தம் எனப்படும். இரத்த அழுத்தத்தின் ஏற்றம் கருத்தரித்தலின் போது விஷக்கிருமிகளின் விஷப்பொருள்கள் இரத்தத்துடன் சேரும்போது ஏற்படும் கோளாறுகளின் காரணமாக உண்டாகலாம்.

அதிக இரத்த அழுத்தம் பொதுவாக தலைவலி, மயக்கம், மூச்சுத்திணறல் சில சமயங்களில் எரிச்சலடைதல் தூக்கமின்மை, இருதயத்துடிப்பு அதிகரித்தல் ஆகியவற்றை உண்டாக்குகிறது. இருதயம் இயங்காமை, சிறுநீரகங்கள் இயங்காமை, பாரிசவாயு, சில சமயங்களில் கண் பார்வை இழுப்பு முதலான சிக்கல்களை உண்டாக்கும். இப்பேர்ப்பட்ட கேஸ்களுக்கு மருத்துவமனையில் தான் சிறந்த சிகிச்சை பெற வேண்டும்.

சிறுவயதில் சிறுநீரகக் கோளாறுகளுடன் சேர்ந்து அதிக இரத்தம் அழுத்தம் ஏற்படலாம். இது மிகவும் ஆபத்தானது. அதிக இரத்த அழுத்தம் மனோதத்துவ காரணங்களாலும் ஏற்படலாம். இப்பேர்பட்ட கேஸ்களுக்கு இரத்த அழுத்தத்திற்கு மாறான பொருள்களில் ஒரு பொழுதும் சிகிச்சை செய்யக்கூடாது.

வைட்டஸானை வேளைக்கு 1 மாத்திரை வீதம் கவலையும், தொந்தரவையும் தணிக்க தினம் 3 வேளை கொடுப்பது அவசியமாகும். அதிக அல்லது தாழ்ந்த இரத்த அழுத்தத்திற்கு ஆல்போஸாங்கை டானிக்காக கொடுக்கலாம். மலச்சிக்கலை ஸ்போலாக்ஸ் கொடுத்து நிவர்த்திக்கலாம்.

**முக்கியமான இரத்த அழுத்தத்திற்கு சிகிச்சை (Treatment of essential Hypertension)**

உணவுப் பழக்கங்களைச் சரிபடுத்துவதில் கவனம். இரவில் இலேசான உணவு புகைப்பிடித்தலையும், ஆல்கஹாலையும். விலக்கல், காபி அல்லது டீயின் அளவைக் குறைப்பது ஆகியவை மருந்துச் சிகிச்சையுடன்

முக்கியமாகும். மலச்சிக்கலை நிவர்த்தி செய்வதாலும் சிறுநீர்வர்த்தினியாக இயங்குவதாலும் பழரசம் மற்றொரு முக்கியமான பொருள் ஆகும். மூத்திரவர்த்தினிகள் பொதுவாக அதிகப்பட்ட உயிரணுக்களால் உண்டான திரவத்தின் அளவைக் குறைத்து இரத்த அழுத்தத்தை கட்டுப் படுத்தப்படுகிறது. ஆதாலால் பழரசம் போஷணைப் பொருளாகவும், மூத்திரவர்த்தினியாகவும் இய ்குகிறது.

**இரத்தப்பெருக்கு (Bleeding) :**

இரத்தப்பெருக்கு மூக்கினுள்ளிருந்து இரத்தம் கொட்டுதல் ரூபத்திலோ அல்லது மூல உபத்திரவத்திலிருந்தோ அல்லது கருப்பையிலிருந்தோ உண்டாக்கலாம். கடுமையான இரத்தப் பெருக்கு பொதுவாக அதிர்ச்சியின் காரணமாக உண்டாகிறது. இவ்விதக் கேஸ்களுக்கு வைட்டாஸான் ஒரு நல்ல மருந்து, ஏனெனில் அது ஒரு சாந்தப் பொருளாக இயங்கி அதிர்ச்சியைத் தடுக்கிறது. சினியம்கோ, இதற்கு முதன்மையான மருந்தாக விளங்குகிறது.

**காது தொற்று நோய் (Ear infection) :**

கிருமிநாசினி அடங்கிய காதுக்கு ஊற்றும் மருந்து அல்லது பவுடரைக்கொண்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது. தூவும் பவுடராகிய ஹிலிங் டஸ்ட் மிகவும் பயன்படுவதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

**நடுக்காது தொற்று நோய் (Middle Ear Infection)**

